எபேசியர்

தீகிக்கு ஒநேசிமுவின் துணையுடன் ஆசியாவுக்குச் சென்றபொழுது, எபேசியருக்கு எழுதப்பட்ட நிருபத்தையும் கொண்டு சென்றான். கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்ப நிலைகளைக் கடந்து, தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வின் மிகவும் முதிர்ந்த நிலையை அடைந்த விசுவாசிகளுக்குப் பவுல் அளிக்கும் போதனையை எபேசியர் நிருபம் காட்டுகிறது.

தனிச்சிறப்பான அமைப்பு

எபேசுவின் பகுதியிலுள்ள எல்லாச் சபைகளுக்கும் சுற்றுக்கு விடும்படியாக பவுலினால் ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்டது. எபேசியர் நிருபம் என்பதை பல உண்மைகள் சுட்டிக்காட்டுகின்றன. சபைகளுக்கிடையே நிருபங்களை சுற்றுக்கு அனுப்பும் பழக்கம் சாதாரணமானதே. கொரிந்தியருக்கு எழுதின தனது முந்தைய நிருபத்தில், பவுல் கொரிந்தியருக்கு மட்டுமல்லாது, "அகாயா நாடெங்குமுள்ள எல்லாப் பரிசுத்தவான்களுக்கும்" எழுதினார் (2கொரிந்தியர் 1:1).

பவுல் எபேசுவில் மூன்று வருடங்களைக் கழித்தார். இது முக்கியமான வியாபார மைய ஸ்தலமும், மகாதேவியாகிய "தியானாளின்" புகழ்வாய்ந்த ஆலயம் அமைந்த இடமுமாகும் (அப்போஸ்தலர் 19:8-10; 35; 20:31). பவுல் இங்கே நீண்ட காலம் தங்கியிருந்ததின் விளைவாக, சுற்றிலுமிருந்த பட்டணங்களில் அநேக சபைகள் ஆரம்பிக்கப்பட்டன. பவுல் காவலில் இருந்த சமயத்தில், எபேசியருக்கு நிருபம் எழுதினார். சுற்றிலுமுள்ள விசுவாசிகளின் தேவைகளையும் பூர்த்தி செய்யும்படி தனது நிருபத்தில் அவர் விஷயங்களைச் சேர்த்திருக்கிறார்.

அவர்கள் அனைவராலும் இந்த நிருபம் வாசிக்கப்படும் என்பதை அவர் அறிந்திருந்தார். சபைகள் துண்டுபட்டவைகளோ, தனிப்பட்டக் குழுக்களோ அல்ல, இவை உயிருள்ள ஓர் உடலின் அதாவது, கிறிஸ்துவின் உலகளாவிய சரீரத்தின் (சபை) அவயவங்களே என்ற உண்மையை இந்த நிருபம் வலியுறுத்துகிறது. சபையின் உருவேற்பம் உலகத்தோற்றத்துக்கு முன்பே திட்டமிடப்பட்டது.

எபேசியர் நிருபத்தின் பழைய சுவடிகள் சிலவற்றில் "எபேசுவிலே" என்ற வார்த்தை ஆரம்பத்தில் இடம் பெறவில்லை. இருப்பினும், இன்று நம்மிடமிருக்கும் நகலில் இந்த வார்த்தை உள்ளது. ஆதலால், இந்த நகல் ஒருவேளை எபேசு சபையில் பாதுகாப்பாக இருந்திருக்கலாம். ஏன் இந்த நிருபத்தில் எபேசு பட்டணத்தின் பெயர் மட்டும் உள்ளது என்பதையும், பவுலின் வழக்கத்தின்படி சபையிலுள்ள தனித்தாள்களுக்குத் தனிப்பட்ட வாழ்த்துக்களை ஏன் கூறவில்லை என்பதையும் இந்த உண்மைகள் விளக்குகின்றன.

பொருளடக்கமும், அதன் சுருக்கமும்

எபேசியர் நிருபம் ரோமர் நிருபத்திற்கு ஒத்தது, எப்படியெனில், குறிப்பிட்ட சபை பிரச்சினைகளுக்கு இதில் பதில் அளிக்காமல், குறிப்பிட்ட சில உபதேச சத்தியங்களைப் பவுல் வெளிப்படுத்துகிறார். இருப்பினும் எபேசியரின் மையப்பொருள் உலகளாவிய சபை என்பதே, ரோமர் நிருபத்தின் போதனை புதிய கிறிஸ்தவர்களுக்கு மிகவும் ஏற்றது, எபேசியர் நிருபம் தங்கள் விசுவாசத்தில் மிகவும் முதிர்ச்சியடைந்தவர்களுக்கு சாலப் பொருந்தும், எபேசியரில் பவுல்:தேசங்களின் நடுவிலே பாழாய்ப்போகப் பண்ணுவேன் (எசே 29:12).

அ. சபை தோன்றினதை விளக்குகிறார்.

எபேசியர்

ஆ. சபை அங்கத்தினர்களின் இடைக்கால மற்றும் முடிவான இருப்பிடத்தைக் குறிப்பிடுகிறார்.

இ. சபைக்கு அருளப்பட்டக் கிறிஸ்துவின் வரங்களை வரிசைப்படுத்துகிறார்.

ஈ. சபை அங்கத்தினர்களுக்கு அவசியமான நடத்தையை விவரிக்கிறார்.

உ. அந்நியோந்நியமாயிருக்கும்படி அவர்களை அழைக்கிறார்.

ஊ. சபை ஈடுபட்டிருக்கும் ஆவிக்குரிய யுத்தத்தையும், அதில் வெற்றியைக் கொண்டு வரும் நடக்கையையும் பற்றி விவரிக்கிறார்.

சபை அங்கத்தினர்கள் "உலகத் தோற்றத்துக்கு முன்னே" கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொள்ளப்பட்டார்கள் (1:4). தற்போதைய அவர்களுடைய நிலவரம், "கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங்களிலே" உட்காருவதே (2:6). அவர்களுடைய இலக்கு, "தலையாகிய கிறிஸ்துவுக்குள் வளருவதே" (4:15). இதே நோக்கத்திற்காக, அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் ஆகியோரை சபைக்கு ஈவாகக் கிறிஸ்து ஏற்படுத்தியிருக்கிறார் (4:11-13). இவையெல்லாவற்றின் மூலம் தமது கிருபையின் ஐசுவரியத்தை சபைக்குக் காண்பித்து, அவருக்குச் சொந்தமானவர்களால் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சி உண்டாக வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பமாயிருக்கிறது (1:6, 12, 14:2,7).

கிறிஸ்துவுக்குள் தங்களுக்கிருக்கும் நிலவரத்துக்கு ஏற்ப விசுவாசிகள் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டுமெனப் பவுல் விவரிக்கிறார். ஒவ்வொரு நபருக்கும் (4:1-5:21), மனைவிகள் புருஷருக்கும் (5:22,23), பிள்ளைகள் பெற்றோருக்கும் (6:1-4), மற்றும் அடிமைகள் எஜமான்களுக்கும் (6:5-9) அவசியமானப் புத்திமதிகளை எழுதுகிறார். "ஒரே சரீரமும், ஒரே ஆவியும், ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே தேவனும், எல்லார் மேலும், எல்லாரோடும், எல்லாருக்குள்ளும் இருக்கிற ஒரே பிதாவும்" (4:3-6). இருக்கிறபடியால் சபை அங்கத்தினர்கள் அனைவருக்குள்ளும் அந்நியோந்நியம் அவசியமிருக்கவேண்டுமென்று அவர் கூறுகிறார். சபையின் போராட்டத்தின் உண்மையான தன்மையையும், அதில் ஜெயமெடுப்பதற்கான இரகசியத்தையும் வெளிப்படுத்தி இந்த நிருபத்தை அவர் முடிக்கிறார் (6:10-18).

"விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்புண்டாகும்" என ரோமரிலும் (3:21,22,28,30; 4:3), கலாத்தியரிலும் (3:11; 5:4-6) வலியுறுத்திய உபதேசத்தை, எபேசியரிலும் அவர் குறிப்பிடுகிறார். "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு- ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (2:8,9).

எபேசியர்- மகிமையுள்ள சபை

1. தேவனுடைய திட்டத்தில் சபை (1:1-14).
2. சபையும், தேவனுடைய வல்லமையும் (1:15-2:10).
3. சபை தேவனுடைய வாசஸ்தலம் (2:11-22).
4. சபை தேவனுடைய வெளிப்படுத்தல் (3:1-21).
5. சபையின் ஈவுகள் (4:1-16).
6. சபையின் நிலவரங்கள் (4:17-5:21).

எபேசியர்

7. சபையின் நடத்தை *(5:22-6:9).*

8. சபையின் போராட்டம் *(6:10-24).*

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. உலகத் தோற்றத்துக்கு முன்னே தேவனால் திட்டமிடப்பட்ட உலகளாவிய ஐக்கியமுள்ள சபையே (யூதரும், புறஜாதியாரும்) எபேசியரின் மையப்பொருளாகும்.

2. எபேசியரில், தமது தயவுள்ள சித்தத்தின் அநாதி இரகசியத்தைத் தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்: "பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துக்குள்ளே கூட்டப்படவேண்டும்" *(1:9).* மேலும், கிறிஸ்துவின் இரகசியத்தையும் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்: "புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்கள்" *(3:4-6).* இந்நிருபத்தை வாசிக்கிறவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து கொள்ளும்படி பவுல் அறைகூவல் விடுக்கிறார் *(4:1).*

3. எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் விவரிக்கப்பட்டுள்ள மகிமையுள்ள சபையின் சிறப்பு அம்சங்கள் கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

எபேசியர்

மகிமையுள்ள சபை

எபேசியர் குறிப்பு	சிறப்பு அம்சம்	எபேசியரில் கூறப்பட்ட விளக்கங்கள்
1:4	சபையின் தோற்றம்	உலகத் தோற்றத்துக்கு முன்னே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டது.
1:19,20	இதன் வல்லமை	கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பிய அதே பரிசுத்த ஆவி
1:14;4:30	இதன் முத்திரை	பரிசுத்த ஆவியானவர்.
1:22	இதன் தலை	கிறிஸ்து
2:20	இதன் அஸ்திபாரம்	மூலைக்கல்லாகிய கிறிஸ்துவோடு கூட அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும்.
2:10; 5:2,8,15	இதன் ஜீவன்	நற்கிரியைகள், அன்பு, வெளிச்சம், ஞானம்.
6:12	இதன் சத்துரு	பூமியிலும், வானமண்டலத்திலுமுள்ள பொல்லாத ஆவியின் சேனைகள்.
6:13-18	இதன் சர்வாயுதம்	தேவனுடைய சர்வாயுதம்: சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், இரட்சண்யம், தேவவசனம், ஜெபம்.

கிறிஸ்துவிற்குள் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம் (எபேசியர் 1:3-14)

முன்னுரை

அ. பவுலும் அவருடைய உடன் ஊழியர்களும், அவர்களுடைய மிஷினரிப் பிரயாணங்களில் பல சபைகளை ஸ்தாபித்தனர். எபேசியருக்கு எழுதின நிருபம் இந்த சபைகளுக்கு பிரதிகள் எழுதப்பட்டு, அனுப்பப்பட்டிருக்க வேண்டும். கிறிஸ்துவின் மூலமாக புறஜாதியாரிலுள்ள விசுவாசிகளும் தேவனுடைய சித்தத்திலும் நோக்கத்திலும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்பதே இந்த நிருபத்தின் முக்கிய நோக்கம். கிறிஸ்துவில் விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள சகல ஆசீர் வாதங்களுக்காக பவுல் தேவனைத் துதித்து தமது நிருபத்தை ஆரம்பித்து வைக்கிறார்.

1. கிறிஸ்துவின் மூலமாக சகல ஆசீர்வாதத்தினாலும் தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் (1:3-8).

அ. 3-ஆவது வசனம். "உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்". தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிறபடியால் நாம் அவரைத் துதிக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஆவிக்குரிய சகல ஆசீர்வாதமும் உன்னதங்களிலிருந்து நமக்கு வந்திருக்கிறது.

ஆ. 4-ஆவது வசனம். "அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே". இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொண்டவர்கள்

அனைவருக்கும் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தையும் கொடுக்கவேண்டும் என்று தேவன் தெரிந்துகொண்டார். இந்த உலகத்தை அவர் சிருஷ்டிப்பதற்கு முன்பாகவே, இந்த சுயாதீன தீர்மானத்தை அவர் தெரிந்தெடுத்தார். தாம் இவ்வாறு செய்ய வேண்டுமென விரும்பியபடியினால் அவர் தாம் தெரிந்து கொண்டவர்களை ஆசீர்வதித்திருக்கிறார். சுயாதீனமாகத் தெரிந்துகொள்ளும் பொறுப்பை மனுக்குலத்திற்கு தேவன் கொடுப்பாரென்றால், இதன் விளைவு என்னவாய் இருக்கும் என்பது தேவனுக்குத் தெரியும். பிசாசின் சோதனைகளிலே மனுஷன் வீழ்ந்து போவான் என்பதைத் தேவன் அறிந்திருந்தார். தமது பிரசன்னத்திலிருந்து மனுஷனை வெளியேற்றவேண்டுமென்பதும் தேவனுக்குத் தெரியும். அதே வேளையில் மனுஷனுக்காக இரட்சிப்பின் வழியை உண்டுபண்ண வேண்டும் என்பதுவும் தேவனுக்குத் தெரியும்.

இ. 4-7 ஆகிய வசனங்கள். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்கு கொடுக்கவேண்டுமென தேவன் தெரிந்தெடுத்துள்ள அவருடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாவன:-

1. தமது பார்வையில் பரிசுத்தமும் கறைதிரையற்றதுமான சிலாக்கியம். கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக, ஒருநபர் பாவியாகவும், இதன்விளைவாக ஆவிக்குரிய மரணம் நியமிக்கப்பட்டுள்ளபோதிலும், தேவன் அந்த நபரைப் பரிசுத்தவானாகவும் கறைதிரையற்றவனாகவும் காண்கிறார்.

2. தமக்குச் சுவிகாரப்புத்திராகும்படி முன்குறித்திருக்கிறார். ஒரு நபர் வேறொரு குடும்பத்தில் பிறந்திருந்தும், தேவன் அந்த நபரைத் தமது குடும்பத்தின் அங்கத்தினராக அவனை சுவிகாரப்புத்திரர் ஆக்குகிறார். தேவனுடைய குடும்பத்தில் பிறப்பதனால் வரும் சகல ஆசீர்வாதமும் சுவிகாரப்புத்திரருக்கும் உண்டு.

கிறிஸ்துவிற்குள் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம் (எபேசியர் 1:3-14)

3. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகப் பாவ மன்னிப்பாகிய மீட்பு - பாவத்திற்கு அடிமையாக இருப்பவர்களுக்கு, பாவமன்னிப்பிற்கான கிரயம் செலுத்தப்பட்டு, அவர்கள் தங்கள் பாவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப் படுகிறார்கள். பாவமன்னிப்பிற்கு தேவன் நியமித்துள்ள கிரயம் கிறிஸ்துவின் இரத்தமே ஆகும்.

4. பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறுதல். தங்களுடைய பாவங்களினால் ஜனங்கள் தேவனை விட்டு பிரிந்து விட்டார்கள். தேவனுடைய நீதிநெறிப்பிரமாணங்களிலிருந்து விலகிபோடிவிட்டார்கள். இவர்களுடைய பாவங்களைத் தேவன் மன்னிக்கிறார். இவர்களுடைய மீறுதல்களைத் தேவன் இனிமேல் நினையாதிருக்கிறார்.

ஈ. கிறிஸ்துவை அறியும் அறிவிலும் கிருபையிலும் கிறிஸ்தவர்கள் வளருகிறார்கள். இயேசுகிறிஸ்துவை தங்களுடைய கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும் அந்த வேளையில்தானே, அவர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை விசுவாசத்தினால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். மனுஷருடைய சொந்த முயற்சிகள், கிரியைகளினாலோ, அல்லது மார்க்கம் சடங்காச்சாரங் களினாலோ, பெற்றுக்கொள்ளவும் கூடாது, கிரயத்திற்கு வாங்கவும் முடியாது. (ரோமர் 1:17; எபேசியர் 2:8-9). இவ்வாறாக, ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவிற்குள் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்.

2. தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார் (1:9-13).

அ. 10-ஆவது வசனம் "இரகசியம்". ஒருகாலத்தில் மறைபொருளாக இருந்து இப்போது அறியப்படுவது இரகசியம் எனப்படும். கிறிஸ்துவை மனுக்குலத்திற்கு அனுப்பவேண்டும், மனுஷருடைய பாவங்களுக்காக அவரைப் பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். தேவன் தற்போது இந்த சித்தத்தை நமக்கு வெளிப்படுத்திருக்கிறார்.

ஆ. 9-ஆவது வசனம். "பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கட்டப்பட வேண்டும்". கிறிஸ்து ஏற்கனவே சபைக்கு தலையாய் இருக்கிறவர். இதுவே தேவனுடைய சித்தமும் திட்டமுமாகும். என்றாலும் ஒருநாளில் எல்ல சிருஷ்டிகளையும் (பரலோகத்திலிருக்கிறவைகளையும் பூலோகத்திலிருக்கிறவைகளையும்) கிறிஸ்துவுக்குள்ளே "கட்டவேண்டும்".

இ. 9-ஆவது வசனம். "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி" தமது இறுதியான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்ற சமயம் என்று ஒரு வேளையைத் தீர்மானம் பண்ணுகையில், தேவன் வரலாற்றையே மேற்கொள்வார். பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலத்தையும் கிறிஸ்வுக்குள்ளே கட்டுவார். சபை எடுத்துக் கொள்ளப்படும் சமயம் தேவனுடைய நோக்கம் நிறைவேறுதலின் ஆரம்பம் ஆகும்: "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்" (1தெசலோனிக்கேயர் 4:16). இதன் பிறகு, கிறிஸ்துவிற்குள் தேவனுடைய திட்டத்தின் பூரண நிறைவேற்றம் விரைவாக நடைபெறும்.

கிறிஸ்துவிற்குள் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம் (எபேசியர் 1:3-14)

ஈ. 12-ஆவது வசனம். "அவருடைய தீர்மானத்தின்படியே நாங்கள் முன் குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்". இரட்சிப்பின் சுவிசேஷத்தை வாசிப்பவர்களை கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் வைத்திட வேண்டுமென்பது "உலகத் தோற்றத்திற்கு முன்பே" தேவனுடைய திட்டமாகும். விசுவாசிகளும், பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளும், கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி முன்குறிக்கப்பட்டுள்ளனர். இந்த சிலாக்கியத்தில் சேர்க்கப்படுபவர்கள். 1. உயிரோடிருக்கும், மரித்துவிட்ட, எல்லா விசுவாசிகள், பழைய ஏற்பாட்டுக்கால யூதர்கள், "மகா உபத்திரவத்தின்" காலத்திலே இரட்சிக்கப்படும் யூதர்களும், புறஜாதியாரும். 2. நல்ல தூதர்கள். 3. வான மண்டலங்களுடன் அதிலுள்ளவை அனைத்தும் அதாவது, பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளும், தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை "சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார்" (எபிரெயர் 1:2). "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாக தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." (பிலிப்பியர் 2:10,11).

உ. 11-ஆவது வசனம். "அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு". கிறிஸ்துவின் மூலமாகத் தேவனுடைய நித்திய சித்தம் நிறைவேறும்போது, எல்லா மனுக்குலத்திற்கு முன்பாகவும், பரலோகத்திலுள்ள துரைத்தனங்கள், சக்திகளுக்கு முன்பாகவும், தேவன் மகிமைப்படுத்தப்படுவார். இதற்காகத்தான், மனுக்குலம் முழுமைக்கும் தம்மை வெளிப்படுத்துவதற்காகத் தேவன் ஆபிரகாமையும் யூதஜனத்தாரையும் தேர்ந்தெடுத்தார். இதற்காகத்தானே இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்போருக்கு இரட்சிப்பையும் முன்குறித்தார். இதற்காகத் தானே பரலோகமும் பூலோகமும் புதுப்பிக்கப்படபோகின்றன. இதற்காகத்தானே சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்படப் போகிறது. (ரோமர் 8:20; 2பேதுரு 3:10).

3. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் நாம் அவருக்குள் முத்திரை போடப்பட்டோம். (1:13).

அ. 13-ஆவது வசனம். "விசுவாசிகளானபோது". இந்த வாக்கியமானது, இயேசு கிறிஸ்துவில் ஏற்கனவே விசுவாசம் வைத்துள்ள எபேசியர்களைப் பார்த்து பவுல் கேட்டதற்கு ஒத்திருக்கிறது. "நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?" (அப்போஸ்தலர் 19:2). பவுல் இவர்களிடம் உண்மையிலேயே கேட்டது என்னவென்றால் "இயேசு கிறிஸ்துவில் நீங்கள் விசுவாசம் வைத்தபிறகு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டீர்களா? என்பதேயாகும். 'அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை (இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தபிறகு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளலாம் என்பதை) நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்" இதே பொருளில்தான் எபேசியர் 1:13-ஆவது வசனத்தில் பவுல் இவ்வாறு கூறுகிறார்.

கிறிஸ்துவிற்குள் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம் (எபேசியர் 1:3-14)

"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளான போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள் (பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றீர்கள்).

ஆ. 13-ஆவது வசனம். "அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்". "முத்திரை போடப்படுதல்" என்பது, ஒருபொருள் ஒருவருக்கு உரிமையானது என்பதை உறுதிபண்ணுவதற்கு அந்தப்பொருள் மீது குத்தப்படும் முத்திரையைக் குறிப்பிடும். புதிய ஏற்பாட்டுக்காலங்களில், பொருட்களைப்பத்திரமாகப்பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டு, இவ்வாறு முத்திரையிடும் வழக்கம் இருந்தது. சீன தேசத்தில் இன்னும் முத்திரையிடும் வழக்கம் உண்டு. ஐரோப்பிய நாடுகளில் கூட ஒரு சில குடும்பங்களில் முத்திரையிட்டு தங்கள் பொருட்களுக்கு உரிமைகொண்டாடி பாதுகாத்து வருகிறார்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களுக்கும் புற ஜாதியாருக்கும் பிதாவின் அடையாளம் முத்திரையாகப் போடப்படும் என்று வாசிக்கிறோம். இவர்கள் கர்த்தருக்கு உரியவர்கள், மகா உபத்திரவத்தின்காலத்தில்பாதுகாக்கப்படவேண்டியவர்கள் என்பதை உறுதி பண்ணுவதற்காக இவர்களுக்கு முத்திரை போடப்படும். (வெளிப்படுத்தின விசேஷம் 7:3,4; எசேக்கியேல் 9:1-11). இயேசுவில் விசுவாசம் வைத்தபிறகு, சீஷர்கள்பரிசுத்தஆவியில்அபிஷேகிக்கப்படுவார்கள். அவர்கள் தேவனுக்கு உரியவர்கள் என்பதைக் காண்பிக்கும். தேவனுடைய முத்திரையே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமாகும்.

இ. 13-ஆவது வசனம். "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவி". பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்னும் வாக்குத்தத்தமானது இயேசுவில் விசுவாசம் வைத்தவர்களுக்கு ஒரு நன்மையான தெய்வீக நிச்சயமாய் இருந்தது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் மூலமாகவும் (யோவேல் 2:28,29; ஏசாயா 32:15;44:3), இயேசுகிறிஸ்து மூலமாகவும் (லூக்கா 24:49; அப்போஸ்தலர் 1:4) தேவன் இந்த அச்சாரத்தை உண்டு பண்ணினார்.

அப்போஸ்தலர் பேதுருவும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பற்றி கூறும்போது, இயேசுவில் விசுவாசம் வைத்திருப்போருக்கு தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமே ஆவியானவரின் அபிஷேகம் ஆகும் என்கிறார். (அப்போஸ்தலர் 2:33,39). ஆதிகால சபையில், இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்த பிறகு, எல்லா விசுவாசிகளுக்குமே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமானது, ஓர் அன்றாட அனுபவமாக இருந்தது.

ஈ. 14-ஆவது வசனம். "ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்". "அச்சாரம்" என்பது ஒரு வியாபாரச் சொல் ஆகும். வியாபார உலகில், ஒரு பொருளை வாங்கும்போதும், விற்கும்போதும், அந்தப் பொருளின் முழு கிரயமும் செலுத்தப்படும் என்பதை உறுதிபண்ணுவதற்காகக் கொடுக்கப்படும் முன் பணமே, அச்சாரம் எனப்படும். இயேசு கிறிஸ்துவில் நாம் இனிமேல் சுதந்தரிக்கப்போகின்ற காரியங்களுக்கு அச்சாரமாக தேவன் நமக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் கொடுத்திருக்கிறார்.நமது சரீரம் மறுரூபமடைந்து, நாம்நித்தியஜீவனைப்பெற்றுக்கொள்ளப்போவதே,நாம் சுதந்தரிக்கப்போகும் வாக்குத்தத்தம் ஆகும். இதே கருத்தையே அப்போஸ்தலர் பவுல் ரோமர் 8:23-இல் கூறியுள்ளார்.

கிறிஸ்துவிற்குள் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம் (எபேசியர் 1:3-14)

"ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்".

எ. 14-ஆவது வசனம். "அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் (மீட்கப்படும் வரைக்கும்)" மீட்கப்படும் நாளில் மீட்கப்படுவார்கள். இயேசுவின் வருகையின்போது கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் உயிர்த்தெழுந்து மறுரூபமடைவார்கள். அவ்வேளையில் இயேசு அவர்களை நடுவானில் சந்திப்பார். 14-ஆவது வசனத்தில் "மீட்கப்படுவார்கள்" என்பது, இயேசுவின் வருகையின் போது அந்த நாளில் மீட்கப்படுவார்கள் என்பதைக் குறிப்பிடும். (1தெசலோனிக்கேயர் 4:16-17; 1கொரிந்தியர் 15:51,52). மீட்கப்பட்டவர்கள் அவருக்குச் சொந்தமானவர்கள் ஆகிறார்கள். இதை அவருக்குச் சொந்தமானவர்கள் மீட்கப்படுவார்கள் எனவும் சொல்லலாம். "அவருக்கு (தேவனுக்கு) சொந்தமானவர்கள்" என்னும் கருத்துக்கு பேதுரு இவ்வாறு விளக்கம் கூறுகிறார். "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமானஒளியினிடத்திற்குவரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமானஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேதுரு 2:9). பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாவதுநிருபத்தில்"நீங்கள்உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே" (1கொரிந்தியர் 6:19,20 என தேவனுக்குச் சொந்தமானவர்களைபற்றிக் கூறுகிறார்.

மேலும் பவுல் எபேசு சபையிலுள்ள மூப்பர்களுக்கு ஆலோசனை கூறும்போது, "தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு" (அப்போஸ்தலர் 20:28) என்று விசுவாசிகள் அவருக்கு சொந்தமான காரியத்தைப் பற்றி எழுதுகிறார்.

முடிவுரை

அ. தேவன் நமது துதிகளுக்குப் பாத்திரர். நாம் இயேசுகிறிஸ்துவில் இருப்பவர்கள். ஆகையால் தேவன் நம்மை சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதித் திருக்கிறார்.

1. தேவன் நம்மைப் பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். தமது பார்வையில் கரைதிரை அற்றர்களாக ஆக்கியிருக்கிறார்.

2. தேவன் நம்மைத் தம்முடைய சுவீகார புத்திரர்களாக அங்கீகரித்திருக்கிறார்.

3. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே தேவன் நம்மை மீட்டிருக்கிறார்.

4. தேவன் நமது பாவங்களை மன்னித்திருக்கிறார்.

ஆ. தேவன் இயேசுகிறிஸ்துவில் கொண்டிருந்த நோக்கமாகிய தமது நித்திய சித்தத்தையும் நோக்கத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். பரலோகத்திலிருக்கிறவைகளும்பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கட்டப்படவேண்டும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் நாம் அவருக்குள் முத்திரை போடப்பட்டிருக்கிறோம்.

அவருக்குச் சொந்தமானவர்களாகிய நாம் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவோம். தேவன் நம்மை உயிர்த்தெழவைத்து, நமது சரீரங்களை மறுரூபமாக்கி, நமக்கு நித்திய ஜீவனை கொடுப்பார்

கிறிஸ்துவிற்குள் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம் (எபேசியர் 1:3-14)

இவற்றுக்காக நாம் எப்போதும் தேவனைத் துதித்துக் கொண்டிருக்கவேண்டும். "அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்; அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து அவரைத் துதியுங்கள். அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள்; மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள்". *(சங்கீதம் 150:1,2).*

இ. நம் எல்லோருக்கும் இயேசுகிறிஸ்துவில் கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப்பற்றி நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் இயேசுகிறிஸ்துவே கர்த்தாதி கர்த்தராகவும் இராஜாதி இராஜாவாகவும் இருந்து ஆட்சி செய்கிறார். ஆயினும் இன்னும் ஏராளமானோர் பரிசுத்த ஆவியின் அபிஷேகமாகிய முத்திரையைப் பெற்றுக்கொள்ளவில்லை. இயேசுகிறிஸ்துவில் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைச் சுதந்தரிப்பதற்கு அச்சாரமாகக் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவரை இன்னும் பலர் பெற்றுக்கொள்ளவில்லை. உங்களுக்கு இதுவரையிலும் பரிசுத்த ஆவியால் முத்திரைபோடப்படவில்லை என்றால், முத்திரை போடுவதற்கு இதுவே ஏற்ற தருணமாகும்.

விசுவாசிகளுக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டுமென்னும் ஜெபம் (எபேசியர் 1:15-23)

முன்னுரை

அ. எபேசுவிலுள்ள விசுவாசிகளுக்காக பவுல் வேண்டுதல் பண்ணிய முதலாவது ஜெபமே இந்தப் பகுதியாகும். பவுலின் இரண்டாவது ஜெபம் 3:14-21-இல் எழுதப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் பவுலுக்கு ஒரு மேய்ப்பனுடைய இருதயமும் இருந்தது. அதே சமயத்தில் அவரிடம் ஒரு சுவிசேஷகரின் இருதயமும் இருந்தது. பவுலின் ஜெபம் சபைகளிலுள்ள விசுவாசிகளுக்காக இடைவிடாமல் ஜெபித்த ஜெபமாகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேல் அவர்கள் விசுவாசம் வைத்திருந்ததைக் கேள்விப்பட்ட சமயத்திலிருந்து பவுல் எபேசுவிலுள்ள விசுவாசிகளுக்காக ஜெபிக்கத் துவங்கினார். பவுலின் ஜெபத்தில் காணப்பட்ட முக்கியமான மூன்று அம்சங்களாவன.

1. ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைத் தேவன் விசுவாசிகளுக்குத் தர வேண்டும்.

2. தேவன் விசுவாசிகளை அழைத்ததினாலே விசுவாசிகளுக்கு நம்பிக்கை இன்னதென்று விசுவாசிகள் அறிந்துகொள்ள வேண்டும்.

3. தேவனுடைய பலத்த தத்துவத்தின் வல்லமையை விசுவாசிகள் அறிந்துகொள்ள வேண்டும். ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை விசுவாசிகளுக்குத் தேவன் தந்தருள வேண்டுமென்று பவுல் விண்ணப்பம் பண்ணுகிறார்.

1. தேவன் விசுவாசிகளுக்கு ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைத் தந்தருள வேண்டுமென ஒரு போதகர் ஜெபிக்கிறார் (1:17).

அ. ஒரு நபர் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் அந்தத் தருணத்திலேதானே பரிசுத்த ஆவியானவர் அந்த நபருக்குள் வாசம் பண்ண வருகிறார். (ரோமர் 8:9; 1கொரிந்தியர் 12:13). ஆகையினால் எபேசுவிலுள்ள விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இந்த வசனத்தில் கூறவில்லை. பரிசுத்த ஆவியானவர் எபேசுவிலுள்ள விசுவாசிகளுக்கு ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைத் தந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறார்.

ஆ. "ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவி". ஞானம் என்பது ஆவிக்குரிய காரியங்களை அறிந்திருப்பதைக் குறிப்பிடும். தெளிவு பெறுதல் என்பது மறைபொருளாக இருப்பதை வெளிப்படுத்துதல், மூடப்பட்டிருப்பதைத் திறத்தல் எனப்பொருள்படும். 19-ஆவது வசனத்தில் "வேண்டிக் கொள்ளுதல்" என்னும் சொல் இடைவிடாமல், அல்லது நிறுத்தி விடாமல் தொடர்ந்து வேண்டிக்கொண்டிருத்தல் என்று பொருள்படும். பரிசுத்த ஆவியானவர் எபேசுவிலுள்ள விசுவாசிகளுக்கு தேவனை அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைத் தந்தருள வேண்டுமென்று தொடர்ந்து வேண்டிக்கொண்டிருக்கிறார். இதன் வாயிலாக அவர்கள் ஆவிக்குரிய காரியங்களைப்பற்றிய ஞானத்தையும் தெளிவையும் பெற்றுக்கொள்வார்கள்.

விசுவாசிகளுக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டுமென்னும் ஜெபம் (எபேசியர் 1:15-23)

இ. "பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லா வற்றையும் உங்களுக்குப் போதித்து" (யோவான் 14:26) என்று இயேசு சொன்னார். "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்...... அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" (யோவான் 16:13,14).

ஈ. ஆவிக்குரிய காரியங்களை விசுவாசிகளுக்கு வெளிப்படுத்துவதற்கு பரிசுத்த ஆவியானவரே தேவனுடைய பிரதிநிதியாக இருப்பவர். அவரால் மட்டுமே தேவனைப்பற்றிய சத்தியங்களை வெளிப்படுத்த இயலும். விசுவாசிகளுடைய சிந்தையிலும் இருதயத்திலும் ஞானத்தையும் தெளிவையும் தரமுடியும். பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாவது நிருபத்தில் "நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்" (1கொரிந்தியர் 2:12).

உ. "தம்மைநீங்கள் அறிந்துகொள்வதற்கான". தேவனைப் பற்றி தனிப்பட்ட முறையில் அறிந்துகொள்வதே, ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைப் பெற்றுக்கொள்வதன் நோக்கமாகும். விசுவாசிகள் தேவனுடைய சுவிகாரபுத்திரர்கள். இந்தப் புதிய தந்தையை அறிந்த கொள்ளும் ஞானமும் தெளிவும் விசுவாசிகளுக்குத் தேவை. பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு ஞானத்தையும் தெளிவையும் அறிகிற ஆவியைத் தந்தருளி உதவிபுரிகிறார். '

"தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து" (கொலோசெயர் 1:10).

ஊ. எங்களுக்கு ஒரு நண்பர் உண்டு. சீன தேசத்திலுள்ள அனாதைக் குழந்தைகளை அமெரிக்காவிலுள்ள பெற்றோர் தந்து எடுப்பதற்கு அவர் உதவி புரிவார். இந்தப்புதிய குழந்தை, புதிய பெற்றோரையும் புதிய குடும்பத்தையும், பற்றிய அறிவில் வளர்வதற்கு எவ்வளவு காலமாகும், எவ்வளவு பிரயாசப்பட்டு கற்றுக்கொள்ள வேண்டுமென நாமே சிந்தித்துப் பார்க்கலாமே! இது போலத்தான் புதிய விசுவாசியும் தேவனிடத்தில் அவர் புதிதாகக் கண்டு கொண்ட உறவும் இருக்கும். அனாதைப் பிள்ளைகளுக்கும் தேவனுடைய சுவிகாரப்புத்திரருக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. பிதாவாகிய தேவனைப் பற்றி அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்குத் தந்தருளுகிறார்.

2. தேவன் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்று அறியும்படிக்கு அவர் நமக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று ஒரு போதகர் ஜெபம் பண்ணுகிறார் (1:18,19).

அ. "மனக்கண்கள்". மனம் என்பது உள்ளான மனுஷனைக் குறிக்கும். மனுஷனுடைய ஆவியைக் குறிக்கும். மனுஷனுடைய சிந்தை, சித்தம், உணர்வு ஆவியவற்றைக் குறிக்கும் விசுவாசிகளின் ஆவியைப் பரிசுத்த ஆவியானவர் பிரகாசமுள்ளதாக ஆக்க வேண்டுமெனவும் பவுல் வேண்டுதல் செய்கிறார்..

ஆ. "தேவன் நம்மை அழைத்ததினாலே". "நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்திருக்கிறார்" (1பேதுரு 2:9).

விசுவாசிகளுக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டுமென்னும் ஜெபம் (எபேசியர் 1:15-23)

தேவன் இதற்காகத் தான் நம்மை அழைத்திருக்கிறார். விசுவாசிகள் அழைக்கப்பட்டவர்கள் எனப்படுவர். பாவத்திலிருந்தும் இந்த உலகத்திலிருந்தும் விசுவாசிகள் அழைக்கப்பட்டவர்கள். கிறிஸ்துவின் மூலமாகத் தேவனுக்கென்று வேறு பிரிக்கப் பட்டவர்கள். இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு தேவன் எல்லா மனுஷரையும் அழைக்கிறார். தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய உள்ளான மனுஷனில் நம்பிக்கையைத் தந்தருளுகிறார். “பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு” (ரோமர் 15:13).

இ. “நம்பிக்கை”. நம்பிக்கை உடையவராக இருப்பது என்பது வருங்காலத்தையும் பற்றி நிச்சயமுடையவராக இருப்பதாகும். கிறிஸ்தவருடைய நம்பிக்கை, இயேசுகிறிஸ்து தமது சபையை எடுத்துக் கொள்ள மறுபடியும் வருவார் என்பதே. இந்த சிலாக்கியத்தில் எல்லா விசுவாசிகளும் பங்கு பெறுவர் (1தெசலோனிக்கேயர் 4:13-18). நாம் கிறிஸ்துவை விட்டு பிரிந்து, காணாமல்போன நிலையிலிருந்தபோது நமக்கு நம்பிக்கை எதுவுமில்லை. ஆனால் கிறிஸ்துவிலோ நமக்கு ஜீவனுள்ள நம்பிக்கை உண்டு. கிறிஸ்து மறுபடியும் வருவார், நமது சரீரங்களை உயிர்த்தெழச்செய்வார் என்னும் ஜீவனுள்ள நம்பிக்கை நமக்குண்டு. இந்த நம்பிக்கை ஒவ்வொரு நாளும் நம்மை உற்சாகப்படுத்தும். “ஆகையால், இந்த (நம்பிக்கையின்) வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர்தேற்றுங்கள்”(1தெசலோனிக்கேயர்4:18) என்றும் பவுல் கூறியிருக்கிறார்.

ஈ. “சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம்”. கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஐசுவரியத்திலும் சுதந்தரத்திலும் அங்கமாக இருக்கிறார்கள். இதுவே கிறிஸ்துவிற்குள் தேவனுடைய இறுதியான நோக்கமும் இலக்கும் ஆகும். எல்லா விசுவாசிகளும் ஒரு நாளிலே தேவனுடைய சுதந்தரிப்பாக ஆவார்கள்.

எ. நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள். அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாகத் தமக்குச் சொந்தமானவர்களை மீட்பார் (எபேசியர் 1:14). கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம். (எபேசியர் 1:12). “அதன்பின்பு முடிவு உண்டாகும் அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். ....சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார்” (1கொரிந்தியர் 15:24,28). இந்த வேளையில் இந்த சத்தியம் உண்மையாய் நிறைவேறும்.

ஏ. நாம் தேவனுடைய ஐசுவரியமாகவும், சுதந்தரத்தின்மகிமையாகவும் இருப்பதினால், எல்லா வழிகளிலும் தேவனைப் பிரியப்படுத்தும்படிக்குச் ஜீவிக்க வேண்டும். நாம் சுத்தமுள்ளவர்களாகவும், கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும், அவரைத் துதிப்பதில் உண்மையுள்ளவர்களாகவும், அவருடையசித்தத்தைச்செய்கிறவர்களாகவும், பூமியிலே எல்லா மனுஷருக்கும் முன்பாக அவரை மகிமைப்படுத்துகிறவர்களாகவும் இருக்கவேண்டுமென்றுதேவன்விரும்புகிறார்.

3. தேவன் தமது வல்லமையின் மகா மேன்மையானமகத்துவம்இன்னதென்று விசுவாசிகள் அறியும்படிக்கு அவர் விசுவாசிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று ஒருபோதகர் ஜெபம் பண்ணுகிறார் (1:19-23).

விசுவாசிகளுக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டுமென்னும் ஜெபம் (எபேசியர் 1:15-23)

அ. 19-ஆவது வசனம் "தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம்". இது தேவனுடைய தெய்வீக வல்லமை. இந்த வல்லமையே அற்புதங்களை நடப்பிக்கிறது. நம்மால் காண முடியாததிலிருந்து காணக்கூடியதை தேவனுடைய வல்லமை சிருஷ்டிக்கிறது. தேவனுடைய வல்லமை மகத்துவமுள்ளது. வலுவானது. அதிக ஆற்றலுள்ளது.

ஆ. 20-22-ஆவது வசனங்கள். "தேவனுடைய பலத்த தத்துவத்தின் வல்லமை". கிறிஸ்துவின் மூலமாக, கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளின்போது, தேவனுடைய பலத்த தத்துவத்தின் வல்லமை வெளிப்படுத்தப்பட்டது.

1. கிறிஸ்துவை மூன்றாவது நாளில் உயிர்த்தெழ வைத்தது.

2. அவரை உன்னதங்களில் (சங்கீதம் 110:1) தம்முடைய வலது பாரிசத்தில் (எல்லா வல்லமைக்கும் மேலாக) உட்காரும்படி செய்தது. இதே வல்லமையினாலே கிறிஸ்துவிற்கு கீழ்க்கண்ட காரியங்கள் மீது துரைத்தனமும் அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது.

1. துரைத்தனங்கள், அதிகாரங்கள், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் (எபேசியர் 6:12).

2. இப்பிரபஞ்சத்தின் எல்லா மனுஷர்கள் நமது கண்ணால் காண முடியாத சகல ஆவிகள் (நல்ல ஆவிகளும் கெட்ட ஆவிகளும்). இதில் தற்போதுள்ள துன்மார்க்கத்தின் காலமும், இனிமேல் வரவிருக்கும் நீதியின் காலமும் அடங்கும்.

3. சபையோடு தொடர்புடைய அனைத்துக் காரியங்கள்.

இ. 19-ஆவது வசனம். "விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே". தேவன் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவத்தை எபேசுவிலுள்ள விசுவாசிகளுக்குப் பிதாவாகிய தேவன் காண்பிக்கவேண்டுமென்று பவுல் ஜெபம் பண்ணுகிறார். பிசாசின் வல்லமையையும் திட்டங்களையும் எதிர்த்து நிற்பதற்கு மனுஷருடைய பலமும் சிந்தையின் வல்லமையும் போதுமானதல்ல என்பதை விசுவாசிகள் புரிந்து கொள்ள வேண்டும். பிசாசானவனுக்கு எதிர்த்து நிற்கவும், கிறிஸ்துவில் தங்களுடைய பரம அழைப்பின் நம்பிக்கையைப் புரிந்து கொள்ளவும் வேண்டுமானால், விசுவாசிகள் "கர்த்தரிலும் அவருடைய தத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட வேண்டும்" (எபேசியர் 6:10).

ஈ. விசுவாசிகளாகிய நாம் கிறிஸ்துவிற்காக வல்லமையுள்ள சாட்சிகளாகவும் தைரியமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமானால், நமக்கு கர்த்தருடைய தத்துவத்தின் வல்லமை தேவை. "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து (தேவனுடைய அற்புத வல்லமை, தத்துவத்தின் வல்லமை) ....எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்று இயேசு சொன்னார் (அப்போஸ்தலர் 1:8).

விசுவாசிகளுக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டுமென்னும் ஜெபம் (எபேசியர் 1:15-23)

உ. "அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறிகிறதற்கு" (பிலிப்பியர் 3:10) பவுல் வாஞ்சிக்கிறார். தேவனுடைய உயிர்த்தெழுதலின் வல்லமையின் மூலமாக வழிந்தோட வேண்டுமென்பது பவுலின் விருப்பமாகும். "பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர" (பிலிப்பியர் 3:13,14). தேவனுடைய உயிர்த்தெழுதலின் வல்லமை பவுலுக்கு வாய்க்கப்பண்ணிற்று.

ஊ. எபேசியரில் பவுல் கூறியுள்ள அதே வல்லமையே, இங்கும் கூறப்படும். "தேவனுடைய தத்துவத்தின் வல்லமையாகும்". பெந்தெகொஸ்தே நாளில் மேலறையில் கூடியிருந்த சீஷர்களைப் போன்று (அப்போஸ்தலர் 2:1-4), பரிசுத்த ஆவியில் அபிஷேகிக்கப்படும் விசுவாசிகள் தேவனுடைய தத்துவத்தின் வல்லமையைப் பெற்றுக்கொள்வார்கள். இரத்தச் சாட்சிகளாக மரித்தவர்கள் கிறிஸ்துவிற்காகச் சாட்சிகளாக இருந்ததைப்போன்று, அபிஷேகம் பெற்றுள்ள விசுவாசிகளும் சாட்சிகளாக இருப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் வாய்க்கப்பண்ணுவார். "சாட்சிகளாயிருப்பீர்கள்" என்னும் சொல்லின் பொருளும் இதுவே ஆகும். அவர்களுடைய சாட்சிகளோடு, வல்லமையான தெய்வீக அடையாளங்களும் அற்புதங்களும் கூடவே நடைபெறும் (மாற்கு 16:20; யோவான் 14:12).

முடிவுரை

அ. மேய்ப்பராகிய, பவுல், தான் சேவிக்கும் தேவனைப்போன்று, இரக்கமும் மனதுருக்கமும் நிறைந்தவர். பல விசுவாசிகள் தேவனுடைய கிருபையை இழந்து விட்டார்கள் என்பது பவுலுக்குத் தெரியும். ஏனெனில் அவர்கள் தங்கள் தேவனை அறியாதிருக்கிறார்கள். சபையில் அங்கமாக இருப்பதினால் தங்களுக்குள்ள நம்பிக்கையை அறியாதிருக்கிறார்கள். தேவன் அவர்களுக்காக வைத்துள்ள அவருடைய வல்லமையையும் அறியாதிருக்கிறார்கள். பவுல் இந்தக் காரியங்களையெல்லாம் அறிந்திருந்தாராகையால், இடைவிடாத ஜெபத்தில் தனது நேரத்தைச் செலவுபண்ணினார். அவர்களுடைய சார்பில் அவர்களுடைய தேவைகளை தேவனுக்கு முன்பாக விண்ணப்பம் பண்ணினார் தங்களுடைய ஊழியத்திற்குள்ள விசுவாசிகளுக்காக போதகர்களும் பவுலைப்போன்று இவ்வாறு தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

ஆ. உங்களுடைய போதகரும் சபைத் தலைவர்களும் உங்களுக்காக தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். பிசாசானவன் தன்னுடைய தந்திரத்தினால் உங்களை விழச்செய்து, தன்னுடைய வஞ்சக வலையில் சிக்கவைத்து, உங்களை விழுங்கலாமென்று காத்திருப்பதை அவர்கள் அறிவார்கள். உங்களிடத்திற்கு நான் இன்று வந்துள்ளது ஒரு காரணமாகும். கிறிஸ்துவிற்குள் நீங்கள் அழைக்கப்பட்டதற்கான நம்பிக்கையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். நீங்கள் தேவனை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

விசுவாசிகளுக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டுமென்னும் ஜெபம்

(எபேசியர் 1:15-23)

தேவனுடைய வல்லமையை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென நான் உங்களை அழைக்கிறேன். இதனால் நீங்கள் உங்கள் நண்பர்களுக்கும், சுற்றத்தாருக்கும், உறவினருக்கும் பழக்கமானவர்களுக்கும் கிறிஸ்துவுக்காக வல்லமையுள்ள சாட்சிகளாயிருப்பீர்கள். அப்போஸ்தலர் 2:1-4-இன்படி, நீங்கள் பரிசுத்த ஆவியில் அபிஷேகிக்கப்படும்போது, தேவனுடைய தெய்வீக வல்லமை உங்களிடத்திற்கும் வரும்.

மரித்தவர்களா யிருந்தோருக்கு புதிய ஜீவன் (எபேசியர் 2:1-10)

முன்னுரை

அ. விசுவாசிகளுக்காகத் தேவன் செய்திருக்கும் காரியங்களைப்பற்றி, பவுல் முதலாவது அதிகாரத்தில் எழுதினார். தேவன் விசுவாசிகளை சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்திருக்கிறார். கிறிஸ்துவில் தமது நித்திய திட்டத்தையும் நோக்கத்தையும் தேவன் விசுவாசிகளுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் விசுவாசிகளுக்கு முத்திரை போட்டிருக்கிறார். இந்த வேதவசனப்பகுதியில் பவுல் விளக்கும் காரியங்களாவன:-

1. எபேசுவிலுள்ள விசுவாசிகள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பதாக அவர்களுடைய ஆவிக்குரிய நிலைமை.

2. கிறிஸ்துவில் அவர்கள் எவ்வாறு உயிர்ப்பிக்கப் பட்டார்கள்.

3. விசுவாசிகள் எவ்வாறு தேவனுடைய செய்கையா யிருக்கிறார்கள்.

1. நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாக மரித்தவர்களாக இருந்தோம் (2:1-3).

அ. 1-ஆவது வசனம் "உங்களை" இந்த வசனத்தில் யூதரும் புறஜாதியாரும் பவுலின் மனதில் இருந்திருக்க வேண்டும் (வாசிக்கவும் 1:11-13). எல்லா மனுஷருமே கிறிஸ்துவை அற்றவர்களாக, தேவ கோபாக்கினையின் பிள்ளைகளாகவும் மரித்தவர்களாகவும் இருந்தோம். நாம் நமது அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர் களாயிருந்தோம்.

ஆ. 1-ஆவது வசனம். "மரித்தவர்கள்" என்பது ஆவிக்குரிய ரீதியாக மரித்துவிட்டவர்களைக் குறிப்பிடும். ஆவிக்குரிய ரீதியாக மரித்துவிட்ட நபர் தேவனை மகிமைப்படுத்தமாட்டார், தேவனுக்கு ஸ்தோத்திர பலி ஏறெடுக்கமாட்டார். இந்த உலகத்தில் தேவனைப்பற்றிய அறிவைப் பெற்றிருப்பது ஓர் உன்னதமான சிலாக்கியம் எனக் கருதவுமாட்டார் (ரோமர் 1:21,28). உயிரோடே செத்தவர்கள் இந்த உலகத்தில் நிரம்பியிருக்கிறார்கள் (1தீமோத்தேயு 5:6).

இ. 1-ஆவது வசனம். "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும்". இவையிரண்டுமே ஆவிக்குரிய மரணத்துக்கு காரணமாகும். தவறாக நடத்தல், தவறான பாதையில் நடத்தல், இலக்கை இழந்து போதல் (அம்பு எய்வதில் குறி தவறுவதைப் போன்றது), தேவனுடைய நீதியின் அளவில் குறைவுபட்டுக் காணப்படுதல் எனவும் இந்தச்சொல் பொருள்படும். ஆவிக்குரிய ரீதியாக மரித்தவர்களால் தேவனைப் பிரியப்படுத்தக் கூடாது. தேவனை விட்டு வழி விலகிச் செல்லுதல் தவறான பாதையில் அவர்கள் ஒவ்வொரு அடியாக எடுத்துவைத்து தேவனைவிட்டு தூரம் போகிறார்கள். "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது" (ஏசாயா 59:2).

ஈ. 2-3-ஆகிய வசனங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக எபேசியரின் நிலமை.

1. "முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாக நடந்து கொண்டார்கள்". இந்த உலகத்தின் ஒருசில சமுதாயப் பழக்கவழக்கங்களைத் தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. .....உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன்தேவனுக்குப்பகைஞனாகிறா ன்"(யாக்கோபு 4:4).

மரித்தவர்களா யிருந்தோருக்கு புதிய ஜீவன் (எபேசியர் 2:1-10)

2. "ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டார்கள்" உலகின் காணக்கூடாத ராஜ்யத்திற்கு சாத்தானே பிரபு. எபேசியர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாதிருந்த காலங்களில் அசுத்த ஆவியாகிய சாத்தானே அவர்களுடைய உள்ளங்களில் கிரியை செய்து கொண்டிருந்தான். அவர்கள் சாத்தானைப் பின்பற்றினார்கள், அவனோடு நடந்து சென்றார்கள். ஆகையினால் தான் "உலக முழுவதும் (கிறிஸ்துவுக்கு வெளியே) பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது" (1யோவான் 5:19) என்று வேதாகமம் கூறுகிறது.

3. "நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்தோம்" இது ஆதாமிடமிருந்து சுதந்தரித்துக்கொண்ட பாவ சுபாவம் ஆகும். இந்தப் பாவசுபாவம், மாம்ச இச்சையின்படி நடக்கும்படிக்கு நம்மைத் தூண்டும். தீமையைச் செய்ய வேண்டும், பாவம் செய்ய வேண்டும் என்று இந்தப் பாவ சுபாவம் தீர்மானம் பண்ணும். கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் எல்லோருடைய ஆவிக்குரிய நிலைமை இவ்வாறுதான் இருக்கிறது. எபேசியரின் ஆவிக்குரிய நிலைமையும் இதுவே என பவுல் அவர்களுக்கு உணர்த்துகிறார்.

உ. 3-ஆவது வசனம் "சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்". "சுபாவம்" என்பது பிறப்பினால் வரும் தன்மையைக் குறிப்பிடும். முதல் மனுஷனாகிய ஆதாம் மூலமாகப் பாவம் இந்த உலகத்திலே பிரவேசித்தது. இந்தப் பாவத்தினால், ஆதாம் சரீரப் பிரகாரமாய் மரிக்க வேண்டுமெனவும், தேவனை விட்டு பிரிக்கப்பட வேண்டுமெனவும், ஆக்கினைத் தீர்ப்படைந்தான் (ரோமர் 5:12).

மனுஷர் அனைவரும் ஆதாமின் சந்ததி. பாவசுபாவத்தினாலேயே அவர்கள் வாழ்க்கை ஆரம்பிக்கிறது. மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது (ஆதியாகமம் 8:21). ஆகையினால் மனுஷர் எல்லாருமே பாவம் செய்வார்கள். தேவனுடைய கோபாக்கினையின் பிள்ளைகளாக ஆவார்கள். ஏனெனில் அவர்களுடைய பாவசுபாவம், செய்யக் கூடாது என்று எண்ணியபோதும், பாவகாரியங்களைச் செய்யுமாறு பலவந்தம் பண்ணும் (ரோமர் 7:14-24, 2:23). "சுபாவத்தினாலே தேவனுடைய கோபாக்கினையின் பிள்ளைகளாயிருக்கிறோம்" என்று பவுல் கூறுகிறார். கோபாக்கினை என்பது தெய்வீக நியாயத்தீர்ப்பாகும். கிறிஸ்துவில் புதிய ஜீவன் இல்லாமல், ஆதாமும் அவனுடைய சந்ததி அனைவரும் தேவனுடைய தெய்வீக நியாயத்தீர்ப்பாகிய ஆக்கினையை அடைந்திருக்கிறார்கள்.

அடுத்து விளக்கப்படும் சத்தியம் கிறிஸ்துவில் புதிய ஜீவன் என்பதாகும்.

2. கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார் (2:4-7).

அ. 4-ஆவது வசனம். "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே". "அன்புகூருதல்" என்பதற்கு நேசமாக இருத்தல், ஒரு வெகுமதியை வழங்குதல் என்று பொருள். தேவன் தமது அன்பை எல்லா ஜனங்களுக்கும் வெளிப்படுத்த விரும்புகிறார். அவர்களுக்கு கிறிஸ்துவில் புதிய ஜீவனைக் கொடுக்க விரும்புகிறார். "அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது".

மரித்தவர்களா யிருந்தோருக்கு புதிய ஜீவன் (எபேசியர் 2:1-10)

(1யோவான் 4:10) என்று வேதாகமம் கூறுகிறது. தேவனுடைய அன்பைப்பற்றி வேதாகமம் மேலும் கூறுவதாவது: "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). "ஒருவன்தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:13).

ஆ. 5-ஆவது வசனம். "தேவன் நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்". விசுவாசிகள் ஆவிக்குரிய ரீதியாக ஜீவனுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவோடு இணைந்து ஐக்கியமாக இருக்கிறார்கள். விசுவாசிகள் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பிக்கப்பட்டிருப்பது தேவனுடைய திட்டமே என்பதை எபேசியர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று அப்போஸ்தலர் பவுல் விரும்புகிறார். தேவனே இதை ஆரம்பித்து வைத்தவர். இது தேவனுடைய கிருபையினாலும் நன்மையினாலும் நடைபெறும் காரியம்.

இ. 7-ஆவது வசனம். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் நம்மை அவரோடே கூட எழுப்பினார்". ஞானஸ்நானமானது கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டதற்கு அடையாளமாகும். "பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய், அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்வுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோமர் 6:4). "மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து" (கொலோசெயர் 2:17) என்று பவுல் கொலோசெயருக்கு கூறுகிறார்.

"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி" என்று பவுல் கூறுவதன் பொருள் இதுவேயாகும்.

ஈ. 7-ஆவது வசனம். "உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்". நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக உன்னதங்களிலிருக்கும் இயேசுகிறிஸ்துவோடு நாம் இணைக்கப்பட்டிருக்கிறோம், (யோவான் 14:16-20). இந்த வாக்கியமானது, தேவன் தமது ஜனத்தைக் குறித்து கொண்டுள்ள வருங்காலத் திட்டம் என்று பொருள்கொள்ள வேண்டும். தேவன் நம்மை உன்னதங்களிலே கிறிஸ்துவோடே கூட உட்காரச் செய்யும் தேவனுடைய திட்டம் நிச்சயமாகவே நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இந்தத்திட்டம் ஏற்கனவே நிறைவேறிக் கொண்டிருக்கிறது. "எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப் படுத்தியுமிருக்கிறார்" (ரோமர் 8:30) என்று பவுல் கூறுகிறார். விசுவாசிகளுக்கு மகிமையுள்ள சரீரம் கொடுக்கப்படும். இக்காரியம் இனிமேல் வருங்காலத்தில் நிறைவேறும் அதேவேளையில் இது ஏற்கனவே நிறைவேறி வருவதுபோன்றும் தெரிகிறது. வேதவாக்கியங்களில் இது போன்ற நிகழ்ச்சிகள் ஏராளம் உண்டு.

உ. 6-ஆவது வசனம். "வருங்காலங்களில்" தன்னுடைய பாவத்தினாலும், தான் சுதந்தரித்துக்கொண்ட பாவசுபாவத்தினாலும், மனுஷன் ஆவிக்குரிய ரீதியாக மரித்துவிட்டான். மனுஷனுக்கு மிகவும் அவசரமாக ஓர் இரட்சகர் தேவைப்பட்டார். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை மனுஷனுடைய பாவங்களுக்காக மரிக்க பாவநிவாரண கிருபாதார பலியாக அனுப்பினார். இதன் மூலமாக தேவன் மனுஷன்மீது கொண்டிருந்த தமது அன்பையும் சுத்த கிருபையையும் வெளிப்படுத்தினார்.

மரித்தவர்களா யிருந்தோருக்கு புதிய ஜீவன் (எபேசியர் 2:1-10)

வருங்காலங்களில் (ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் தேவனுடைய நித்திய ராஜ்யத்திலும்) இந்த உலகம் முழுவதிலும் தேவனுடைய அற்புதமான இந்தக் காரியம் வெளியரங்கமாயிருக்கும். அப்போது, தேவன் நமக்கு எவ்வளவு அற்புதமானவராய் இருந்தார் என்பதைப் பூரணமாய்ப் புரிந்து கொண்டு, அவரை நித்தியகாலமாய்த் துதித்து மகிமைப்படுத்துவோம்.

3. "நாம் தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்" (2:8-10).

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள் என்று பவுல் எபேசிய விசுவாசிகளுக்கு கூறுகிறார். எபேசியர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்று பவுல் கூறும்போது, அவர்கள் கீழ்க்கண்ட காரியங்களிலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள்.

1. பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் பாவசுபாவத்தின் வல்லமையிலிருந்தும்

2. பிசாசு, அசுத்த ஆவிகள் ஆகியவற்றின் பிடியிலிருந்தும் கட்டுப்பாட்டிலிருந்தும்

3. இந்த உலகத்திற்கு ஒத்தவேஷம் தரிக்கும் சுபாவத்திலிருந்தும்.

4. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத அவிசுவாச ஜனங்கள்மீது வரவிருக்கும் தேவ கோபாக்கினையிலிருந்தும் விசுவாசிகள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆ. இவை அனைத்தும் தேவனுடைய கிருபையினாலே நடைபெறுகிறது. இரட்சிப்பு தேவனுடைய ஈவு இது தேவனிடமிருந்து வரும் வெகுமதி. மனுக்குலத்திற்காகத் தேவன் வைத்திருக்கும் சிலாக்கியம். நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்காமலும், கடுமையான சட்டதிட்டங்களுக்கு அடிமையாகாமலும், மார்க்க சடங்காச்சாரங்களைக் கடைப்பிடிக்காமலும், பணமோ அல்லது விலையுயர்ந்த வேறு எந்தப் பொருளையும் கொடுக்காமலும், தேவனைப் பிரியப்படுத்துவதற்காக எந்தப் பலிகளையும் செலுத்தாமலும் தேவனுடைய ஈவைப்பெற்றுக் கொள்ளலாம். ஆகையினால் நமது இரட்சிப்பைக் குறித்து ஒருவரும் பெருமை பாராட்டலாகாது. (9-ஆவது வசனம்).

இ. "விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" சுவிசேஷச் செய்தியை கேள்விப்பட்டு, உள்ளத்திலே விசுவாசத்துடனே ஏற்றுக்கொண்டதினாலே இரட்சிக்கப்பட்டோம் என்பது இதன் பொருளாகும் (ரோமர் 10:14-15,17). சுவிசேஷச் செய்தியைக் கேள்விப்பட்டபிறகு, நம்முடைய நம்பிக்கையை கிறிஸ்துவின் மீது வைத்து அவரையே சார்ந்திருப்பதும் இதன் பொருளாகும். "விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி விசுவாசத்திற்கென்று, அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது" (ரோமர் 1:17). "அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியே..... கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே....." (ரோமர் 3:22,25).

ஈ. 10-ஆவது வசனம். "நாம் தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்" உலகமுண்டானது தேவனுடைய செய்கை என்று பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் எழுதியிருக்கிறார். (ரோமர் 1:20). இதுபோலவே, கிறிஸ்துவில் நாம் புது சிருஷ்டியாக்கப்பட்டிருப்பதுவும் தேவனுடைய செய்கையே. "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியா யிருக்கிறான்" (2கொரிந்தியர் 5:17). "கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டியே காரியம்" (கலாத்தியர் 6:15).

**மரித்தவர்களா யிருந்தோருக்கு புதிய ஜீவன்
(எபேசியர் 2:1-10)**

எ. நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். நற்கிரியைகளைச் செய்கிறதற்கு, என்பது விசுவாசிகள் நல்ல காரியங்களைச் செய்வதற்கு கடுமையாகப் பிரயாசப்படவேண்டும் என்று பொருள்படுவதாகும். நற்கிரியைகளைச் செய்வதே விசுவாசிகளின் புதிய வேலை. கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக நாமெல்லோரும் துர்க்கிரியைகளைச் செய்து, துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணினோம். ஆனால் இப்பொழுதோ, நாம் நற்கிரியைகளைச் செய்து, தேவனுக்குப் பிரியமானபடி ஜீவிக்கிறோம். இதற்கு முன்பு நாம் பிசாசுக்கேற்றபடி நடந்து, இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரித்திருந்தோம். ஆனால் இப்பொழுதோ, நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவிக்கேற்றபடி நடக்கிறோம். நம்முடைய ஜனங்கள் ஆரம்பத்திலிருந்து இப்படித்தான் செயல்பட வேண்டுமென தேவன் விரும்பினார். "என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன். .....விசுவாசம் அவனுடைய கிரியைகளோடே கூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டது" (யாக்கோபு *18:22*) என்று யாக்கோபு கூறுகிறார்.

முடிவுரை

அ. இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதற்கு முன்பு ஒவ்வொருவரும் தேவனுடைய கோபாக்கினையினால் ஆவிக்குரிய ரீதியாக மரித்திருந்தார்கள். அவர்கள் தங்களுடைய விசுவாசத்தினாலும், கிறிஸ்துவில் வைக்கும் நம்பிக்கையினாலும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவர்கள் தேவனுடைய செய்கையாயிருப்பார்கள். முற்றிலும் புதிய வழியில், தேவனுக்குப் பிரியமாக நடந்துகொள்வார்கள். தேவன் முன்னதாகவே ஆயத்தம் பண்ணியுள்ளபடி, நற்கிரியைகளைச் செய்யவும், தேவனுடைய சித்தப்படி நடக்கவும் பரிசுத்த ஆவியானவர் நம்மைக் கரம்பிடித்து வழி நடத்துவார்.

ஆ. எடுத்துக்காட்டோடு ஓர் அழைப்பு. "நான் ஒரு மனுஷனை அறிவேன் (அது நான்தான்). அவரோடு வேலைபார்த்த ஒருவர், ஆலயத்திற்கும் வரவேண்டுமென கேட்டுக்கொண்டதினால், அவர் ஆலயத்திற்குசென்று, அங்கு தேவனுடைய விசேஷச் செய்தியைக் கேள்விப்பட்டார். அந்த வேளையில் அவர் தேவனுடைய கோபாக்கினையில் மரித்தவராயிருந்தார். என்றாலும், கிறிஸ்துவில் அவர் கொண்டிருந்த விசுவாசத்தினாலே கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டார். தேவனுடைய கோபாக்கினையினால் மரித்துப்போயுள்ள நீயும் கூட, அந்த மனுஷனைப்போன்று, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்படலாம். தேவன் பாவ சுபாவத்திலிருந்தும் பாவத்தின் வல்லமையிலிருந்தும் உன்னை விடுவிப்பார். அவர் உனக்குள் புதிய ஜீவனை சிருஷ்டிப்பார். தேவனைப் பிரியப்படுத்தும்படியாக ஜீவிப்பதற்கு அவர் உனக்கு உதவிபுரிவார்".

கிறிஸ்துவின் மூலமாக யூதரும் புறஜாதியாரும் ஒப்புரவாக்கப்படுதல் (எபேசியர் 2:11-22)

முன்னுரை

அ. எபேசியர் இரண்டாம் அதிகாரம், முதல் பத்து வசனங்களில், தேவனுடைய கோபாக்கினையில் எபேசியர் மரித்தவர்களாயிருந்தனர் என்று பவுல் கூறுகிறார். ஆனால் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் உயிர்ப்பிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய செய்கையாயிருக்கிறார்கள். கல்வாரி சிலுவையில் இயேசுகிறிஸ்துவின் கிரியை இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. யூதரும் புறஜாதியாரும் ஒப்புரவாக்கப்படுவதோடு இந்தக் கிரியை தொடர்பு கொண்டுள்ளது.

1. கிறிஸ்துவுக்கு முன்னே புறஜாதியார் யூதரிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்தார்கள் (எபேசியர் 2:11-13).

அ. 11-ஆவது வசனம். யூதர்கள் தேவனோடு கொண்டிருந்த விசேஷித்த ஐக்கியத்தை விருத்த சேதனம் வெளிப்படுத்திற்று. ஆபிரகாமின் சந்ததியோடு தேவன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைக்கு விருத்த சேதனம் அடையாளம் ஆகும். (ஆதியாகமம் 17:9-10). இதனால் யூதர்கள் புறஜாதியாரைப்பற்றிக் கூறும்போது அவர்களை, விருத்த சேதனமில்லாதவர்கள் என்றனர். புறஜாதியார்கள் சுத்தமில்லாதவர்கள், தேவனை விட்டு நித்திய காலமாகப் பிரிக்கப்பட்டவர்கள் என்று யூதர்கள் அவர்களைக் குறித்துக் கூறினார்கள். தங்களுக்கும் புறஜாதியாருக்கும் இடையே யூதர்கள் தடைகளை உண்டுபண்ணியிருந்தனர். யூதர்கள் புறஜாதியாரை புறம்பானவர்களென்றும் இழிவானவர்கள் என்றும் நினைத்தார்கள். புறஜாதியாரை யூதர்கள் "நாய்கள்" என்றழைக்கும் வழக்கமும் இருந்து வந்தது.

ஆ. தேவனோடு யூதர்கள் கொண்டிருந்த விசேஷ ஐக்கியத்தை அப்போஸ்தலர் பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் இவ்வாறு தொடர்ந்து குறிப்பிட்டிருக்கிறார். "அவர்கள் இஸ்ரவேலரே, புத்திர சுவிகாரமும், மகிமையும் உடன்படிக்கைகளும், நியாயப்பிரமாணமும், தேவாராதனையும், வாக்குத்தத்தங்களும், அவர்களுடையவைகளே; பிதாக்கள் அவர்களுடையவர்களே, மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே" (ரோமர் 9:4,5).

இ. 12-ஆவது வசனம். எபேசியரின் முந்திய நிலமை.

1. அக்காலத்தில் கிறிஸ்துவைச் சேராதவர்கள்

2. இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்கள்.

3. வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியர்.

4. இரட்சகர் உண்டு என்னும் நம்பிக்கையில்லாதவர்கள் அல்லது இவ்வுலக ஜீவனுக்குப் பிறகு நித்திய ஜீவன் உண்டு என்னும் நம்பிக்கையில்லாதவர்கள்.

5. தேவனற்றவர்கள்.

ஈ. 13-ஆவது வசனம். முன்னே தூரமாயிருந்த எபேசியர் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானார்கள். கிறிஸ்துவின் மூலமாக இப்போது எபேசியரின் தற்போதைய நிலமை.

கிறிஸ்துவின் மூலமாக யூதரும் புறஜாதியாரும் ஒப்புரவாக்கப்படுதல் (எபேசியர் 2:11-22)

1. கிறிஸ்துவைச் சேர்ந்திருக்கிறார்கள்.

2. இஸ்ரவேலுடைய காணியாட்சிக்கு உள்ளே வந்திருக்கிறார்கள்.

3. வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு உட்பட்டவர்கள்.

4. இரட்சகர் உண்டு என்னும் நம்பிக்கை உடையவர்கள்.

5. தேவனோடு சேர்ந்துள்ளவர்கள். "புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே (இஸ்ரவேலருடன்) உடன் சுதந்தரருமாய்" (எபேசியர் 3:3) இருக்கிறார்கள்.

உ. புறஜாதியாரிலிருந்து விசுவாசிகளானவர்கள் "காட்டொலிவமரத்தைப்" போன்றவர்கள் என்று பவுல் கூறுகின்றார். "(ஒலிவமரத்தில்) சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய (புறஜாதியாரிலிருந்து விசுவாசித்து வந்திருக்கிறவர்களாகிய) நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் (யூதர்களின்) வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருக்கிறார்கள்". (ரோமர் 11:17)

ஊ. நீங்களும் நானும் ஒருகாலத்தில் கிறிஸ்துவைவிட்டு தூரமாய் விலகியிருந்தோம். ஆனால் எபேசிய விசுவாசிகளைப் போன்று கிறிஸ்துவின் கல்வாரி சிலுவையினாலே கிட்டச் சேர்க்கப்பட்டிருக்கிறோம். காட்டொலிவமரத்தின் கிளைகள், ஒலிவ மரத்தில் ஒட்டவைக்கப்படுவதைப் போலவே, நாமும் கிறிஸ்துவின் விசுவாசம் வைக்கும்போது யூதருக்குள்ளே ஒட்ட வைக்கப்படுகிறோம். யூதர்கள் தேவனிடமிருந்து எப்போதும் ஆவிக்குரிய போஜனத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதுபோலவே நாமும் நம்முடைய ஆவிக்குரிய போஜனத்தைத் தேவனுடைய கரத்திலிருந்து பெற்றுக்கொள்கிறோம்.

2. யூதரும் புறஜாதியாருமாகிய இருதிறத்தாரையும் இயேசு கிறிஸ்து தமது கல்வாரி சிலுவையினாலே ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார். (எபேசியர் 2:11-18).

அ. 14-ஆவது வசனம் "அவரே நம்முடைய சமாதான காரணராகி இருதிறத்தாரையும் ஒன்றாக்கி பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தார்" இயேசு தமது கிருபாதார பலியின் மூலமாக, விசுவாசிகளாகிய யூதருக்கும் விசுவாசிகளாகிய புறஜாதியாருக்கும் இடையில் சமாதானத்தை உண்டு பண்ணினார். யூதருக்குள்ளும் புறஜாதியாருக்குள்ளும் விசுவாசிகளாக இருப்பவர்கள். "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" (1கொரிந்தியர் 12:13). "நீங்களே (யூதருக்குள்ளும் புறஜாதியாருக்குள்ளும் விசுவாசிகளாயிருப்பவர்கள்) கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" (1கொரிந்தியர் 12:27).

கடந்தகாலத்தில் "பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவர்" யூதரையும் புறஜாதியாரையும் பிரித்து வைத்திருந்தது. கிறிஸ்து இந்தச் சுவரைத் தகர்த்திருக்கிறார்.

கிறிஸ்துவின் மூலமாக யூதரும் புறஜாதியாரும் ஒப்புரவாக்கப்படுதல் (எபேசியர் 2:11-22)

யூதருக்கும் புறஜாதியாருக்கும் இடைபே தேவன் இனிமேல் வித்தியாசம் பார்ப்பதில்லை. விருத்த சேதனம் உண்டா இல்லையா என்பதைக்ககூடப் பார்ப்பதில்லை. தற்போது யூதருக்கும் புறஜாதியாருக்கும் விருத்தசேதனமாக எண்ணப்படுவது இருதயத்தில் உண்டாகும் விருத்த சேதனமாகும். "உள்ளத்தில் யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்த சேதனமே விருத்த சேதனம்" (ரோமர் 2:29).

ஆ. 15-ஆவது வசனம். "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை (இயேசுகிறிஸ்து) தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்தார்". "ஒழித்தல்" என்பதற்கு செயலி ழக்கச்செய்தல், பயனற்றதாக்குதல், கிரியை செய்யமுடியாதவாறு ஆக்குதல் என்பது பொருளாகும். இயேசுகிறிஸ்து சிலுவையிலே பலியாக மரித்தபோது, கட்டளைகளும் நியாயப்பிரமாணங்களும் செயலிழந்தன, பயனற்றுப்போயின, கிரியை நடப்பிக்க முடியாமல் ஆயின. நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளும் வழக்கம் (யூதர்களுடைய கட்டளைகளையும் நியாயப்பிரமாணங்களையும் கைக்கொள்ளும் மார்க்கம்) ஒருமார்க்கத்தின் அடிப்படை நிலையிலி ருந்து முடிவுபெற்றுவிட்டது. யூதர்களையும் புறஜாதியாரையும் வேறுபிரித்திருந்த இந்தப் பகையாகிய நடுச்சுவரை இயேசு கிறிஸ்து தகர்த்தார்.

இ. இந்தச் செய்கையானது இரட்சிப்போடும், தேவனோடு ஒன்று சேர்வதோடும் தொடர்புடையது ஆகும். இப்போது வேறுபாடே இல்லை. எல்லோரும், யூதரும் புறஜாதியாரும் பாவம் செய்திருக்கிறார்கள். எல்லா மனுஷரும், யூதரும் புறஜாதியாரும் இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்தினால் இரட்சிப்பைப் பெற்றிருக்கிறார்கள் (ரோமர் 3:22-24).

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தினாலே கிறிஸ்துவோடு தொடர்ந்து நடக்கிறார்கள் (ரோமர் 1:17).

நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதினால் ஒருவரும் இரட்சிக்கப்படுவதில்லை. (கொலோசெயர் 2:20), "மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும் பாவத்தைப்போக்கும் பலியாகவும் அனுப்பி மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்," (ரோமர் 8:3)

ஈ. 17 ஆவது வசனம். "அவர் (இயேசுகிறிஸ்து) வந்து தூரமாயிருந்த உங்களுக்கும் சமீபமாயிருந்த அவர்களுக்கும். சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார்".

யூதர்கள் இயேசுவோடுகூட எப்போதும் சமீபமாயிருந்தார்கள். புறஜாதியார் முன்பு இயேசுவிடமிருந்து தூரமாயிருந்தார்கள். இவர்களுக்கு இப்போது இயேசுகிறிஸ்து சமாதனத்தை சுவிசேஷமாக அறிவிக்கிறார். பரிசுத்த ஆவியானவரே இப்போது பூமியில் வாசம் செய்து, இந்த ஊழியத்தைச் செய்து இருக்கிறார். இயேசுவின் சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையைக் கொடுக்கிறார். அவர்களைத் தெய்வீக வல்லமையினாலே நிரப்புகிறார். அவர்களுடைய சத்தம் பூமியெங்கும், அவர்கள் மூலமாய்ப் பிரசங்கிக்கப்படும். தேவனுடைய வசனங்கள் பூச்சக்கரத்துக்கு கடைசி வரைக்கும் செல்லுகிறதே (ரோமர் 10:17,18).

கிறிஸ்துவின் மூலமாக யூதரும் புறஜாதியாரும் ஒப்புரவாக்கப்படுதல் (எபேசியர் 2:11-22)

உ. 18-ஆவது வசனம். "நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்". இயேசு கிறிஸ்துவின் மூலமாக யூதரும் புற ஜாதியாரும் இப்போது பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள். பிதாவினிடத்தில் சேருவதற்கு இவ்விருவருக்கும் இயேசுகிறிஸ்து மட்டுமே வழி.

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6). என்று இயேசு சொன்னார். "ஆகையால் சகோதரரே, நாம் பரித்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்தமார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிற படியினாலும்..... சேரக்கடவோம் (எபிரெயர் 10:19,20).

3. இப்போது கிறிஸ்துவிற்குள் புறஜாதியாரும் யூதரோடு ஒன்றாய் இணைக்கப்படுகிறார்கள் (எபேசியர் 2:19வி22).

அ. 19-ஆவது வசனம். எபேசியர்கள் அக்காலத்தில் கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடையகாணியாட்சிக்குப் புறம்பானவர்களும்,வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும் நம்பிக்கையில்லாதவர்களும்இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தார்கள் என்று பவுல் 12-ஆவது வசனத்தில் கூறுகிறார். இப்போது பவுல் எபேசியரைப்பற்றிக் கூறுகையில் "நீங்கள் அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறார்கள்" என்கிறார். அரைகுறையான சகோதரர் அரைகுறையான சகோதரி என்று கிறிஸ்துவுக்குள் ஒருவருமில்லை. நம் எல்லோருமே பரிபூரணமான அங்கத்தினர்கள், காணியாட்சிக்கு முழுமையாக உட்பட்டவர்கள், பிறப்புரிமையை முழுமையாக உடையவர்கள். யூதருக்கும் புறஜாதியருமாகிய எல்லோருக்குமே இப்போது சரிசமமான அந்தஸ்தும் சமமான ஸ்தானமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளிடத்தில் "முகத்தாட்சணியமில்லாமல்" (லூக்கா 20:21) இருக்கிறார்.

ஆ. 20-ஆவது வசனம். யூதரும் புறஜாதியாரும் அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள். இந்த மாளிகையின் குணாதிசயங்கள் :-

1. இந்த மாளிகைக்கு அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் அஸ்திபாரமாயிருக்கிறார்கள். ஆதிசபையிலிருந்த அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் தேவனுடைய வார்த்தையை உபதேசம் பண்ணியும் பிரசங்கித்தும், இயேசுகிறிஸ்துவின் மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் சாட்சி பகர்ந்தும் கட்டிடத்திற்கு அஸ்திபாரமிட்டார்கள்.

2. இந்த மாளிகைக்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார். ஒரு கட்டிடத்திற்கு மூலைக்கல்லே அஸ்திபாரத்தை ஸ்திரப்படுத்தும். மாளிகையின் ஒவ்வொரு கல்லும் மூலைக்கல்லோடு இசைவாய் இணைக்கப்பட்டு கட்டப்படும். "இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்.

கிறிஸ்துவின் மூலமாக யூதரும் புறஜாதியாரும் ஒப்புரவாக்கப்படுதல் (எபேசியர் 2:11-22)

அதுபரீட்சிக்கப்பட்டதும்விலையேறப்பெற்றதும், அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும்" (ஏசாயா 28:16). இயேசு தாமே இந்த மாளிகைக்கு பிரதான மூலைக்கல்லாயிருக்கிறார்.

3. தேவனுடைய மாளிகையில் வாசம் பண்ணுகிறவர்கள் - யூதரும் புறஜாதியாரும், தரித்திரரும் ஐசுவரியவான்களும், சுயாதீனர்களும் அடிமைகளும், இராஜாக்களும் சேவகம் பண்ணுகிறவர்களும் ஆவார்கள். "சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலும்" (வெளிப்படுத்தின விசேஷம் 5:9) தேவனுக்கென்று அவருடைய திருரத்தத்தாலே மீட்டுக் கொள்ளப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் இந்த மாளிகையில் இணைந்து வாசம் பண்ணுவார்கள்.

இ. 21-ஆவது வசனம். இயேசு கிறிஸ்துவின்மேல் "மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது". இஸ்ரவேலர்கள் வனாந்திரத்திலே கட்டின ஆசரிப்புக் கூடாரத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்தைப்போலவும், சாலமோன் இராஜா எருசலேமிலே கட்டின தேவாலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தைப்போலவும், இந்த பரிசுத்த ஆலயம் இருக்கிறது. கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களுக்கு நடுவில் உள்ள இரண்டு கேருபீன்களுக்கு நடுவில் தேவன் வாசம் பண்ணினார். இந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை மூடிக்கொள்ளும் (யாத்திராகமம் 25:17-22).

ஈ. 22-ஆவது வசனம். இந்த மாளிகையானது உண்மையிலே இயேசு கிறிஸ்துவினுடைய வாசஸ்தலமாகிய சபை ஆகும். மகா பரிசுத்த ஸ்தலத்தைப்போலவே, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. தேவனுடைய ஆவியானவரின் வாசஸ்தலமாக இருக்கும். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனைத் தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்" (1கொரிந்தியர் 3:16,17).

எ. தேவன் இயேசுகிறிஸ்துவின் சபையிலும் வாசம் பண்ணுகிறார். விசுவாசிகள் கூடிவரும் ஸ்தல சபைகளிலும் தேவன் வாசம் பண்ணுகிறார். "இரண்டு பேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்று இயேசு சொன்னார். (மத்தேயு 18:20). "ஆகையால் மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க பாரமான யாவற்றையும், நம்மைச் சற்றுநெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1).

முடிவுரை

அ. இயேசுகிறிஸ்து அவதரிப்பதற்கு முன்பாக, யூதர்கள் புறஜாதியாரைப் பிரித்து வைத்திருந்தனர். இவர்களிருவரையும் பகை என்னும் சுவர் பிரித்திருந்தது. இயேசுகிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக புறஜாதியார் யூதரோடு ஒப்புரவானார்கள். விருத்த சேதனம், நியாயப்பிரமாணம், இவற்றின் உடன்படிக்கைகளும் நிபந்தனைகளும் செயலற்றுப்போயிற்று, பயனற்றவையாயிற்று. இவர்களை வேறு பிரித்த பகையாகிய சுவர்

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

கிறிஸ்துவின் மூலமாக யூதரும் புறஜாதியாரும் ஒப்புரவாக்கப்படுதல் (எபேசியர் 2:11-22)

அகற்றப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவிற்குள் புறஜாதியார் யூதரோடு இணைக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆ. யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் நடுவில் பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச் சுவரை இயேசு கிறிஸ்து தகர்த்தார். இதுபோலவே, சபையிலுள்ள விசுவாசிகளிடையே காணப்படும் பகையாகிய, பிரிவினையாகிய நடுச் சுவர் தகர்க்கப் பட வேண்டும். உங்கள் மத்தியிலே தேவன் பரிசுத்த ஆவியானவ ராக வாசம் பண்ணுகிறார். ஆகையினால், பரிசுத்த ஆவியானவ ரிடத்தில் நீங்கள் உங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர்தாமே உங்களுடைய இருதயங்களில் காணப்படும் பகை, கோபம் ஆகிய பிரிவினைச் சுவரை தகர்ப்பாராக. போதகரையும் விசுவாசிகளையும், மூப்பர்களையும் போதகரையும், விசுவாசிகளையும் மூப்பர்களையும், உபதேசியார்களையும் மூப்பர்களையும் மேய்ப்பரையும் விசுவாசிகளையும், வாலி பர்களையும் முதியவர்களையும், தரித்திரரையும் ஐசுவரியவான்களையும், புருஷன்மார்களையும் மனைவிமார்களையும், பெற்றோரையும் பிள்ளைகளையும், பிரிக்கும் பகை, கோபம் ஆகிய பிரிவினையாகிய நடுச்சுவரை பரிசுத்த ஆவியானவர் தாமே தகர்ப்பாராக!

எபேசியருக்காக போதகரின் இரண்டாவது ஜெபம் (எபேசியர் 3:14-21)

முன்னுரை

அ. எபேசியருக்காக பவுல் விண்ணப்பம் பண்ணின, போதகரின் முதலாவது ஜெபம் எபேசியர் 1:15-23-இல் எழுதப்பட்டிருக்கிறது. முதலாவது ஜெபத்தில் விசுவாசிகள் கீழ்க்கண்ட காரியங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென விண்ணப்பம் பண்ணுகிறார்.

1. தேவனை அறிந்து கொள்வதற்கு ஞானத்தையும் தெளிவையும் அறிக்கிற ஆவியை தேவன் விசுவாசிகளுக்குத் தந்தருள வேண்டும்.

2. தேவன் நம்மை அழைத்ததினால் நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் நாம் அறியும்படிக்கு அவர் நமக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டும்.

3. தமது பலத்த தத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே, தம்முடைய வல்லமையின் மகாமேன்மையான மகத்துவம் இன்னதென்று நாம் அறிய வேண்டும்.

பவுல் தமது இரண்டாவது ஜெபத்தில் விசுவாசிகள் கீழ்க்கண்ட காரியங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று ஜெபம் பண்ணுகிறார்.

1. தேவனுடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவேண்டும். இதனால் விசுவாசத்தினாலே கிறிஸ்து விசுவாசிகளின் இருதயங்களில் வாசமாயிருப்பார்.

2. கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணரவேண்டும். தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவேண்டும்.

1. ஜெபம் பண்ணும்போது போதகர் இருக்கவேண்டிய விதம் (3:14,15).

அ. பவுலின் நாட்களில், ஜனங்கள் பொதுவாக நின்றுகொண்டே ஜெபம்பண்ணினார்கள். பரிசேயனும் ஆயக்காரனும் ஜெபம்பண்ணிய உவமையில், இவர்கள் இருவருமே நின்று கொண்டே ஜெபம்பண்ணினார்கள் (லூக்கா 18:11,13). இயேசு சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று. இது சம்பந்தமாக இயேசு உரையாடிய போது, நின்றுகொண்டு ஜெபம் பண்ணுபவரைப் பற்றி இயேசு குறிப்பிட்டிருக்கிறார் (மாற்கு 11:25).

ஆ. 14-ஆவது வசனம். ஜெபம்பண்ணும்போது முழங்கால்படியிடுவது, அவருடைய உள்ளத்தின் ஆழமான உணர்வுகளையும், அத்துடன் அவருடைய தாழ்மையையும் வெளிப்படுத்துகிறது. இந்த வசனத்தில், பவுல் பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு ஜெபம்பண்ணியது இந்தக் குணத்தையே வெளிப்படுத்துகிறது. இயேசு ஜெபம் பண்ணவேண்டிய விதத்தைப் பற்றி உபதேசம் பண்ணினார்.

“ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு” (மத்தேயு 6:6) என்று மட்டுமே உபதேசம் பண்ணியிருக்கிறார் (யோவான் 16:23). ஜெபம் பண்ணும்போது, எப்படி ஜெபம்பண்ண வேண்டும், நின்றுகொண்டா அல்லது முழங்கால் படியிட்டா என்பது பற்றி உபதேசம் எதுவும் பண்ணவில்லை.

எபேசியருக்காக போதகரின் இரண்டாவது ஜெபம் (எபேசியர் 3:14-21)

இ. சாலமோன் தேவாலயத்தை பிரதிஷ்டை பண்ணியபோது, முழங்கால்படியிட்டு தேவனிடம் விண்ணப்பம் பண்ணினார் (1 இராஜாக்கள் 8:54).

தானியேல் "தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்கார்படியிட்டு ஜெபம்பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான்". (தானியேல் 6:10). ஸ்தேவான் இறுதியாக ஜெபம்பண்ணியபோது, முழங்கார்படியிட்டு ஜெபித்தான் (அப்போஸ்தலர் 7:60).

பேதுரு தொற்காளின் பிரேதத்தின் அருகே முழங்கார்படியிட்டு ஜெபம்பண்ணினார் (அப்போஸ்தலர் 9:40). பவுல் எபேசுவிலுள்ள மூப்பர்களோடு சேர்ந்து ஜெபம் பண்ணும்போது "முழங்கார்படியிட்டு, அவர்களெல்லாரோடுங்கூட ஜெபம்பண்ணினான்" (அப்போஸ்தலர் 20:36).

ஒருநாளில், எல்லா மனுஷரும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக முழங்கார் படியிடுவார்கள் (பிலிப்பியர் 2:10).

ஈ. 14-ஆவது வசனம். பவுல் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக முழங்கார்படியிட்டு ஜெபிக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே "பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகரணர்" ஆக இருக்கிறார். தேவனே மனுஷனைச் சிருஷ்டித்தவர். இதன் வாயிலாக மனுக்குலத்திலுள்ள எல்லா மனுஷருக்கும் தேவனே பிதாவாக இருக்கிறார். இவ்வாறு பிதா ஸ்தானமானது, தேவனுடைய பிதா ஸ்தானத்திலிருந்தே கணிக்கப்படுகின்றது. விசுவாசிகளின் குடும்பத்துக்கு தேவன் பிதாவாக இருக்கிறார். விசுவாசிகளில் சிலர் ஏற்கனவே பரலோகத்திலிருக்கிறார்கள்.

மேலும் பலர் வெகு சீக்கிரம் அங்கு சென்றடைவோம் என்னும் நம்பிக்கையில் இருக்கிறார்கள். (பிலிப்பியர் 3:20; எபிரெயர் 12:22;13:14). அதுவரையிலும், நாமும் பவுலைப்போலவே, பிதாவுக்கு முன்பாக முழங்கார்படியிட்டு ஜெபம்பண்ணுவோமாக!.

2. இன்றைய தினம் கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது சிலர் நின்று கொண்டு ஜெபிக்கிறார்கள், சிலர் தரையில் சாஷ்டாங்கமாய் விழுந்து ஜெபிக்கிறார்கள். எப்படி ஜெபம்பண்ணினாலும், ஜெபமானது, இருதயத்தின் மனப்பாங்கையே வெளிப்படுத்தும். பரலோகப்பிதாவோடு ஐக்கியமாக இருக்கும் வேளையே ஜெபமாகும். மேலும் அவரோடு தகவல் பரிமாற்றம் செய்வது, அதாவது நாம் அவரிடத்தில் பேசுவது, அவர் பேசுவதைக் கேட்பது ஆகிய இரண்டும் ஜெபம்பண்ணும்போது நடைபெறும்.

ஒரு விசுவாசி எந்த நிலையில் (நின்றா, முழங்கால்படியிட்டா, தரையில் சாஷ்டாங்கமாய் விழுந்தா) ஜெபிக்கிறார் என்பதை விட, ஜெபத்தில் உள்ளத்தின் ஆழமான உணர்வுகள் வெளிப்படவேண்டும். தாழ்மையோடு ஜெபிக்கவேண்டும் என்பதே முக்கியமான விசயம்.

2. போதகரின் ஜெபம் (3:16-19)

அ. போதகரின் இந்த ஜெபத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன. அதாவது புதிய விசுவாசிகளின் ஜீவியத்தில் இரண்டு காரியங்கள் நடைபெற வேண்டுமென பவுல் வாஞ்சிக்கிறார்.

முதலாவது ஜெபம் (16,17 ஆகிய வசனங்கள்). புதிய விசுவாசிகள் தேவனுடைய ஆவியினாலே உள்ளான மனுஷனிலே வல்லமையாய்ப் பலப்படவேண்டும்.

எபேசியருக்காக போதகரின் இரண்டாவது ஜெபம் (எபேசியர் 3:14-21)

விசுவாசிகளின் இருதயங்களிலே வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவர், விசுவாசிகளின் உள்ளான மனுஷனிலே (அவர்களுடைய ஆவியிலே) கிறிஸ்துவின் வல்லமையையும் பிரசன்னத்தையும் பெலப்படுத்த (உண்மையாக்க) வேண்டும். புதிய விசுவாசிகள் அனைவருக்கும் இது தேவையான காரியம் ஆகும். பரிசுத்த ஆவியானவரால் மட்டும் இந்தக் காரியத்தைச் செய்ய முடியும். இயேசு கிறிஸ்துவை தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள முன்வரும்போது புதிய விசுவாசிகள் இந்தக் காரியத்தையே வாஞ்சிக்கிறார்கள் (ரோமர் 8:16; 1யோவான் 5:10).

இரண்டாம் ஜெபம் (18,19 ஆகிய வசனங்கள்). புதிய விசுவாசிகள் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்துகொள்ளவேண்டும். கிறிஸ்துவின் இந்த மாதிரியான அன்பைப், புதிய விசுவாசிகளால் தங்களுடைய மானுட உபாயங்களினாலோ, அல்லது உணர்வுகளினாலோ உணர்ந்து கொள்ளவே முடியாது. பரிசுத்த ஆவியானவரால் புதிய விசுவாசிகள் இதை உணர்ந்துகொள்ள உதவிபுரியமுடியும். கிறிஸ்துவின் வல்லமையையும் பிரசன்னத்தையும் விசுவாசிகளின் உள்ளான மனுஷனிலே (ஆவியிலே) பெலப்படுத்த முடியும்.

புதிய விசுவாசிகளின் ஆவியிலே பரிசுத்த ஆவியானவர் தெய்வீக ஒளியூட்டம் கொடுப்பார். தேவன் கிறிஸ்துவின் மூலமாக தங்களுக்காக வைத்திருக்கும் கிறிஸ்துவின் அறிவுக்கெட்டாத அந்த தெய்வீக அன்பின் அம்சங்களை, புதிய விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவருடைய உதவியினால் உணரலாம்.

விசுவாசிகள் "தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்" வேண்டுமென (தேவனுடைய பிரசன்னம், வல்லமை, அன்பு ஆகியவற்றால்) போதகராகிய பவுல் வாஞ்சிக்கிறார்.

ஆ. விசுவாசிகளிடத்தில் தெய்வீகக் காரியங்களை வெளிப்படுத்துவதற்கு பரிசுத்த ஆவியானவரே தேவனுடைய பிரதிநிதியாகச் செயல்படுகிறார். கிறிஸ்துவினுடைய வல்லமையையும், பிரசன்னத்தையும், அறிவுக்கெட்டாத அவருடைய அன்பையும் பரிசுத்த ஆவியானவரால் மட்டும் விசுவாசிகளின் உள்ளான மனுஷனிலே (அவனுடைய ஆவியிலே) பெலப்படுத்த முடியும் "தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்" (1கொரிந்தியர் 2:12).

இ. பல வருஷங்களுக்கு முன்பு, புற்று நோயால் மரணப்படுக்கையில் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த ஒரு ஸ்திரீயை சந்திக்கச் சென்றேன். அவருக்காக நான் ஜெபித்தபோது, இந்தக் குறிப்பிட்ட வேத வசனம் எனது நினைவிற்கு வந்தது. செத்துக்கொண்டிருக்கும் அந்த ஸ்திரீயிடம் இந்த வசனத்தைச்சொல்லி ஜெபித்தேன். சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து கொள்ள தேவன் உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டும் (18-ஆவது வசனம்). பரிசுத்த ஆவியானவர் அந்த ஸ்திரீயின் ஆவியிலே இந்த சத்தியத்தை தெய்வீக வல்லமையினால் தெளிவுபடுத்தினார். மரித்துக்கொண்டிருந்த அந்த ஸ்திரீ, தனக்கு மிகவும் தேவையான அந்த வேளையிலே, கிறிஸ்துவின் அன்பும், அவருடைய பிரசன்னமும் தன்னுடைய ஆவியிலே உண்டு என்பதை உணர்ந்து கொண்டாள்.

எபேசியருக்காக போதகரின் இரண்டாவது ஜெபம் (எபேசியர் 3:14-21)

3. ஜெபம்பண்ணுவதில் போதகரின் நோக்கம் (3:19,20,21).

அ. 19-ஆவது வசனம். கிறிஸ்துவினுடைய அன்பு மானிடரின் அறிவுக்கெட்டாதது. ஒரு விசுவாசியால் தன்னுடைய சொந்த அறிவுத் திறமையினால் தேவனுடைய அன்பைப் புரிந்து கொள்ள இயலாது. விசுவாசியின் ஆவிக்கு, அவருடைய சொந்த அறிவுத்திறமைக்கு விளக்கம் கிடைக்காது. விசுவாசியின் ஆவி தெளிவுபெறாது, உணராது. பரிசுத்த ஆவியானவர், விசுவாசிகளின் ஆவியில் ஒளியூட்டம் கொடுத்தால் மட்டுமே, அவர்களால் ஆவிக்குரிய சத்தியங்களைப் புரிந்துகொள்ள முடியும், உணர முடியும். கீழ்க்கண்ட காரியங்களைத் தெரிந்துகொள்ளவும் உணரவும் இந்த வழிமுறையே சாத்தியமானதாகும்.

1. நமது பரலோகப்பிதா (எபேசியர் 1:17).

2. தேவன் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை (எபேசியர் 1:18).

3. நம்முடைய ஜீவியங்களில் கிறிஸ்துவின் பிரசன்னமும் வல்லமையும்.

4. கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும்.

இது உண்மையல்லவென்றால், பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு இவற்றை வெளிப்படுத்தவேண்டுமென்று ஜெபித்திருக்கவேமாட்டார். இதனால்தானோ, பவுல் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் குறிப்பிடும்போது, "நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவர்" (20-ஆவது வசனம்). விசுவாசிகள் இந்தக் காரியங்களைப் புரிந்து கொள்ள ஆரம்பிக்கும்போது, அவர்கள் பிதாவாகிய தேவனையும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் சபையிலே மகிமைப் படுத்துவார்கள். தங்களுடைய குடும்பத்திலும், பிள்ளைகள், உற்றார் உறவினர் மத்தியிலும் விசுவாசிகள் கர்த்தரை மகிமைப்படுத்துவார்கள். அடுத்த தலைமுறையினரும் தேவனையும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவையும் மகிமைப்படுத்துவார்கள்.

இ. நான் சபைகளிலே முன்னால் நின்று பிரசங்கம்பண்ணும்போது, விசுவாசிகளின் முகங்களை கவனித்திருக்கிறேன். ஒரு சிலருடைய முகங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஒளியூட்டம் பெற்று பிரகாசமாயிருப்பதை கவனித்திருக்கிறேன். இயேசுகிறிஸ்துவே ஆவிக்குரிய சத்தியங்களை வெளிப்படுத்தினவர். விசுவாசிகள் இயேசுவுக்கு துதியையும் கனத்தையும் மகிமையையும் செலுத்தி, இயேசுகிறிஸ்துவை ஆராதிக்கும்போது, அவர்கள் முகம் பரிசுத்த ஆவியானவரின் ஒளியூட்டம் பெற்று பிரகாசமாயிருக்கும்.

ஈ. அவிசுவாசிகள் தேவனோடு சரியானபடி ஜீவிக்கவில்லை என்பதைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய உள்ளங்களிலே உணர்த்துவார். அப்போது இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள முன் வருவார்கள். அந்த வேளையில் அவர்களுடைய இருதயங்களிலே பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தின் வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்வார். அவர்களுக்கு "ஒரு இரட்சகர் தேவைப்படுகிறார்" என்பதை வெளிப்படுத்துவார். பிசாசின் வல்லமையிலிருந்தும், பிடியிலிருந்தும், ஆளுகையிலிருந்தும் அவர்களை விடுவிப்பதற்கு இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவால் ஆகும் என்பதை ஆவியானவர் தாமே அவர்களுக்கு வெளிப்படுத்துவார்.

எபேசியருக்காக போதகரின் இரண்டாவது ஜெபம் (எபேசியர் 3:14-21)

2. கிறிஸ்துவின் சரீரமானது இசைவாய் கட்டப்பட்டு செயல்பட வேண்டும் என்பதே போதகராகிய பவுல் ஏறெடுத்த ஜெபத்தின் முக்கியமான கருத்து ஆகும். பவுலின் ஜெபத்தில் அடங்கியுள்ள ஆவிக்குரிய உண்மைகளை விசுவாசிகள் உணரும்போது அவர்கள் "கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும்" அனைவரும் "தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்கள் ஆவார்கள்" (எபேசியர் 4:11) பவுல் எபேசியருக்கு தொடர்ந்து நிருபம் எழுதுகையில் அழுத்தமாக இந்தக் காரியத்தை தெளிவுபடுத்துகிறார்.

முடிவுரை

அ. உங்கள் போதகரும் மூப்பர்களும் உங்களுக்காக ஜெபித்து வருகிறார்கள். அப்போஸ்தலர் பவுலைப் போலவே, இவர்களும் சபையிலுள்ள விசுவாசிகள் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்கள் ஆக வேண்டும் என்று விரும்புகிறார்கள். உங்களுடைய உள்ளான மனுஷனிலே பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய சத்தியங்களை வெளிப்படுத்த வேண்டுமென ஜெபிக்கிறார்கள். உங்களுக்கு கீழ்க்கண்ட காரியங்கள் நடைபெற வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

1. பரலோகப் பிதாவை நீங்கள் அதிகமாய்த் தெரிந்து கொள்ளவேண்டும்.

2. இயேசுகிறிஸ்துவிலே உண்டாயிருக்கிற நம்பிக்கையைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

3. உங்களுடைய ஜீவியங்களிலே கிறிஸ்துவின் பிரசன்னமும் வல்லமையும் காணப்படவேண்டும்.

4. அறிவுக்கெட்டாத, அளக்கமுடியாத கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ள வேண்டும்.

ஆ. இங்கு பலர் கூடிவந்திருக்கிறீர்கள். ஆவிக்குரிய சத்தியங்களைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் இன்னுமொருமுறை உங்களுடைய உள்ளங்களிலே விளக்க வேண்டுமென நீங்கள் விரும்பலாம். ஒருவேளை உங்களில் சிலர் இயேசுகிறிஸ்துவை உங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் இதுவரையில் ஏற்றுக்கொண்டிராதவர்களாகவும் இருக்கலாம். பரிசுத்த ஆவியானவர் உங்களுடைய இருதயங்களுக்கு ஒளியூட்டம் கொடுத்து, நீங்கள் தேவனோடு இன்னும் ஒப்புரவாக வேண்டியுள்ளது என்பதைத் தெளிவுபடுத்தலாம். உங்களுக்கு ஒருஇரட்சகர் தேவைப்படுகிறார் என்பதையும், பிசாசின் வல்லமையிலிருந்தும் அவனுடைய பிடியிலிருந்தும் உங்களை விடுவிக்க ஒரு மீட்பர் தேவைப்படுகிறார் என்பதையும் பரிசுத்த ஆவியானவர் உங்களுடைய உள்ளங்களிலே உணர்த்தலாம்.

கிறிஸ்துவின் சரீரத்திலே ஒருமனப்பாடு (எபேசியர் 4:1-16)

முன்னுரை

அ. நான்காம் அதிகாரம் பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தின் இரண்டாவது பகுதியின் ஆரம்பம் ஆகும். இந்த நிருபத்தின் முதல் மூன்று அதிகாரங்களிலே, கிறிஸ்து இயேசுவிற்குள் தேவனுடைய நித்திய நோக்கம், கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைச் சத்தியங்கள், புறஜாதியாரும் யூதரும் கிறிஸ்துவின் அஸ்திபாரத்தில் ஒரே சபையாக இணைக்கப்படுவது ஆகிய காரியங்களைக் குறித்து எழுதியிருக்கிறார். விசுவாசிகள் ஒருமனப்பட்டவர்களாக ஜீவித்து, ஏகோபித்து கர்த்தரை ஆராதிக்கும் விசுவாசிகளின் குணாதிசியங்களைப் பவுல் இந்தப் பகுதியில் விளக்குகிறார். பவுலின் முதலாவது வேண்டுகோள், கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருமனப்பாடு காணப்படவேண்டும் என்பதாகும். கர்த்தர் நிமித்தம் தான் கட்டுண்டவன் என்பதை பவுல் மறுபடியும் உறுதிப்படுத்துகிறார். ஒருமைப்பாடு வேண்டும் என்னும் அவருடைய வேண்டுகோளுக்கு அவர் கட்டுண்டவராக இருப்பதாக மறுபடியும் கூறுவது வலிமை சேர்க்கிறது.

1. கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருமைப்பாடு தேவை என்னும் வேண்டுகோள் (4:1-6).

அ. 1ஆவது வசனம் ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் தனித் தனியாக ஸ்தானிகராக இருக்கிறார்கள். ஒவ்வொரு விசுவாசியும் தேவனுடைய குடும்பத்தில் அங்கத்தினராய் இருக்கிறார். ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய சமுதாயத்திலுள்ள ஜனங்களோடு கூடிவாழ்கிறார். அப்போது அவரிடத்தில் காணப்படும் நற்பண்புகள் கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்கும், அவருடைய மொத்தக் குடும்பத்திற்கும் மகிமையைக் கொண்டுவரும். ஆகையினால் தான் "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நட" என்று பவுல் கூறுகிறார்.

ஆ. 2-ஆவது வசனம். சபையிலுள்ள விசுவாசிகள் ஒற்றுமையாகவும் ஒருமனப்பாட்டுடனும் இருக்க, நான்கு ஆன்மீக குணங்கள் தேவை. பவுல் அவற்றை இவ்வாறு வரிசைப்படுத்திக் கூறுகிறார்.

1. மிகுந்த மனத்தாழ்மை- மற்றவர்களிடம் பழகும் போது மிகுந்த மனத்தாழ்மையோடு பழக வேண்டும். மற்றவர்களின் மதிப்பு மரியாதையை அங்கீகாரம் பண்ணவேண்டும். நாம் விரும்பும் ஜனங்களும் எளிதாகப் பழகுவதற்கு ஏதுவானவர்கள், நமக்கு மதிப்பும் மரியாதையும் கொடுப்பார்கள். ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்துவதும், ஒருவரையொருவர் அங்கீகரித்து ஏற்றுக்கொள்வதும் ஒற்றுமையை வளப்படுத்தும். என்னை ஒரு விசுவாசியாக ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் மரியாதையுடன் பழகு. நான் செய்வதையும் செய்யும் பாணியையும் ஏற்றுக்கொண்டு அவற்றை மதித்து என்னோடு பழகு. அப்போது நான் உன்னோடு மரியாதையோடு பழகுவேன்.

2. சாந்தம். சாந்தகுணமுள்ளவர்கள் மற்றவர்கள் மீது தங்கள் அதிகாரத்தையோ, அல்லது தங்களுடைய முக்கியத்து வத்தையோ பலவந்தமாகத் திணிக்கமாட்டார்கள். இயேசுவிடம் வந்தவர்கள் தங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஏனெனில் அவர் "சாந்தமும் மனத்தாழ்மையுமாய்" இருக்கிறார் (மத்தேயு 11:29).

கிறிஸ்துவின் சரீரத்திலே ஒருமனப்பாடு (எபேசியர் 4:1-16)

3. நீடிய பொறுமை - தனக்கு ஒருவர் தீங்கு செய்துவிட்டால்; நீடிய பொறுமையுடவர், உடனே பதிலுக்கு அவருக்கு தீங்கு செய்துவிடமாட்டார். மற்றவர்களிடத்தில் நீடிய பொறுமையோடு பழகி, தனக்கு ஏற்பட்டிருக்கிற தீங்கைச் சகித்துக் கொள்வார்.

4. சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளுதல். மற்றவர்களுடைய பலவீனம் நமக்கு பிரச்சனையாகவும், பிரீதியில்லாமலும் இருக்குமானாலும், நாம் அவர்களிடத்தில் பொறுமையோடே பழகவேண்டும். விசுவாசத்திலே பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொண்டு, அவனுடைய மன ஐயங்களை மற்றவர்கள் குற்றமாய் நிர்ணயித்தாலும், நாம் அவற்றைக் குற்றமாய் நிர்ணயிக்கக்கூடாது (ரோமர் 14:1).

இ. கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் தான் எழுதியதைப் பவுல் இங்கு மறுபடியும் குறிப்பிடுகிறார். விசுவாசிகளிடையே மனஒருமைப்பாடு இவ்வாறாகக் காத்துக்கொள்ளப்படும்.

1. "ஆவியினாலே நடத்தப்படவேண்டும்". போர்வீரர்கள் மார்ச்பண்ணும்போது நேர் கோட்டில் நடப்பதைப்போன்று கம்பீரமாய் நடப்பார்கள். பரிசுத்த ஆவியானவரிடம் உள்ள அதே சுபாவமே நம்மிடமும் உள்ளது. ஆகையினால் அவரைப் போலவே நாமும் நடக்க வேண்டும். நேர் கோட்டில் நடப்பதைப் போன்று நாமும் பரிசுத்த ஆவியானவரைப்போன்று கம்பீரமாய் அடிபிறளாமல் நடக்க வேண்டும்.

2. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஜீவியத்திலே ஆவியின் கனியை வெளிப்படுத்த அனுமதிக்கவேண்டும். ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்பனவாம் (கலாத்தியர் 5:22-25). ஆவியின் கனியை உடைய விசுவாசிகள், வீண்புகழ்ச்சியை விரும்பமாட்டார்கள். ஒருவரையொருவர் கோபமூட்ட மாட்டார்கள். (கலாத்தியர் 5:26). இவர்கள் பிரிவினையை உண்டு பண்ணி ஜனங்களைத் துரத்தி விரட்டி விடமாட்டார்கள்.

ஈ. "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு, ஜாக்கிரதையாயிருங்கள்" விசுவாசிகள் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். (ரோமர் 8:9; 1கொரிந்தியர் 12:13). இயேசு கிறிஸ்துவை தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டவர்களை ஒன்றாய் இணைப்பதற்குத் தேவனுடைய வழி இது மட்டுமே யாகும். இந்த ஒருமனப்பாட்டைக் காத்துக்கொள்ள வேண்டியது. ஒவ்வொரு விசுவாசியினுடைய கடமையாம். ஆகையினால் தான் "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்று பவுல் கூறுகிறார்

உ. 4-6 ஆகிய வசனங்கள். பவுல் தொடர்ந்து கூறுவதாவது; கீழ்க்கண்டவை மட்டுமே உள்ளன.

1. (விசுவாசிகளின்) ஒரே சரீரம்

2. ஒரே (பரிசுத்த) ஆவி

3. ஒரே நம்பிக்கை (கிறிஸ்து ஒருவர் என்பது)

4. ஒரே கர்த்தர் (இயேசு)

5. ஒரே விசுவாசம் (கிறிஸ்துவில் மட்டும்)

கிறிஸ்துவின் சரீரத்திலே ஒருமனப்பாடு (எபேசியர் 4:1-16)

6. ஒரே ஞானஸ்நானம் (ஆவியினாலே கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக)

7. ஒரே தேவனும் பிதாவும்.

நமது கிறிஸ்தவ விசுவாசத்தின் எல்லா அம்சங்களிலும் ஒற்றுமை காணப்படுவது போலவே, கிறிஸ்துவின் சரீரத்திலும் ஒற்றுமை காணப்பட வேண்டும்.

ஊ. எபேசுவிலுள்ள சபையின் விசுவாசிகளுக்கு, வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு கூறியிருப்பதாவது. "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாய் என்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக" (வெளிப்படுத்தின விசேஷம் 2:4,5). விசுவாசிகள் ஆதியிலே (தாங்கள் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டிருந்த காலத்தில்) இயேசு கிறிஸ்துவின் மீதும், சபையிலுள்ள சபை விசுவாசிகளிடத்திலும் அதிக அந்நியோந்நிய அன்போடு இருந்தார்கள். ஆனால் அந்த அன்பு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, மொத்தமும் இல்லாமற் போயிற்று. இன்றையதினமும், நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, எல்லா விசுவாசிகளிடமும் சொல்ல விரும்பும் செய்தியும் இதுவாகத் தான் இருக்கும். "நீ, ஆதியிலே, எல்லா விசுவாசிகளிடத்திலும் தாழ்மையுடனும், சாந்தத்துடனும், நீடியபொறுமையுடனும், தயவாயும் பழகிவந்தீர்கள். அதை நினைவு கூறவேண்டும். என்னுடைய சபையிலே ஒரு மனப்பாடு காணப்படுவதாக. என்னுடைய நாமத்தையோ, என் சபையையோ, என் வீட்டாரையோ, நீங்கள் தூஷியாமலிருப்பீர்களாக".

2. கிறிஸ்துவின் சரீரத்தில் ஒற்றுமையைக் காத்துக் கொள்வதற்கு தேவன் கையாளும் உபாயம் (4:7-13).

அ. 7,8,13-ஆகிய வசனங்கள். "கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக, நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. உயிர்த்தெழுந்த கிறிஸ்து சில விசுவாசிகளைச் சிறையாக்கி, தமக்காக ஊழியம் செய்யும்மாறு நியமித்திருக்கிறார். அவர் சிலரை அப்போஸ்தலராகவும் சிலரை தீர்க்கதரிசிகளாகவும் சிலரைச் சுவிசேஷகராகவும் சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். இயேசு அவர்களை தமது சபைக்கு வரங்களாக அருளியிருக்கிறார். 9,10 ஆகிய இரண்டு வசனங்களும் ஒருவிளக்கமாகும். பரலோகத்திலும் பூலோகத்திலும் உயிர்த்தெழுந்த கிறிஸ்து, தமது ஊழியக்காரர்களுக்கு எல்லா அதிகாரங்களையும் கொடுத்திருக்கிறார் என்பதை இவ்விரண்டு வசனங்களும் உறுதிபண்ணுகின்றன (எபேசியர் 1:20-21; மத்தேயு 28:18). "பூமியின் தாழ்விடங்கள்" என்பதைப் "பரலோகத்திற்குக் கீழேயுள்ள பூலோகம்" என்று அர்த்தம் கொள்ளல்வேண்டும். (யோவான் 3:13).

ஆ. 12,13 ஆகிய வசனங்கள். இயேசு தமது சபைக்கு தலைவர்களை வரமாகக் கொடுத்திருக்கிறார். இதனால் விசுவாசிகளுக்கு ஏற்படும் ஆதாயங்கள்.

1. "அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாவார்கள்".

2. இயேசு கிறிஸ்துவிலும் அன்பிலும் பிரசன்னத்திலும், பரிசுத்த ஆவியானவரின் பெலத்திலும், விசுவாசிகள் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராவார்கள்.

கிறிஸ்துவின் சரீரத்திலே ஒருமனப்பாடு (எபேசியர் 4:1-16)

"பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும், இயேசுகிறிஸ்து, சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்" என்பதை விசுவாசிகள் நினைவுகூர்ந்து செயல்பட வேண்டும். சபையின் தலைவர்கள் மூலமாக ஒவ்வொரு விசுவாசியும் ஆவிக்குரிய ரீதியாக வளர்ந்து பெலப்படுவார்கள். *(1கொரிந்தியர் 3:21-22).*

இ. இயேசு கிறிஸ்து இன்னும் தொடர்ந்து சில குறிப்பிட்ட விசுவாசிகளை சிறையாக்கி, அவர்களைத் தமது சபைக்கு வரங்களாக வழங்குகிறார். ஆகையினால்தான், இன்றைய தினமும், கிறிஸ்துவால் சிறையாக்கப்பட்டவர்கள், தேவனுடைய சபையில், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பரும் போதகரும் ஆகிய ஸ்தானங்களில், சபைக்கு வரங்களாக வழங்கப்பட்டிருக்கிறார்கள்.

ஈ. விசுவாசிகள் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் வளர வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாகும்.

3. கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருமனப்பாடு காணப்படுவதால் ஏற்படும் விளைவுகள் (4:14-16).

அ. 14-ஆவது வசனம். "நாம் இனிக் குழந்தை களாயிராமல்".

கிறிஸ்துவில் குழந்தையாயிருப்பது என்பது ஆவிக்குரிய ரீதியாக முதிர்ச்சி பெறாமலி ருப்பதைக் குறிக்கும் *(எபிரெயர் 5:13; 1பேதுரு 2:2).* ஆவிக்குரிய குழந்தைகளுக்கு தாங்களே பாதுகாத்துக்கொள்ளும் திராணியுமில்லை. கள்ளப்போதகர்களின் துர் உபதேசங்களுக்கு எளிதில் இணங்கி விடுவார்கள். இவர்கள் சமுத்திரத்தில் கட்டுப்பாடின்றி அலையாயும் கப்பலுக்கு ஒப்பானவர்கள். கிறிஸ்து தமது சபையில் நியமித்து வைத்திருக்கிற ஆவிக்குரிய தலைவர்களின் உபதேசங்களை விசுவாசிகள் கவனமாகக் கேட்டு, அவற்றுக்கு கீழ்ப்படிந்து ஜீவித்தால், அவர்கள் இனிமேல் ஆவிக்குரிய குழந்தைகளா யிருக்கமாட்டார்கள்.

ஆ. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து தமது அப்போஸ்தலர்களுக்கு இவ்வாறு கட்டளை கொடுத்திருக்கிறார். "நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" *(மத்தேயு 28:20).* ஆதிகால சபையின் விசுவாசிகள் "அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" *(அப்போஸ்தலர் 2:42).*

இ. கிறிஸ்துவின் சரீரத்தில் ஆவிக்குரிய தலைவர்களாக நியமிக்கப்படுபவர்களுக்கு மிகுந்த பொறுப்பு உண்டு. அவர்கள் பணத்தாசையுடையோராய் இருக்கக்கூடாது. அவர்கள் விசுவாசிகளை இறுமாப்பாய் ஆளுகை செய்யாமல், மந்தைக்கு மாதிரிகளாய் கண்காணிப்புசெய்ய வேண்டும் *(1பேதுரு 5:2-3).* "வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப் பண்ணுகிறோம்" *(2கொரிந்தியர் 4:2).* இதை ஆவிக்குரிய தலைவர்கள் அன்போடும் ஆறுதலோடும் செய்ய வேண்டும்.

கிறிஸ்துவின் சரீரத்திலே ஒருமனப்பாடு (எபேசியர் 4:1-16)

ஈ. 15-ஆவது வசனம். சுவிசேஷத்தின் சத்தியத்தையும், வேதவாக்கியங்களையும் சபையின் தலைவர்கள் அன்புடன் கைக்கொண்டு பிரசங்கிக்கும்போது சபையிலுள்ள விசுவாசிகள் அவர்களுடைய உபதேசங்களுக்கு கவனமாய் செவி கொடுப்பார்கள். இனிமேல் குழந்தைகளாயிராமல், தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளர்கிறவர்களாயிருப்பார்கள். இதன் வாயிலாக ஸ்தல சபைகளிலேயும் உலகம் முழுவதிலுமுள்ள கிறிஸ்துவின் உலக சபையிலும் விசுவாசிகளிடையே ஒற்றுமையும் ஒருமனப்பாடும் காணப்படும்.

உ. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒருமை காணப்படவேண்டும் என்று பவுல் கூறுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. "நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும் ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கு, நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்". மனுக்குலத்தை தேவன் நேசிக்கிறார் என்பதற்கு விசுவாசிகளிடையே காணப்படும் ஒற்றுமை ஓர் அடையாளம் ஆகும். விசுவாசிகளின் ஒற்றுமையே ஒரு வல்லமையான சுவிசேஷச் செய்தி ஆகும். இது அவிசுவாசிகளை சபைக்கு வருமாறு ஈர்க்கும்.

முடிவுரை

அ. ஒருவர் கிறிஸ்துவிற்குள் விசுவாசம் வைக்கும்போது, மற்ற சகவிசுவாசிகளோடு ஒற்றுமையாக இருக்குமாறு அழைக்கப்படுகிறார். கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பரிசுத்த ஆவியினாலே அபிஷேகிக்கப்படுகிறார். என்றாலும், இந்த ஒருமையைக் காத்துக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு விசுவாசியின் கடமையாயிருக்கிறது. விசுவாசிகள் மற்ற சக விசுவாசிகளோடு பழகும் போதும், தாழ்மை, சாந்தம், நீடியபொறுமை, தயவு ஆகிய நற்பண்புகளோடு பழகும்போதும், விசுவாசிகளிடையே ஒற்றுமையும் ஒருமனப்பாடும் காத்துக்கொள்ளப்படும்.

ஆ. கிறிஸ்து சபைக்கு தலைவர்களை ஆவிக்குரியவரங்களாகக் கொடுத்திருக்கிறார். அவர்களுடைய உபதேசங்களுக்கு விசுவாசிகள் கவனமாய் செவிகொடுத்து கீழ்ப்படியும் போதும் விசுவாசிகளிடைய ஒற்றுமை இருக்கும். விசுவாசிகளிடையே காணப்படும் ஒற்றுமை அவிசுவாசிகளிடையே தேவனுடைய நற்செய்தியை அறிவிக்கிறது. தேவன் அவர்களை நேசிக்கிறார். அவர்களை இரட்சிப்பதற்காகத் தேவன் இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார் என்னும் நற்செய்தியை விசுவாசிகளின் ஒற்றுமை இவ்வுலகத்திற்கு வெளிப்படுத்தும்.

இ. ஒற்றுமையை நாம் நாடுவோமாக! எல்லா வேற்றுமைகளையும் பிரிவினைகளையும் களைவோமாக! கோபம், பொறாமை, சண்டை, சச்சரவுகளை அகற்றுவோமாக! ஆவியின் கனியை சகல விசுவாசிகளிடையே வெளிப்படுத்துவோமாக! சமாதானத்தை காத்துக்கொள்வோமாக! முழுநேர ஊழியத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்போமாக!.

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது (பாகம்-1) (எபேசியர் 4;17-32)

முன்னுரை

அ. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஒற்றுமைக்காக பவுல் வேண்டுகோள் விடுப்பதிலிருந்து நான்காம் அதிகாரம் ஆரம்பமாகிறது, நம்முடைய இன்றைய வேதபாகத்தில் அப்போஸ்தலர், கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது என்பது என்ன என்பதைக்குறித்து விரிவாக விளக்குகிறார், பழைய வாழ்க்கை முறையினை முழுவதுமாக விட்டுவிட வேண்டும், பழைய சுபம் நீக்கப்படவேண்டும், விசுவாசி புதிய வாழ்க்கை முறையில் வாழ துவங்க வேண்டும். புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளவேண்டும்.

1. விசுவாசிகள் அஞ்ஞானிகளைப் போல் வாழ்க்கை நடத்தக் கூடாது (4:17-19)

அ. வசனம் 17-19. "புறஜாதிகளைப் போல இனி நடவாமலிருங்கள்". பவுல் மனந்திரும்பின புற ஜாதிகளுக்கு, கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்து கூறுகிறார். அவர்கள் அஞ்ஞானிகளைப் போலவே (அவிசுவாசிகள்) வளர்க்கப்பட்டும், வாழ்ந்தும் வந்தவர்கள். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு முன், அவர்கள்:

1. சிந்தனையில் வீணராய் இருந்தனர்.

2. புத்தியில் அந்தகாரப்பட்டிருந்தனர்.

3. தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்தனர்.

4. புசிப்பும், குடிப்பும், முகர்வதும், உணர்ச்சிவசப்படுவது மற்றும் பார்வைக்கு இன்பமானவைகள் முதலான மாம்ச இச்சைகளுக்கு தங்களை முழுவதும் ஒப்புக் கொடுத்திருந்தனர்.

5. காம விகாரத்தில் மூழ்கியிருந்த மேலும் சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே தொடர்ந்து நடப்பிக்க இச்சித்தனர்.

6. தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தியிருந்தனர் (ஆவியில் மரித்து இருந்தனர்)

7. உணர்வில்லாதவர்களாய் (சன்மார்க்கம்) இருந்தனர்.

ஆ. நாம் கிறிஸ்துவை கண்டடைவதற்கு முன், இதுதான் நம் ஒவ்வொருவரைக் குறித்த விளக்கம். நாம் கூட, இவ்வுலகில் அஞ்ஞானிகளைப் போல் தான் வாழ்ந்தோம். ரோமர் முதல் அதிகாரத்தில், புறஜாதிகளின் வாழ்க்கை என்பது என்ன என்பதைக் குறித்து அப்போஸ்தலர் விளக்கமாக விவரிக்கிறார்:

1. "தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க மனதில்லாதிருந்து, அவரை தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனிதர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளின் ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்... தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்". (ரோமர் 1:21-23,25,28)

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது (பாகம்-1) (எபேசியர் 4;17-32)

2. "பெண்கள் சுபாவ அநுபோகத்தை (பாலின சம்பந்தமான) சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து,... பொறாமையினாலும், கொலையினாலும் வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாயிருந்தனர். அவர்கள் புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், அன்பில்லாதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள்". (ரோமர் 1:26-32)

இ. வசனம் 17. பவுல், கர்த்தருக்குள் பக்தி வைராக்கியத்துடன் சொல்லி, எபேசிய விசுவாசிகளை எச்சரிக்கிறார், அவர் கர்த்தர் கூறியவற்றிற்கு சாட்சியளிக்கிறார். விசுவாசிகள் மற்ற புறஜாதிகள் நடக்கிறது போல் நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவரை விசுவாசிப்பதற்கு முன் அவர்கள் நடந்தது போல் இனி நடக்கவேண்டாம் இப்படிப்பட்ட காரியங்களை தொடர்ந்து நடப்பிப்பவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்கள் என்று தேவன் தீர்மானித்தது, நீதியான தீர்ப்பு. (ரோமர் 1:32)

ஈ.எபேசுவிலுள்ளபுதிதாக மனந்திரும்பியவர்களுக்கு பவுல் கூறியவைகள், இன்று கிறிஸ்துவை இன்னும் அறியாத நபர்களுக்கு ஊக்கத்தைக் கொடுப்பதாக உள்ளது. கர்த்தர் கொலைபாதகரையும், சுபபுணர்ச்சிக்காரர்களையும், விக்கிரகாராதனை செய்பவர்ளையும், தேவனைப் பகைப்பவர்களையும், மற்றும் தங்கள் கிரியைகளில் இரக்கமற்றிருப்பவர்களையும் மன்னிக்கிறார். தற்போது உன் வாழ்க்கை நடவடிக்கைகள் எப்படியிருப்பினும் அவர் உனக்கும் அதே காரியத்தைச் செய்வார். உன்னுடைய தவறான நடவடிக்கைகளுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவின்மீது விசுவாசத்தைப் பயிற்சித்து, மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதையே தேவன் உன்னிடம் கேட்கிறார். அப்பொழுது நீயும் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ ஆரம்பிப்பாய்.

2. விசுவாசிகள், தங்களுடைய பழைய மனிதனுடைய வாழ்க்கையை இனி வாழக் கூடாது. (4: 20-24).

அ. வசனம் 20-21. "நீங்களோ இவ்விதமாய்க்கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை". கிறிஸ்துவை அறிந்து கொண்டபோது, எபேசு விசுவாசிகள், அஞ்ஞானிகளைப் போல் வாழ்வதைக் கற்றுக்கொள்ளவில்லை. மாறாக இயேசு வாழ்ந்த நல்ல வாழ்க்கையைப் பற்றியும் ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றியும் போதிக்கப்பட்டனர். அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்ட மூன்று காரியங்களைபவுல் நினைவுபடுத்துகிறார்:

ஆ.1. வசனம்22. "பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு" முன்பு நடந்துகொண்டது போல் இனி வாழ்ந்திருங்கள். "பழைய மனுஷனையும் அவன் (பொல்லாத) செய்கைகளையும் களைந்து போடுங்கள்". (கொலோசெயர் 3:9)

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது (பாகம்-1) (எபேசியர் 4;17-32)

2. வசனம் 23. "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகுங்கள்" உள்ளான புதுப்பித்தல் நடைபெறவேண்டும். நீ இயேசுவைப்போல் மாற, பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய இடங்கொடுக்க வேண்டும் அவர் உன் உள்ளத்தைப் புதிதாக்கட்டும். (ரோமர் 12:2, 2கொரிந்தியர் 3:18)

3. வசனம் 24. "புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்". தேவனுடைய சாயலுக்கொப்பாய் மாறுங்கள். (கொலோசெயர் 3:10). வேறு திசையில் நடக்க ஆரம்பம் பண்ணுங்கள். தேவன் எவ்வாறு நீதியுள்ளவராகவும், பரிசுத்தமுள்ளவராகவும் இருக்கிறாரோ அவ்வாறே நீங்களும் நீதியுள்ளவர்களாயும், பரிசுத்தமுள்ளவர்களாயும் மாறுங்கள். (1பேதுரு 1:15-16). மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதில் நீதியைச் செய்யுங்கள். உங்கள் கிரியைகள் மற்றவர்களைப் பற்றி தவறான தப்பெண்ணம் கொண்டோ, பட்சபாதத்துடனோ இருக்கக்கூடாது. பழைய ஏற்பாட்டு தீர்க்கத்தரிசன புத்தகம் சகரியாவில், "பழைய மனிதனைக் கழைந்து" "புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளுங்கள்" என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டு எழுதப்பட்டுள்ளது. (சகரியா 3:1-9) இது இஸ்ரவேல் நாடு, எழுபது ஆண்டுகள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து மீட்கப்பட்டதைக்குறித்த தீர்க்கதரிசனம். பிரதான ஆசாரியனாகிய யோவா அழுக்கான வஸ்திரம் தரித்திருந்தார். "இவன்மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்து போடுங்கள்," என்று ஒரு தூதன் கூறினான். "பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச் செய்து உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன்," என்று அப்பொழுது அந்த தூதன் கூறினான். பிரதான ஆசாரியனான யோசுவாவின் வஸ்திரங்கள் எவ்வாறு மாற்றப்பட்டதோ, அவ்வாறே விசுவாசிகளும், "பழைய மனிதனைக் களைந்து போட்டு," "புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளவேண்டும்". அசுத்தமான பாவ வாழ்க்கை வாழ்வதை நிறுத்தி விட்டு கறையற்ற பரிசுத்த வாழ்க்கை வாழ துவங்க வேண்டும்.

ஈ.- "பழைய மனிதனைக் களைந்து," "புதிய மனிதனை தரித்துக் கொள்கிற" ஒரு கிறிஸ்தவனின் கிரியைகளைக் குறித்து, நான்காம் அதிகாரத்தின் மீதமான வசனங்களில் (25-32) அப்போஸ்தலர் விளக்குகிறார். கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இந்த கொள்கைகளைச் செயல்படுத்துகிறார்.

3. விசுவாசிகள் இனி ஒருபோதும் மற்றவர்களுக்குபொல்லாப்பு செய்யக்கூடாது. (4:25-32)

அ. வசனம் 25-32. விசுவாசிகள், "மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளும்" போது அவர்கள்:

1. ஒருவருக்கொருவர் பொய் பேசுவதை நிறுத்தி உண்மை பேச துவங்குவார்கள்.

2. தங்கள் இருதயத்தில் கோபத்தைப் பேணி வைக்காமல், தங்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகளை சீக்கிரமாக சரிசெய்து கொள்வார்கள்.

3.திருடுவதைத் தவிர்த்து, குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாக நலமான வேலை செய்வார்கள்.

4. மற்றவர்களைப் பாதிக்கும், அவதூறான வார்த்தைகள் பேசுவதை நிறுத்தி, மற்றவர்களின் கிறிஸ்தவ வாழ்க்கைக் கட்டப்படும்படியாக பேசி தொடர்பு கொள்வார்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது (பாகம்-1) (எபேசியர் 4;17-32)

5. சகலவிதமான கசப்பும், கோபமும், தூஷணமும், மற்ற துர்குணங்களும் நீங்கி, தயவாயும் ஒருவருக்கொருவர் மன்னிகிறவர்களாயும் இருப்பர்.

ஆ. வசனம் 30. உன்னில் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரை, பழையமனிதனின் நடத்தைப்படி வாழும் வாழ்க்கை துக்கப்படுத்தும். அது அவரை மனவருந்தச் செய்யும். அது அவருக்கு கவலையையும், ஆழ்ந்த துக்கத்தையும் உண்டாக்கும். பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதர். தேவனுடைய மக்கள், ஒருவருடன் ஒருவர் பொல்லாத நடத்தையுடன் தொடர்பு கொள்ளும் போது அவர் அவமதிக்கப்படுகிறார். அத்துடன் வெகுவாக மனம் வருந்துகிறார்.

ஆ. வசனம் 30. பழைய மனிதனின் வாழ்க்கையின் நடத்தைகள் எல்லாம், உன்னில் வாசம் பண்ணும், தேவனாகிய பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகிறது.

இ. ஆனால் விசுவாசிகள் "புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளும் போது," விசுவாசிகளின் வட்டத்தில் நற்கிரியைகள் நடை பெற ஆரம்பிக்கிறது.

1. விசுவாசிகளின் சரீரமாகிய சபை கட்டப்பட்டு, ஆவியில் பலப்படுத்தப்படுகிறது.

2. எல்லா அங்கத்தினர்களின் அடிப்படை தேவைகள் எல்லாம் சந்திக்கப்படுகிறது.

3. ஒவ்வொரு விசுவாசியும், தான் கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு பாகம் என்று அறிந்து கொள்கிறான்.

4. அவர்கள் மத்தியில் பிசாசு செல்வாக்குடன் தன் கிரியைகளை நடப்பிக்க முடியாது.

ஈ. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலுள்ள விசுவாசிகள், "கிறிஸ்துவைப் போல் வாழ வேண்டும்" என்று தொடர்ந்து ஞாபகப்படுத்தப்படவேண்டியது அவசியமாகும். திரளான அவிசுவாசிகள் மத்தியில் நாம் வாழும்போது, உலகம் ஒருவிதமாக நம் மீது ஒட்டிக் கொள்கிறது. பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளிருந்து பேசுவதற்கு ஏற்ப நாம் தொடர்ந்து, "நம் ஆடைகளை தூசி தட்டி" "நமது உள்ளங்களை தெளிவாக்கி" சுத்தப்படுத்த வேண்டும். எபேசு சபைக்கு இந்தக் கடிதத்தை அவர் எழுதத் தூண்டியதற்கு இது ஒரு காரணமாகும். நான் இந்த வேத பாடத்தை உங்களுக்கு கொடுத்ததற்கும் இதுவே காரணம்!

முடிவுரை

அ. விசுவாசிகள் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்போது, அஞ்ஞானிகளைப் போலும், தங்கள் பழைய மனிதனைப்போலும், இனி ஒருபோதும் வாழக்கூடாது. ஒருவருக்கொருவர் பொல்லாப்பு செய்வதையும் விட்டு விடவேண்டும். "பரலோகத்தில் இருக்கிற, என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி, "கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை... அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்". (மத்தேயு 7:20-21)

ஆ. இந்த போதனைகளைக் கேட்ட அநேகரிடம் பரிசுத்த ஆவியானவர் பேசியிருக்கிறார். நீ பொல்லாத கிரியைகளை நடப்பித்தாய் என்றும், மற்றவர்களிடம் தகாத முறைகளில் நடந்து வந்துள்ளாய் என்றும் உன் இருதயத்தில் உனக்குத் தெரியும். நீ மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

BELLWETHER INTERNATIONAL

புதிய ஏற்பாடு விளக்கவுரை
THE NEW TESTAMENT COMMENTARY

எபேசியர்

GOOD NEWS PUBLISHERS

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது (பாகம்-1)
(எபேசியர் 4;17-32)

தீங்கான காரியங்கள் செய்வதை நிறுத்தி. கிறிஸ்து உனக்குப் போதித்த நல்ல காரியங்களை நடப்பிக்க துவங்கு. மற்றவர்களுக்கு பயன்படும் காரியங்களையும், விசுவாசத்தில் அவர்கள் கட்டப்படத்தக்கவற்றையும் செய்ய துவங்கு.

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது (பாகம் 2) (எபேசியர் 5:1-20)

முன்னுரை

தேவனையும், கிறிஸ்துவையும் விசுவாசிகள் பின்பற்றுவதை இந்த வேத பாகம் சார்ந்துள்ளது. தங்கள் பெற்றோரைப் போல் நடக்கும் பிள்ளைகளைப் போல் விசுவாசிகள் இருக்க வேண்டும். தேவன் அன்பாக இருக்கிறார். அவருடைய பிள்ளைகள், அன்பின் வாழ்க்கை வாழவேண்டும். தேவன் ஒளியாக இருக்கிறார். ஒளியின் பிள்ளைகளாக அவருடைய பிள்ளைகள் வாழவேண்டும். தேவன் சர்வ ஞானம் உள்ளவர். ஞானமுள்ள பிள்ளைகளாக அவருடைய பிள்ளைகள் வாழவேண்டும். ஆகவே கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது என்பது தேவனைப் போலவும், கிறிஸ்துவைப் போலவும் நடப்பதில் (பின்பற்றுவதில்) உள்ளது.

1. அன்பின் வாழ்க்கை வாழ்வது (5:1-7).

அ. வசனம் 1-2. "அன்பு" கூறுவது என்பது மற்றவர்களுக்கு நம்மை தத்தம் செய்வது. அவர்களுடைய நன்மைக்காக கருத்துடன் நடப்பது, அதில் விருப்பத்துடனும் உற்சாகத்துடனும் ஈடுபடுவது, அவர்களுக்காக உன் வாழ்க்கையையே ஒப்புக்கொடுப்பது. அன்பின் வாழ்க்கை வாழ்வது, தேவனுடைய அன்பு, கிறிஸ்துவினுடைய அன்பைப் போலவே, மாறாமல் அன்புகாட்டுவது. "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை கொடுத்து இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). இயேசு தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்தார். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க வேண்டும். (1யோவான் 3:16).

இது தான் இந்த இரண்டு வேத வசனங்களில் பவுல் கூறுகிறார். இவ்வாறுதான் நாம் தேவன் மற்றும் கிறிஸ்துவின் அன்பைப் பின்பற்றவேண்டும்! நாம் நம்மையே அர்ப்பணிக்க வேண்டும், மற்றவர்கள் நன்மைக்காக கருத்துடன், உற்சாகத்துடன் நம் விருப்பத்தைக் காட்டி, மற்றவர்களுக்காக நம் ஜீவனையும் கொடுக்க வேண்டும்.

ஆ. வசனம் 3-4. இங்கு பவுல் "அன்பின் வாழ்க்கைக்கு" எதிர்மாறான நடத்தைகளைக் குறித்து கூறுகிறார். உங்களுக்குள் இப்படிப்பட்டவைகள் காணப்படக்கூடாது:

1. பாலின சம்பந்தமான துன்மார்க்க நடத்தைப் பற்றி பேர் முதலாய் சொல்லப்படவும் கூடாது,.

2. அசுத்தம் அல்லது பொருளாசை (இது விக்கிரக ஆராதனைக்கு சமம்) ஆகிய இவைகள் எந்த வகையிலும் காணப்படக்கூடாது.

3. வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்.

இ. வசனம் 5-6. "அன்பின் வாழ்க்கைக்கு" மாறான நடத்தையை தவிர்க்க, இரண்டு காரணங்கள் உண்டு.

1. துன்மார்க்கம், அசுத்தம், மற்றும் பொருளாசை உடையவர்கள், கிறிஸ்து மற்றும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் சுதந்திரமாக எதுவும் பெற்றுக் கொள்ள முடியாது.

2. அவர்களுடைய கீழ்ப்படியாமையினிமித்தம் தேவகோபாக்கினை அவர்கள் மேல் வரும்.

ஈ. வசனம் 7. "அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள்" "ஒரு பங்காளி" மற்றொருவனுடன் ஒரு வேலையில் அவனைப்போல் ஈடுபடுகிறான்.

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது (பாகம் 2) (எபேசியர் 5:1-20)

நாம் கிறிஸ்துவுடனும், தேவனுடனும் சேர்ந்து அவர்களைப்போல் நடக்கவேண்டும் (அவருக்கு பங்காளியாயிருக்க வேண்டும்). நாம் மற்றவர்களுக்காய், விருப்பத்துடனும், கருத்துடனும் நம் வாழ்க்கையைத் தத்தம் செய்யவேண்டும்.

உ. பாலின சம்பந்தமான துன்மார்க்கம், அசுத்தம், பொருளாசை மற்றும் வம்பு, புத்தியீனமான பேச்சு, பரியாசம் ஆகிய இவைகளை நடப்பிக்கிறவர்களோடு கிறிஸ்தவர்கள் பங்காளிகளாய் இருக்கக் கூடாது. நாம் இப்படிப்பட்டவர்களோடு பங்காளிகளாய் இருந்திருப்போமானால், இன்றே மனந்திரும்பவேண்டும். கீழ்ப்படியாதவர்கள் மீது தேவகோபம் வர ஆயத்தமாயிருக்கிறது!

2. ஒளியின் பிள்ளைகளாய் வாழ்க்கை நடத்துங்கள். (5:8-14)

அ. வசனம் 8. பவுல் எபேசியரைப் பார்த்து "முற்காலத்தில் அந்தகாரமாயிருந்தீர்கள்", என்று கூறும்போது, அவர்கள் முன்பு தகாதவைகளை நடப்பித்தனர் என்று பொருள்பட சொல்கிறார். அவர்கள், சத்திய கதிர்கள் ஊடுருவிச் செல்லக் கூடாத ஒரு குடையின் கீழ் இருந்தனர். அப்போஸ்தலன், "நாம் (கிறிஸ்தவர்கள்)இரவுக்கும் இருளுக்கும் (இனிமேல்) உள்ளானவர்கள் அல்ல" (1தெசலோனிக்கேயர் 5:5) என்று கூறுவதற்கும் இதுவே காரணமாகும். அவர்கள் இனிமேல், சன்மார்க்கம் மற்றும் ஆவிக்குரிய காரியங்களில் இருளடைந்தவர்கள் அல்ல சுவிசேஷ சத்திய கதிர்கள் அவர்களைப் பிரகாசிப்பிக்கிறது.

ஆ. வசனம் 8-10. "இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்". "வெளிச்சமாயிருக்கிறீர்கள்," என்பது வெளிச்சத்தைக் கொடுப்பது, ஒளி ஏற்பட காரணமாயிருப்பது, ஒளியை வெளிப்படுத்துவது, ஒளியாய் பிரகாசிப்பது என்று பொருள்படும். நாம் ஒளியின் பிள்ளைகள், நாம் கிறிஸ்துவை ஒத்து காணப்படுகிறோம், உலகத்திற்கு கிறிஸ்துவை நம் சொந்த வாழ்க்கை மூலம் வெளிப்படுத்துகிறோம்.

1. ஆகவே தான் பவுல் எபேசு மக்களிடம் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள், என்று கூறுகிறார். நற்குணம், நீதி, சத்தியம் ஆகிய சன்மார்க்க பண்புகளைக் கிறிஸ்தவர்கள் நடைமுறையில் காட்ட வேண்டும். அவர்கள் நற்குணசாலிகளாய் நற்கிரியைகளை நடப்பிக்க வேண்டும். அவர்கள் நன்நடத்தையுள்ளோராய் மற்றவர்கள் முன் நீதியுடன் கிரியை செய்யவேண்டும். அவர்கள் செய்கைகள் யாவற்றிலும் உண்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன் பிரகாசிக்கக்கடவது" (மத்தேயு 26:39).

2. "கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்", என்றும் பவுல் கூறுகிறார். ஒளியில் நடக்கிற ஒருவனுக்கு, கர்த்தருக்குப் (சித்தமானது) பிரியமானது இன்னதென்று தீர்மானிக்க முடியும் (ரோமர் 12:2). எனவே, அவன், தன் சொந்த சித்தத்தைச் செய்வதைக்காட்டிலும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதிலேயே கருத்துள்ளவனாக இருப்பான். அவன் கர்த்தராகிய இயேசு ஜெபித்தது போலவே, "என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது," என்று ஜெபிப்பான். (மத்தேயு 26:39).

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது (பாகம் 2) (எபேசியர் 5:1-20)

இ. வசனம் 11-12. "அந்தகாரக் கிரியைகள் வெளியரங்கமாகும்". ஒளியின் பிள்ளைகளாக வாழ்ந்து, கர்த்தருக்குப் பிரியமானவைகளைச் செய்யும்போது, விசுவாசி தன்னைச் சுற்றியுள்ளவர்களிடம் காணப்படும் அந்தகாரக் கிரியைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறான். இந்த உலகத்தின் இருளில் பிரகாசமான ஒளிரும் விளக்கைப் போல ஒரு விசுவாசி இருக்கிறான். "மனுஷனுடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால், அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகின்றனர். பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான்". (யோவான் 3:19-20). நீங்கள் அவர்களைச் சூழ்ந்து இருக்கும் போது, உங்களிலிருந்து புறப்படும் ஒளிக்கதிர்களைத் தடுக்க முடியாது. நீங்கள் அவர்கள் பொல்லாத கிரியைகளை வெளிப்படுத்துகிறீர்கள். இக்காரணத்தினால் தான் இயேசுவை அநேக மக்கள் வெறுத்தனர். உங்களிடம் அநேகர் வெறுப்படைவதற்கும் இது காரணமாகும்.

ஈ. வசனம் 13-14. "வெளிச்சத்தினால் வெளியரங்கமாகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கும்" (யாவரும் அறிய காணப்படும்) ஒளி யாவற்றையும் வெளியரங்கமாக்குகிறது. விசுவாசிகளின் ஒளி அவர்கள் மீது பிரகாசிக்கும்போது, அவர்களுடைய பொல்லாத அந்தகார கிரியைகள், எல்லோரும் கண்டு, அறியும்படியாக, தெளிவாக வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படும்.

உ. வசனம் 14. "தூங்குகிற நீ விழித்து மரித்தோரைவிட்டு எழுந்திரு" "தூங்குகிற நீ விழித்து மரித்தோரைவிட்டு எழுந்திரு அப்பொழுது கிறிஸ்து உன்மேல் பிரகாசிப்பார்" என்ற மேற்கோள், ஆதி கிறிஸ்தவர்களால் பாடப்பட்ட ஒரு பாடலின் ஒரு பாகமாக, ஒரு சமயம் இருக்கக் கூடும். "தூங்குகிறவன்", "மரித்தவன்" என்ற சொற்கள் ஒரு பாவியை விளக்குவதாகும். ஆவிக்குரிய மரணத்தினின்று, ஒரு பாவி எழுப்பப்பட ஒரே வழி கிறிஸ்துவின் ஒளி அவன் மீதுபிரகாசிப்பதினால் மட்டுமே. இந்தச் சத்தியம் இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் மீது மிக முக்கியமான பொறுப்பை ஏற்படுத்துகிறது. அவர்கள் "தங்கள் ஒளியை பிரகாசிக்கச் செய்வார்களானால்" மக்கள் கிறிஸ்துவைக் கண்டடைவார்கள். அவர்கள் "தங்கள் விளக்கை மரக்காலால் மூடிவைப்பார்களேயானால்," மக்கள் கிறிஸ்துவைக் கண்டுகொள்ள முடியாது. (மத்தேயு 5:14-16). அதற்கு பதிலாக தேவகோபம் அவர்கள் மீது வரும்.

3. ஞானமுள்ள பிள்ளைகளைப்போல் வாழ்க்கை நடத்துங்கள். (5:15-20).

அ. வசனம் 15. "ஞானமுள்ளவர்களைப் போல் நடந்துகொள்ளுங்கள்". அன்பின் வாழ்க்கை வாழுங்கள், வெளிச்சத்தின் பிள்ளைகளைப்போல் வாழ்க்கை நடத்துங்கள் என்று ஏற்கனவே பவுல் நமக்கு கூறியிருக்கிறார். "(கிறிஸ்துவுக்கு) புறம்பேயிருப்பவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து கொள்ளுங்கள்" (கொலோசெயர் 4:5).

ஆ. வசனம் 16-17. "ஞானத்தோடு வாழும்" விசுவாசிகள், அவிசுவாசிகள் மத்தியில் கீழ்க்கண்டவாறு நடந்துகொள்வார்கள்.

1. கிடைக்கும் ஒவ்வொரு தருணத்தையும் எவ்வளவு அதிகம் பயன்படுத்தக்கூடுமோ அவ்வளவு பயன்படுத்துவர். "உங்கள் வெளிச்சம் அவர்கள்முன் பிரகாசிக்கக்கடவது" என்றபடி ஒவ்வொரு வினாடிப்பொழுதையும் நலமாகப் பயன்படுத்துவர்.

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது (பாகம் 2) (எபேசியர் 5:1-20)

கிடைக்கும் எல்லா தருணங்களையும், மற்றவர்களை அந்தகாரத்திலிருந்து ஒளிக்குள் திருப்ப பயன்படுத்துவார்கள். உலகத்தில் அதிக பொல்லாப்புக் காணப்படுகிறது. இந்த காலம் முடியும்தருணம் அது மிகுதியாக பெருகும். நாட்கள் செல்லச் செல்ல, மனிதர்முன் உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கச் செய்வது மிகக் கடினம்!.

2. கர்த்தருடைய சித்தம் இன்னதென்று அறிந்து கொள்ளுங்கள். "சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்" (எபேசியர் 1:10) என்பது தேவனுடைய சித்தம். கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருப்பவர்கள் அவரைத் துதிப்பதும், துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத சக்திகளுக்கும் முன்பாக அவருக்கு மகிமை கொண்டுவருவதும் தேவனுடைய சித்தம். (எபேசியர் 1:20). ஆகவே நாம் கிடைக்கும் தருணங்களில் அதிகமானவற்றை, அவிசுவாசிகளை இருளிலிருந்த ஒளிக்குக் கொண்டு வருவதில் செலவிடவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

இ. வசனம் 18. "ஆவியினால் நிறைந்திருங்கள்". மறுபடியும், மறுபடியுமாக மதுபானத்தால் நிறைந்திருப்பதற்கு பதிலாக, மறுபடியும் ஆவியினால், விசுவாசிகள் நிரப்பப்படவேண்டும். ஆதி சபையில், பெந்தெகொஸ்தே நாளன்று விசுவாசிகள் ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷ பணிசெய்கின்ற வேளைகளிலும் திரும்ப, திரும்ப ஆவியினால் நிரப்பப்பட்டனர்.

1. சனகரிப் சங்கத்திற்கு முன் பவுல் நின்றபோது, (அப்போஸ்தலர் 4:8).

2. விசுவாசிகள் ஜெபித்த பின், (அப்போஸ்தலர் 4:31).

3. மாயவித்தைக்காரனுக்கு எதிராய் பவுல் நின்றபோது. (அப்போஸ்தலர் 13:9).

ஈ. வசனம் 19. நமது ஆராதனைகளில் ஆவியினால் நிரப்பப்படுவதும் (திரும்ப, திரும்ப) காணப்படவேண்டும். சங்கீதங்களிலிருந்தும், மற்றவேத பாகங்களிலிருந்தும், ஆவியானவரால் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்ட பாடல்களிலிருந்தும், பாட்டுக்களை நாம் பாடலாம். நாம் சங்கீதக் கருவிகளையும் இசைக்கலாம். நாம் யாவரும் சேர்ந்து, கர்த்தருக்கு நமது இருதயங்களிலிருந்தும் பாட்டு பாடலாம். நான் சந்திக்கும், அநேகமான எல்லா சபைகளிலும் இது நடைபெறுவதை பார்க்கிறேன். சிலர் அநேக வாத்தியக்கருவிகளுடனும், சிலர் ஒரு சில சங்கீதக் கருவிகளுடனும் பாடுகின்றனர். ஆனால் யாவரும், "கர்த்தருக்கு இருதயத்திலிருந்து பாடல்கள் இசைக்கின்றனர்," நாம், "மற்றவர்களுக்கு முன்பாக ஞானமாய் வாழ்க்கைநடத்த", பரிசுத்த ஆவியானவரால் ஞாபகப்படுத்தப்படுகிறோம். முதலிடம் கொடுக்கப்படவேண்டியவற்றிற்கு முதலிடம் கொடுத்து அடுத்து சரியான வரிசைகிரமாக உன்னுடைய ஒழுங்கை காத்துக் கொள்.

முடிவுரை

அ. "கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது", குறித்து பவுல் தொடர்ந்து விவரித்து, "தேவனையும், கிறிஸ்துவையும் போல் நடக்கவேண்டும்" (பின்பற்றவேண்டும்) என்று கூறுகிறார்.

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது (பாகம் 2) (எபேசியர் 5:1-20)

1. அன்பின் வாழ்க்கை வாழுங்கள்

2. ஒளியின் பிள்ளைகளாய் வாழுங்கள்,

3. ஞானமுள்ள பிள்ளைகளைப்போல் வாழுங்கள். அதாவது கிடைக்கும் தருணங்களில், அதிகமானவர்களை அவிசுவாசிகளை, அந்தகாரத்தினின்று, ஒளிக்குள் திருப்ப பயன்படுத்துங்கள்.

ஆ. இன்று மறுபடியுமாக, நாம் கிறிஸ்தவ வாழ்க்கையை எவ்வாறு வாழுகிறோம் என்பதைத் திருப்பிப்பார்க்க அழைக்கப்படுகிறோம். நம்முடைய தவறான நடத்தைக்காகவும், நம்மைச்சுற்றி, மரிக்கும் இழந்துபோன, சிநேகிதர்கள், உறவினர்கள் மற்றும் அயலகத்தார்கள் ஆகிய இவர்களைக் குறித்து கவலையற்று இருந்தமைக்காகவும் மனந்திரும்ப பரிசுத்த ஆவியானவரால் ஊக்கப்படுத்தப்படுகிறோம். “மனிதர் தங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்பதே தேவனுடைய சித்தமாகும்.

விசுவாசிகளுக்குள் தொடர்பு (எபேசியர் 5:21-6-9)

முன்னுரை

அ. விசுவாசிகளுக்குள் உள்ள தொடர்புகளைக் குறித்து விவாதிப்பதற்கு ஆரம்பமாக, பவுல் இவ்வாறு கூறுகிறார், "தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" (எபேசியர் 5:21). இந்த விதமான தொடர்புகளில் இரண்டு பக்கத்தில் உள்ளவர்களுக்கும் பொதுவான, பொறுப்பு காணப்படுவதை, இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்ளலாம். ஆகவே பவுல், "மனைவிகளே உங்கள் கணவன்மார்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்" என்று கூறி, அடுத்து இவ்வாறும் கூறுகிறார், "கணவன்மார்களே, உங்கள் மனைவிகளிடம் அன்பு கூருங்கள்" "பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்திருங்கள்" என்று கூறும்பொழுது, அடுத்து அவர் இவ்வாறும் கூறுகிறார், "பெற்றோரே உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாதிருங்கள்" (மனம் கசப்படைவது, மனம்தளர்ந்து போவது) "வேலைக்காரரே, உங்கள் எஜமான்களாயிருப்பவர் களுக்கு கீழ்ப்படிந்திருங்கள்," என்று கூறும்பொழுது, "எஜமான்களே, வேலைக்காரர்களிடம் கடுஞ்சொல்லை விட்டு விடுங்கள்" என்றும் பவுல் கூறுகிறார். "விசுவாசிகளுக்குள் உள்ள உறவு" நான்காம் அதிகாரத்தில் ஆரம்பித்து கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதை அடுத்து தொடர்ந்து வருவதாகும்.

1. கணவன்மார்கள், மனைவிகளுக்கு இடையே உள்ள உறவு (5:22-33).

அ. வசனம் *22,24,33.* "மனைவிகள் தங்கள் கணவன்மார்களுக்குள் கீழ்ப்படிந்து, பயபக்தியாயிருக்கக் கடவர்கள்" "கீழ்ப்படிந்திருங்கள்" என்ற சொல் பணிந்து நடப்பது, அடங்கி இருப்பது என்று பொருள்படும்.

ஆ. வசனம் *23.* "கணவன் தன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்" ஒன்று கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் பவுல், "மனைவிக்கு, கணவன் தலையாயிருக்கிறான்" என்று கூறியிருக்கிறார் (1கொரிந்தியர் 11:3). "தலை" என்ற சொல், "ஆதி", "துவக்கம்" என்று பொருள்படும். அவன் உண்மையாக கூறுவது, "மனுஷிக்குத் துவக்கம் மனிதன்" இந்த வேத பாகத்தில், "தலை" என்ற சொல்லை இந்த பொருள்படவே கூறுகிறார். ஆகவே இந்த வசனம், "கணவனே, மனைவிக்குத் துவக்கம்" என்று வாசிக்கப்படவேண்டும். இதினிமித்தம் அவள் தன் கணவனைக் கனப்படுத்தி, கீழ்ப்படியவேண்டும்.

இ. சிருஷ்டிப்பின் வரலாற்றில், மனிதனுடைய விலா எலும்பின் ஒரு பாகத்திலிருந்து, ஸ்திரீ உருவாக்கப்பட்டாள் என்று வாசிக்கிறோம். மனிதன், "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சுமானவள்" என்று கூறுகிறான். (ஆதியாகமம் *2:22-23*). "இக்காரணத்தினாலேயே, மனிதன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்திருப்பான். இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். (ஒரே சரீரத்தின் பாகமாயிருப்பார்கள்) (ஆதியாகமம் *2:24*). ஆகவே தான் பவுல், "கணவன்மார்கள், தங்களில் அன்பு கூருவதுபோல், தங்கள் மனைவிகளில் அன்புகூரவேண்டும்...தங்கள் சொந்த சரீரங்களில் அன்புகூருவதுபோல்...தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன் சொந்த சரீரத்தில் அன்புகூருகிறான்...தன் சொந்த சரீரத்தை பகைத்தவன் ஒருவனுமில்லை". (எபேசியர் *5:28-29,33*).

ஈ. ஒரு மனைவி தன்னுடைய கணவனை கனம் பண்ணுவதும், கீழ்ப்படிவதும் சிருஷ்டிப்பின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. சிருஷ்டிப்பில், மனிதனும்,

விசுவாசிகளுக்குள் தொடர்பு (எபேசியர் 5:21-6-9)

மனுஷியும் ஒரே மாம்சமாக இருந்தனர், இருவரும் ஒரே மாம்சமாகின்றனர். ஆகவே அவர்கள் பிரிந்திருக்கக் கூடாது என்று இயேசு கூறுகிறார். (மத்தேயு 19:3-6). பவுல் இங்கு மனைவி தன்னுடைய கணவனுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று கூறுகிறார். ஏனெனில், சிருஷ்டிப்பின்போது, அவள் மனிதனின் விலா எலும்பின் ஒரு பாகத்திலிருந்து உருவாக்கப்பட்டாள். மனுஷி தோன்றுவதற்கு மனிதனே ஆரம்பமாகும்.

உ. கிறிஸ்து சபையில் அன்புகூருவது போல கணவன் தன் மனைவியிடம் அன்புகூருவதைத்தான், கீழ்ப்படிதல் அடிப்படையாகக் கொண்டது.

1. கிறிஸ்து சபையில் இரட்சகர் (வசனம் 23).

2. அவர் சபைக்காகத் தம்மைதாமே அர்ப்பணித்தார். (வசனம் 25).

3. சபை சம்பூரணமாக இருப்பதற்குத் தேவையான யாவற்றையும் கொடுக்கிறார். (வசனம் 26-27).

4. அவர் சபையை போஷித்து, கண்காணிக்கிறார் (வசனம் 29).

ஆகவே, கணவன்மார்கள் தங்கள் மனைவிகளிடம் கிறிஸ்து எவ்வளவாக சபையில் அன்புகூருகிறாரோ அவ்வளவாய் அன்புகூரவேண்டும். இது கணவன், மனைவி ஆகிய இருவருக்கும் இடையே இருக்கவேண்டிய பொதுவான பொறுப்பை வெளிப்படுத்துகிறது.

ஊ. கணவன், மனைவி ஆகிய இருவர்களுக் கிடையேயுள்ள தொடர்பு குறித்து பவுல் போதிப்பது உண்மையில், இயேசு கூறிய பொன் சட்டத்தில் காணப்படுகிறது. "உன்னில் அன்புகூருவதுபோல் உன் அயலானிடமும் அன்பு கூருவாயாக" (மத்தேயு 19:19). "மற்றவர்கள் உங்களுக்கு எதைச்செய்ய விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும், அவர்களுக்குச் செய்யுங்கள்" (லூக்கா 6:31). கணவன்மார்கள், தங்கள் மனைவிகள் தங்களுக்கு எதைச் செய்யவேண்டும்மென்று விரும்புகிறார்களோ, அப்படியே அவர்களுக்கு, அவர்கள் செய்யவேண்டும்!.

எ. வசனம் 24. "எல்லாவற்றிலும்" என்பது நியாயப்பிரமாணம் மற்றும் கர்த்தரின் பார்வையில் சரியானது ஆகிய யாவற்றிற்குள்ளும் அடங்கியே, கீழ்ப்படிதல் இருக்கவேண்டும். பாவக்கிரியைகளும், கிறிஸ்து மற்றும் வேதத்தின் கட்டளைகளுக்கு விரோதமானவர்களும் இத்துடன் சேர்க்கப்படமாட்டாது. சப்பீராள், பரிசுத்த ஆவியானவருக்கும், சபைக்கும் விரோதமாக பொய் சொல்வதில் தன் கணவனுடன் ஒருமனப்பட்டதினால் பாவம் செய்ததுபோல், தவறு செய்ய, ஒரு பெண் திட்டமாக விரும்பமாட்டாள். (அப்போஸ்தலர் 5:1,9).

ஏ. வசனம் 22. "ஒரு மனைவி கர்த்தருக்குக் கீழ்ப்படிவது போல்". தன் கணவனுக்குக் கீழ்படிய வேண்டும் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில், இதற்கு ஒத்த வசனத்தில், "மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" என்று கூறுகிறார். (கொலோசெயர்3:18). ஒரு கிறிஸ்தவ மனைவி தன்கணவனுக்குக் கீழ்ப்படிந்து, தன் கடமைகளைச் செய்யும் போது, அது "கர்த்தருக்கேற்கும் படி" செய்யப்படுகிறது.

விசுவாசிகளுக்குள் தொடர்பு (எபேசியர் 5:21-6-9)

ஒரு கணவனும் மனைவியும் ஒற்றுமையுடன் வாழ, திட்டமான வழிகாட்டும் குறிப்புகள், அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் "சமாதான வாழ்க்கை" வாழவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். (1கொரிந்தியர் 7:15). திருமணமான தம்பதிகள் முதுமை அடைந்து, அவர்கள் பிள்ளைகள் தனி குடும்பமானபின், சமாதானத்துடன் வாழ்வதும், ஒருவருக்கொருவர் கனம் பண்ணுவதும் எவ்வளவு முக்கியம் என்பதை விளங்கிக் கொள்வார்கள்.

2. பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும் இடையேயுள்ள தொடர்பு. (6:1-4).

அ. வசனம் 1-3. "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படிந்திருங்கள், இது நியாயம்" "கீழ்ப்படிந்திருங்கள்" என்ற சொல், நீங்கள், கீழானவர்கள் உங்கள் பெற்றோர் கூறுவதை கவனமாகக் கேட்கவேண்டும் என்று பொருள்படும்' "கர்த்தருக்குள்" கர்த்தருக்கு பக்தியுடன் வேதவசனங்களுக்கு ஒத்ததுமான யாவற்றிற்கும், பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியவேண்டும் நியாயப் பிரமாணத்திற்கும், தேவனுடைய வார்த்தைக்கும், கிறிஸ்துவின் போதனைகளுக்கும் விரோதமாக இருக்குமாயின் அவர்கள் கீழ்ப்படிய வேண்டியதில்லை. "இதுநியாயம்" பெற்றோர் பிள்ளைகளை இவ்வுலகத்திற்குள் கொண்டுவந்துள்ளனர் மற்றும் அவர்களைவிட அறிவில் மேம்பட்டவர்கள்.

ஆகவே பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிவது நியாயம். பிள்ளைகள் பெற்றோர் கூறுவதற்கு செவிசாய்க்கும்போது எல்லாம் அவர்களுக்கு மேன்மையானதாக நடக்கும், அவர்கள் "வாழ்நாளும் நீடிக்கும்", "என் பிள்ளைகளே, நீங்கள் தகப்பன் போதகத்தைக் கேளுங்கள்" (நீதிமொழிகள் 4:1). "அவள் பிள்ளைகள் எழும்பி, தங்கள் தாயை பாக்கியவதி என்கிறார்கள் (நீதிமொழிகள் 31:28).

இ. வசனம் 2. பிள்ளைகள், "அவர்களுடைய தகப்பனையும் தாயையும் கனம்பண்ணவேண்டும்" என்று அறிவுறுத்தப்படுவது, முதல் முதலாவது, எழுதப்பட்ட மோசேயின் நியாயப்பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டது. "உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன்னுடைய தகப்பனையும், தாயையும் கனம்பண்ணுவாயாக" (யாத்திராகமம் 20:12). "நீ நன்றாய் இருப்பதற்கு உன்னுடைய தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுவாயாக" (உபாகமம் 5:1). ஆகவே அப்போஸ்தலனாகிய பவுல், "பிள்ளைகளே, நீங்கள் நன்றாய் இருப்பதற்கும், இவ்வுலகத்தில் நீடித்த வாழ்நாளை நீங்கள் அனுபவிப்பதற்கும், உங்கள் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவீர்களாக", அவர்களை கனம் பண்ணுவது என்பது, அவர்களை மிகவும் விலைபெறப்பட்டவர்களாக மதித்து, அவர்களுக்கு மரியாதை செலுத்தவேண்டும்.

ஈ. வசனம் 4. "தகப்பன்மாரே நீங்கள் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாதீர்கள்" பிள்ளைகள் கோபமடையத்தக்கதாய் (பிள்ளைகள் மனக்கசப்படைந்து, சோர்ந்து திடனற்று போகாதபடி) அவர்கள் மீது கடினமாக உங்கள் அதிகாரத்தை செலுத்தாதிருங்கள். மாறாக (பெற்றோர்கள்) கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்க்கவேண்டும்.

உ. பெற்றோர்களுக்கு பயிற்சி வழிகாட்டுவது வேதவசனங்கள். "வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்படுகிறது.

விசுவாசிகளுக்குள் தொடர்பு (எபேசியர் 5:21-6-9)

அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பித்தலுக்கும் பயனுள்ளதாயிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16). வேதவசனங்களை அறிவுறுத்துவதற்கும், அதில் பயிற்சியளிக்கப் பயன்படுவது மட்டுமல்லாமல், பெற்றோர், "கர்த்தருக்குள் தங்களைபோதித்து, பயிற்சி பெற்று", தங்கள் பிள்ளைகள் முன் கிறிஸ்துவைப்போல் வாழ்க்கை வாழ்ந்து காட்டவேண்டும்.

ஊ. பிள்ளைகள் கர்த்தருக்குள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியும் போதும், பெற்றோர் தங்கள் வாக்கிலும் நடத்தையிலும் தங்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருந்து தங்கள் பிள்ளைகளை பயிற்றுவிக்கும் போதும், குடும்பத்திற்குள் ஒற்றுமை இருக்கும். சில சந்தர்ப்பங்களில், பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையே கிறிஸ்தவ குடும்பங்களில் சச்சரவு ஏற்படலாம். இருந்தாலும் பிள்ளைகள் பெற்றோரைக் கனம்பண்ணி, மரியாதை செலுத்தும்போதும், பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கவனமாக நடந்து கொள்ளும்போதும், அதிக கஷ்டமின்றி அவை ஒரு முடிவுக்குவந்துவிடும். பெற்றோருக்கும் பிள்ளை களுக்குமிடையே, பொதுவான பொறுப்புள்ள தொடர்பு உண்டு.

3. எஜமான்களுக்கும், வேலைக்காரர்களுக்குமிடையே உள்ள தொடர்பு (6:5-9).

அ. வசனம் 5. "வேலைக்காரரே உங்கள் எஜமான் களுக்குக் கீழ்ப்படியுங்கள்" என்று பவுல் ஒரு வேலைக்காரனுக்கு, அவனுடைய எஜமானுடன் உள்ள உறவைக்குறித்து அறிவுரை கூறுகிறார். "கீழ்ப்படிந்திருங்கள்" என்பது, உங்களுக்குச் சொல்லப்படுவதை கவனமாகக் கேளுங்கள். பவுல், "ஒரு வேலைக்காரன் தன் எஜமான் கூறுவதற்கு கவனமாக செவிசாய்த்து கேட்கவேண்டும்" என்று கூறுகிறார்.

ஆ. வசனம் 5-8. பவுல் தொடர்ந்து கிறிஸ்தவ வேலைக்காரர்களுக்கு அறிவுரை கூறுகிறார்:

1. உங்கள் வேலைகளை மிகுந்த கவனத்துடனும், முழு பலத்துடனும் செய்ய உங்களைத் தத்தம் செய்யுங்கள்.

2. கிறிஸ்துவுக்காக உழைப்பது போலவும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதுபோலவும் சுத்தமான இருதயத்துடனும், ஒரே மனதுடனும் வேலை செய்யுங்கள்.

இ. இதற்கு காரணம் கிறிஸ்து இவ்வாறு தங்கள் எஜமான்களுக்கு சேவை செய்கிற வேலைக்காரருக்கு பலன் அளிப்பார். "மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தியவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார். அப்பொழுது அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்" (மத்தேயு 16:27, லூக்கா 19:16-19).

ஈ. வசனம் 9. "அப்படியே" ஒரு கிறிஸ்தவ எஜமான்கள், தங்கள் வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகள் யாவை? அவர்கள் தங்கள் வேலைகளை மிகச் சிறப்பாக செய்வதுபோல, எஜமான்களும் மேலானவைகளை அவர்களுக்குச் செய்யவேண்டும். இதில் மரியாதை, அனுகூலங்கள், ஒரு நாளைக் குரிய நல்ல சம்பளம் ஆகியவை அடங்கும். (யாக்கோபு 5:4).

விசுவாசிகளுக்குள் தொடர்பு (எபேசியர் 5:21-6-9)

உ. வசனம் 9. "கடுஞ்சொல்லை விட்டு விடுங்கள்" எஜமான்கள், வேலைக்காரருக்கு துன்பம் கொடுப்பதும், அபாயகரமான சூழ்நிலைகளுக்கு கொண்டு செல்வதும் கூடாது. அதாவது வேலை நீக்கம் செய்வது, சம்பளத்தை பிடித்து வைத்துக்கொள்வது, அவர்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலையை கொடுக்கத் தவறுவது, குடும்பத்திற்கு அவசியமானவற்றைக் கொடாதிருப்பது ஆகிய இக்காரியங்கள் இதில் அடங்கும். இது அவர்களுக்கு சரீரத்தில் காயமுண்டாக்குவதாகவும் பொருள்படும். ஒரு கிறிஸ்தவ எஜமான், ஒரு கிறிஸ்தவ வேலைக்காரனுக்குமிடையே பொதுவான, பொறுப்பு இருக்கிறது.

ஊ. கிறிஸ்தவ எஜமான்கள் தங்களுடைய கிறிஸ்தவ வேலைக்காரனை, தகுந்தவாறு நடத்தவேண்டும் என்பதற்கு நல்ல காரணங்கள் உண்டு. இருவருக்கும் ஒரே எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறார், அவர் பட்சபாதம் காட்டுவதில்லை. "அநியாயஞ்செய்கிறவன் தான் செய்த அநியாயத்திற்கேற்ற பலனை அடைவான்". (கொலோசெயர் 3:25). ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் கிரியைகளுக்கேற்றபடி தேவன் பட்சபாதம் இல்லாமல் நியாயந்தீர்ப்பார். (1பேதுரு 1:17).

முடிவுரை

அ. மனைவிகள் தங்கள் கணவன்மார்களுக்கு கீழ்ப்படியவேண்டும், பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும், வேலைக்காரர் தங்கள் எஜமான்களுக்கு கீழ்ப்படியவேண்டும்.

அடுத்த பக்கம் பார்ப்போமானால் கணவன்மார்கள் தங்களுடைய மனைவிகளிடம் அன்புகூரவேண்டும், பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தக் கூடாது, எஜமான்கள் வேலைக்காரர்களிடம் கடுஞ் சொற்களைப் பேசக்கூடாது. இந்த எல்லா தொடர்புகளிலும் கிறிஸ்தவர்கள் பொன் மொழியை (சட்டத்தை) பின்பற்றவேண்டும் "உனக்கு மற்றவர்கள் எப்படிசெய்ய வேண்டும் என்று விரும்புகிறாயோ, அப்படியே நீயும் மற்றவர்களுக்குச் செய்யவேண்டும்" கிறிஸ்துவின் மீதுள்ள பயபக்தியினிமித்தம், ஒருவருக்கொருவர் கீழ்ப்படியவேண்டும். இவ்வாறு நடக்கும்போது, குடும்பங்களிலும், வேலையார்க்கும் இடங்களிலேயும், ஒற்றுமையும் சமாதானமும் இருக்கும்.

ஆ. இன்று சபையில் அநேகர் உறவுகள் கறைப்பட்டதாகவும், உடைபட்டதாகவும் உள்ளது. அநேகருடைய காரியத்தில் பிரிவினையும் ஏற்பட்டுள்ளது. உங்களில் அநேகர் மற்றவர்களை நீங்கள் நடத்தவேண்டிய முறையில் நடத்தவில்லை. பரிசுத்த ஆவியானவர், இந்த மனக்காயத்தை ஆற்றவும், கணவன், மனைவி, பெற்றோர் பிள்ளைகள், எஜமான் வேலைக்காரன் ஆகிய இவர்கள் இடையே உள்ள பிரிவினைகளை சரிப்படுத்தவும் விரும்புகிறார். இன்று இவ்வாறு உங்களுக்கு செய்ய விரும்புகிறவர்கள் இங்கு இருக்கிறார்களா?. நாம் பாடும்போது உங்கள் கைகளை உயர்த்துங்கள்

விசுவாசியும் ஆவிக்குரிய போராட்டங்களும் (எபேசியர் 6:10-20)

முன்னுரை

அ. பவுல் தன்னுடைய நிருபத்தை முடிக்கும் தருணத்தில் இருக்கிறார். கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நித்திய திட்டங்களைக் குறித்து போதித்தார். அத்துடன் போதகராகவும் அப்போஸ்தலனாகவும் தன்னுடைய சொந்த அழைப்பின் மேன்மையைக் குறித்தும் கூறுகிறார். தனிப்பட்ட கிறிஸ்தவன், விசுவாசிகளின் ஐக்கியம், குடும்பவட்டாரத்தின் நெருங்கிய தொடர்பு, எஜமான்களுக்கும் வேலைக்காரருக்கும் இடையேயுள்ள தொடர்பு ஆகிய யாவற்றிற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையான அளவுகளை நிலை நிறுத்தியிருக்கிறார், சாத்தான், பிசாசுகள் ஆகியவைகளுடனும், இவற்றின் அதிகாரத்தில் உள்ள உலகத்தின் மக்களுடனும் உள்ள ஆவிக்குரிய போராட்டத்தில் இக்காரியங்கள் நடைபெற ஏதுவுண்டு. ஆகவே பவுல் கீழ்க்கண்ட காரியங்களைத் தெளிவாக விளக்குகிறார்.

1. ஆவிக்குரிய போராட்டத்தில் விசுவாசியின் எதிரி.

2. கிறிஸ்தவனின் ஆவிக்குரிய போராயுதங்கள்.

3. விசுவாசிக்கு அவசியமான ஆவிக்குரிய பலனை பெற்றுக்கொள்ளும் ஆதாரம்.

1. ஆவிக்குரிய போராட்டத்தில் விசுவாசியின் எதிரி (எபேசியர் 6:11-12).

அ. வசனம் 11-12. பவுல் விசுவாசிகளிடம் "பிசாசின் தந்திரங்களுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என்று கூறுகிறார். விசுவாசியின் முதல் விரோதி சாத்தான் மற்றும் அவனுடைய அதிகாரத்திற்கும் ஆளுகைக்கும் உட்பட்டவைகள். "அவைகள் யாரை விழுங்கலாம் (கிறிஸ்தவனை) என்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல சுற்றித்திரிகின்றன" (1பேதுரு 5:8). ஒரு சந்தர்ப்பத்தில் நல்ல தேவதூதர்கள் தேவனுக்கு முன்பாக வந்தனர். சாத்தானும் அவர்களுடன் வருகிறான். கர்த்தர் சாத்தானை நோக்கி, "எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டார். அவன், "பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித் திரிந்து வருகிறேன்" என்று பதிலளித்தான் (யோபு 1:6-7).

ஆ. "உபாயங்கள்" என்பது தந்திரங்கள். சாத்தானும் அவனுடன் சேர்ந்த பிசாசுகளும், உலகம் முழுவதிலும் உலாவிவருகின்றன. அவன் நின்று, அங்கு கடந்து செல்லும் கிறிஸ்தவனை அழிக்கக் காத்திருக்கிறான். அவனை தோற்றுப்போகச் செய்ய தந்திரங்களை பயன்படுத்துகிறான். அவைகளுக்கு சில வழிமுறைகள் உள்ளது அத்துடன், அவனை ஏமாற்றவும், சிறைப்படுத்தவும் திட்டங்களை உருவாக்குகிறான். கண்ணி வைப்பவன் மிருகங்களைப் பிடிக்க கண்ணி வைப்பது போல் அவைகள் அவனுக்குக் கண்ணி வைக்கின்றன.

இ. "துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், அந்தகார லோகாதிபதிகளோடும்" தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நின்ற சாத்தானைப் பின்பற்றின பிசாசுகள், விழுந்துபோன தூதர்கள், ஆளுகை செய்கின்றன, அதிகாரமும் செலுத்துகின்றன. அவைகள் இந்த இருண்ட உலகத்தில் தங்கள் வல்லமையை செயல்படுத்துகின்றன. கிறிஸ்து இல்லாத மக்களை அவைகள் அடக்கி தவறான வழியில் நடத்துகின்றன. பொல்லாப்புக்கும், அந்தகார சக்திகளுக்கும் காரணமாயிருக்கின்றன.

விசுவாசியும் ஆவிக்குரிய போராட்டங்களும் (எபேசியர் 6:10-20)

ஈ. பிசாசுகள் மூலமாக, "கீழ்ப்படியாமையின் பிள்ளை களிடத்தில், ஆகாயத்து அதிகார பிரபு (சாத்தான்) கிரியை செய்கிறான்" (எபேசியர் 2:2). பிசாசு, தனிநபர்கள், அரசாங்கம், பொய்யான பக்திமார்க்கங்கள், மதசார்பற்ற சங்கங்கள் மூலமாகவும், கிறிஸ்துவுக்கும் அவருடைய மக்களுக்கும் விரோதாக பிசாசுகள் கிரியை செய்கின்றன. கிறிஸ்துவுக்கும் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் விரோதமாக இருப்பவர் களின் மனதைப் படிப்படியாக பலமாகப் பற்றிக் கொள்கின்றன.

உ. "வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள்" ஆகாயமண்டலங்களிலி ருந்து இந்த பிசாசுகள், தங்களுக்குக் குறித்த பிரதேசங்கள், பட்டணங்கள், மண்டலங்கள், மற்றும் தேசங்கள் ஆகிய இவைகளின் மீது தங்கள் அதிகாரத்தை செலுத்துகின்றன. ஆகாய மண்டலங்களிலிருந்து சாத்தான், வலையின்னல் போல் ஒன்றுடன், ஒன்று தொடர்பு கொண்டு உலக முழுவதும் வியாபித்திருக்கும் பாகங்களை எல்லாம் தன்னுடைய பொல்லாத சக்திகளைக் கொண்டு அடக்கி ஆளுகிறான்.

ஊ. தானிபேலுக்கு இராஜ்ஜியங்களின் உயர்வையும் அழிவையும் குறித்த தீர்க்கதரிசன விளக்கத்தைக் கொடுக்க அனுப்பப்பட்ட தேவதூதன், பெர்சியா தேசத்தை ஆளுகை செய்த அந்தகார லோகாதிபதியினால் தடுக்கப்பட்டு, தாமதமாக வந்து சேர்ந்தான். (தானிபேல் 10:2-3, 12-13), இந்த வேதபாக எடுத்துக்காட்டு, பிசாசுகள் இந்த உலகத்தின்மேல் ஆளுகை செய்வதையும், ஆகாயமண்டலங்களிலிருந்து ஒழுங்குபடுத்தப் பட்ட அவைகளின் அதிகாரத்தையும் வெளிப்படுத்துகிறது.

எ. நாம் ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றி பெறவேண்டுமானால், மூன்று காரியங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

1. அவைகள் சக்தி வாய்ந்தவை. குறிப்பிட்ட எல்லைக்குள் அற்புதம் செய்ய வல்லமையுடையது. மாம்சமும் எலும்பும் (சரீரமுயற்சி) அவைகளின் பலத்திற்கு இணையாகாது.

2. அவை துன்மாக்கமானவை. அவைகள் இரக்கமற்றவை; கொடூரமானவை, விட்டுக்கொடுக்காது, சன்மார்க்க கொள்கைகள் பின்பற்றாது, மத சட்டங்கள் கிடையாது. நம்மைக் குறித்து கவலை கிடையாது. நம்மை அழிக்கவும் கொல்லவும் தீர்மானமான உறுதியுடன் இருப்பவை.

3. அவைகள் தந்திரமானவைகள். ஆவிக்குரிய போராட்டத்திற்கு ஆயத்தமில்லாமல் இருக்கிற ஒவ்வொரு விசுவாசியையும் "வலையில் சிக்கவைத்து" "பிடித்து", "ஏமாற்றி" "கறைப்படுத்த" அவைகள் பொல்லாத திட்டங்கள் தீட்டி, அருவெறுப்பான பாவங்களையும் போராயுதங்களால் தாக்கும் வழிமுறைகளையும் பயன்படுத்துகின்றன.

ஏ. விசுவாசிகளுக்கு விரோதமான பிசாசின் சில திட்டங்கள் யாவை?

1. சோதனைகளும், வாழ்க்கையில் துன்பங்களும் சுவிசேஷத்தினிமித்தம் உபத்திரவங்களும் அவர்கள் மீது வரும்போது தேவனைக் குற்றப்படுத்தவும், தேவனின் உண்மைத்தன்மையை சந்தேகிக்கவும் பிசாசானவன் முயற்சிக்கிறான்.

2. அவன், விசுவாசிகளை தேவனுக்கு விரோதமாக துன்மார்க்க பாவங்களை செய்து அவர்கள் மறுபடியும் தங்கள் பொல்லாத பாவசுபாவத்திற்கு அடிமைகளாக மாற சோதிக்கிறான்.

விசுவாசியும் ஆவிக்குரிய போராட்டங்களும் (எபேசியர் 6:10-20)

3. விசுவாசிகளை உலக ஆசையில் சிக்க வைத்து, கிறிஸ்துவிலிருந்தும், விசுவாசிகளின் சரீரமாகிய சபையிலிருந்தும் பிரித்துவிட முயற்சிக்கிறான். அவர்கள் சரீரபிரகாரமானவைகளுக்கும் உலகப் பொருட்களுக்கும், ஆவிக்குரிய காரியங்களுக்கு மேலாக முக்கியத்துவம் கொடுப்பதை பார்க்க ஆசிக்கிறான்.

4. விசுவாசிகள் மத்தியில், எரிச்சல், பொறாமை, பெருமை ஆகிய இவைகள் மூலம் போராட்டங்களும், பிரிவினைகளும் ஏற்படக்காரமாயிருக்கிறான்.

5. அவர்கள்மீது தன் அதிகாரத்தையும், ஆளுகையையும் மறுபடியும் செலுத்த வேண்டும் என்பதே அவனுடைய முடிவான ஆசை (1பேதுரு 5:8).

2. விசுவாசிக்கு ஆவிக்குரிய யுத்தத்திற்கான போராயுதங்கள் (6:10, 13-17)

அ. வசனம் 10. "பலப்படுங்கள்" என்றால் "தொடர்ந்து பலப்படுத்தப்படவேண்டும்". "கர்த்தரிலும், அவருடைய தத்துவத்தின் வல்லமையிலும்" ஒரு விசுவாசி கிறிஸ்துவுடன் அவனுக்குள்ள ஐக்கியத்தினால், தொடர்ந்து அற்புதமாக பலப்படுத்தப்படுகிறான். பவுல், "என்னைப் பலப்படுத்துகிறவராலே, (தொடர்ந்து) எல்லாவற்றையும் செய்ய எனக்கு பலனுண்டு" என்று கூறுகிறார் (பிலிப்பியர் 4:13) இயற்கைக்கு அப்பாற்பட்ட சாத்தான், மற்றும் பிசாசுகளுடைய சக்தியை மேற்கொள்ள கிறிஸ்துவின் அற்புத வல்லமை தேவைப்படுகிறது.

விசுவாசி எத்தனை காலம் கிறிஸ்துவின் ஐக்கியத்தில் நிலைத்திருக்கிறானோ அதுவரை அவனுக்கு இந்த வல்லமை இருக்கும்.

ஆ. வசனம் 13. "தீங்கு நாட்கள் வரும்போது" தீங்கு நாட்கள் அடிக்கடி வருவதுண்டு. தினந்தோறும் உலகத்தின் பலபாகங்களிலுள்ள அநேக விசுவாசிகளுக்கு வருகிறது. இது பகைஞனோடு ஆவிக்குரிய கடுமையான போராட்ட நேரமாகும். அவனுடைய செல்வாக்கினால் கவரப்பட்டவர்கள், அவனுடைய ஆளுகைக்குட்பட்டவர்களுக்கும் இது சம்பவிக்கிறது. இயேசு தம்முடைய சபையை எடுத்துக் கொள்ளப்போகும் நாள் நெருங்க, நெருங்க இந்தப் போராட்டம் துரிதப்படுவதுடன், இன்னும் கடுமையாகவும் இருக்கும்.

இ. "விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது" (2 தெசலோனிக்கேயர் 2:3). அநேக விசுவாசிகள், விசுவாசத்தை விட்டு விழுந்து போவார்கள். இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் ஆதிபோதனையை விட்டுவிடுவார்கள். தன்னயமான நன்மைகள் மற்றும் உலக ஆசைகள் அடிப்படையாகக் கொண்ட பொய் சுவிசேஷம் தோன்றி அது செல்வாக்குடன் பரவும் (1தீமோத்தேயு 4:1).

ஈ. வசனம் 13-14. பவுல் விசுவாசிகளிடம், "உங்கள் இடத்தில் திடமாக நில்லுங்கள்" என்று கூறுகிறார். தேவனுக்காக பெரிய காரியங்களை முடித்துவிட்டு, இப்பொழுது பின்வாங்கி விழுந்துபோகாதிருங்கள்!" பிசாசானவன் தங்கள் முன் இடைவிடாமல் நடப்பிக்கும் உபாயதந்திரங்களுக்கும், கண்ணிகளுக்கும் விசுவாசியானவன் எதிர்த்து நிற்கவேண்டும். விசுவாசிகளின் ஐக்கியத்தில், உள்ளிருந்தும், வெளியிலிருந்தும், பலவிதமான சோதனைகளும் பரீட்சைகளும் வரும்.

விசுவாசியும் ஆவிக்குரிய போராட்டங்களும் (எபேசியர் 6:10-20)

உ. இன்று நாம், "விசுவாசத்தைக் காத்துக்கொண்டு, கோட்டையை பிடித்துக்கொள்", என்று சொல்லலாம். பேதுருவும், யாக்கோபும், "பிசாசுக்கு எதிர்த்து நின்று, விசுவாசத்தில் உறுதியாய் தரித்திருங்கள்", என்று நமக்குக் கூறுகிறார்கள். "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" (1பேதுரு 5:9, யாக்கோபு 4:7).

ஊ. வசனம் 13. "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்" தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் "தரித்துக்கொள்ளுங்கள்", என்றால் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தில் குறிப்பிடப்பட்டவைகளை, பெற்று அதை பயன்படுத்தவேண்டும். இவற்றைப் பெற்று அதைப் பயன் படுத்தும்போது, பிசாசுடன் எதிர்த்துப் போராட்டத்தின் மத்தியில் விசுவாசி எதிர்த்து நின்று அசைக்கப்படாமல் இருக்க முடியும்.

எ. வசனம் 14-17. ஒரு கிறிஸ்தவனின் சர்வாயுத வர்க்கத்தில் கீழ்க்கண்டவைகள் உள்ளது:

1. அவனுடைய இடுப்பில் சத்தியம் என்னும் கச்சை. அவன் தன் கிரியைகளில் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கிறிஸ்துவின் மூலமாக தேவனோடு சரியான தொடர்பில் நிலைத்திருக்கிறான். அவன் தன் இருதயத்திற்குள் மறைத்து வைத்திருக்கும், தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றி அதை பயிற்சி செய்ததினால், அவனுடைய நடத்தை, தோற்றம், மற்றும் கிரியைகள் கிறிஸ்துவைப்போல் ஆகிறது.

2. கால்களில் ஆயத்தம் என்னும் பாதரட்சைகளை அணிந்து. - சமாதானத்தின் சுவிசேஷம் அவனுக்கு திடமாக நிற்கத்தக்க பலனைக் கொடுக்கிறது. எதிரியானவன் ஒவ்வொரு முறை தோன்றி தன் திட்டங்களை அவனுக்கு விரோதமாக செலுத்தும்போது, அவன் எதிர்த்து நிற்க முடிகிறது.

3. விசுவாசம் என்னும் கேடகம் - சுவிசேஷத்தினிமித்தம், சோதனைகளும் பரீட்சைகளும், உபத்திரவங்களும் தன் வாழ்க்கையில் நேரிட்டாலும், தேவன் பேரிலும் கிறிஸ்துவின் மீதும் சார்ந்து விசுவாசத்தைக் காத்துக்கொள்கிறான்.

4. இரட்சண்யம் என்னும் தலைச்சீராவும் தன்னை தேவன் பாதுகாத்து, பரிவுடன் நடத்துவதை சந்தேகித்த தருணங்களையும், பாவங்களையும், உடனுக்குடன் அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் இரட்சிக்கும் வல்லமையில் எப்பொழுதும் நிலைத்திருக்கிறான். அவன் நித்திய ஜீவனைக் குறித்தும், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவதைக் குறித்தும் திடமான நம்பிக்கையில் நிலைத்துள்ளான்.

5. ஆவியின் பட்டயம் - அவன் தேவனுடைய வார்த்தையை அறிந்து, விளங்கி அதன்படி வாழ்க்கை நடத்துகிறான். அவன் தேவனுடைய வார்த்தையினால் பிசாசை மேற்கொள்கிறான்.

ஏ. இவ்வாறுதான் ஒரு விசுவாசி (சபை அல்லது கிறிஸ்தவ சங்கம்) "உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும், நீ குற்றப்படுத்துவாய்" (ஏசாயா 54:17), "தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி..." (2கொரிந்தியர் 10:4-5) "வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபேசியர் 6:13).

விசுவாசியும் ஆவிக்குரிய போராட்டங்களும் (எபேசியர் 6:10-20)

3. விசுவாசிக்கு ஆவிக்குரிய போராட்டத்திற்குரிய ஆதாரம் (6:18-20).

அ. வசனம் 18. "ஆவியில் ஜெபிப்பதே" சபையிலுள்ள விசுவாசிகளுக்கு, ஆவிக்குரிய போராட்டத்திற்கு மிகவும் வல்லமையான ஆதாரம். ஒரு விசுவாசி ஆவியில் ஜெபிப்பது, கொள்கையின் அடிப்படையில் செய்கிறான்.

1. ஆவியில் ஜெபிப்பது ஆவிக்குரிய ஆயுதம் (எபேசியர் 6:18), வானமண்டலங்களில் உள்ளவைகளோடும் அந்தகார உலகத்திலுள்ள சக்திகளோடும், பொல்லாத அதிகாரிகளோடும் நமக்கு போராட்டம் உண்டு. (எபேசியர் 6:12). ஆகவே, ஆவிக்குரிய எதிரிகளோடு போராட ஆவிக்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்தவேண்டும்.

2. நாம் பலவீனர் (ரோமர் 8:26-27). காரியங்களின் உண்மைத்தன்மையை குறைந்த, மங்கிய, கடினமான பொருளின் வழியாகக் காண்பது போல்தான் பார்க்கிறோம். நாம் ஒரு பகுதியை மட்டுமே அறிந்துள்ளோம் (1கொரிந்தியர் 13:9,12). ஆகவே பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். காரியங்களின் முழுதன்மையையும் அறிந்தவர். அவர் பிதாவின் தன்மையை உடையவர். நாம் ஆவியில் ஜெபிக்கும்போது, அவர், பிதாவின் பூரண சித்தத்திற்கேற்றாற்போல், நமக்காகப் பரிந்து பேசுகிறார்.

3. ஆவியில் ஜெபிப்பது, மற்றொரு முறையில் தேவனைத் துதித்து, நன்றி கூறுவதாகும் (1கொரிந்தியர் 14:16-17). துதிப்பது இன்னொரு வழியில் ஆவியில் போராடுவதாகும்.

4. சொந்த கருத்துக்களும், தப்பெண்ணெங்களும், நாம் ஆவியில் ஜெபித்து, தேவனோடு தொடர்பு கொள்ளும்போது, தடையாக இராது. ஏனெனில் நாம் ஆவியில் ஜெபிப்பது நமது மனதினால் விளங்கிக்கொள்ள முடியாது. அது நமது மனதை கடந்து சென்றுவிடுகிறது (1கொரிந்தியர் 14:14).

5. ஆவியில் ஜெபிப்பது, விசுவாசத்தை உருவாக்குகிறது. (யூதா 1:20) நாம் ஆவியில் ஜெபிக்கும்போது நன்மை பெறுகிறோம். நாம் அறிவுறுத்தப்படுகிறோம். சன்மார்க்கமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் முன்னேற்றமடைகிறோம். நாம் பிரகாசிக்கப்பட்டு, நிலைநிறுத்தப்படுகிறோம். நாம் விசுவாசத்தின்மீது கட்டப்படுகிறோம்.

6. ஆவியில் ஜெபிப்பது, பயங்கரமான உபத்திரவத்தின் மத்தியிலும், சுவிசேஷச் செய்தியை பயமின்றி மிகுந்த தைரியமாக அறிவிக்க தேவையான தெய்வீக பலத்தைக் கொடுக்கிறது (எபேசியர் 6:19-20, அப்போஸ்தலர் 4:31). அதனால்தான் பவுல், ஆவியில் தனக்காக ஜெபிக்கும்படி சபைகளை கேட்டுக்கொண்டார்!

ஆ. ஜாக்கி புல்லிங்கர் **(Jackie pullinger)** (ஹாங்காங் பட்டணத்தில் போதை பொருட்களுக்கு அடிமைப்பட்டவர்கள் மத்தியில் உழைக்கும் ஒரு நற்செய்தி பணியாளர்) என்ற பெண்மணி, தன் "வலுசர்ப்பம் விரட்டப்படுவது" **(chasing the Dragon)** என்ற புத்தகத்தில், எவ்வாறு, போதைப்பொருட்களுக்கு அடிமைப்பட்டவர்கள், இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஆவியில் ஜெபிக்கும்போது விடுவிக்கப்பட்டனர் என்று கூறுகிறார். அவர்களுக்கு போதைக்குரிய அறிகுறி நீங்கும் வரை ஆவியில் ஜெபிக்கின்றனர் (மற்றவர்களும், அவர்களுடன் சேர்ந்து ஆவியில் ஜெபிக்கின்றனர்).

விசுவாசியும் ஆவிக்குரிய போராட்டங்களும் (எபேசியர் 6:10-20)

அவளுடைய ஒவ்வொரு மனந்திரும்பிய நபரும், இயேசுவின் மீது விசுவாசம் வைத்த உடனடியாகத்தானே, பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று கூறுவதற்கு இதுவே காரணம்.

இ. நான் ஆவியில் ஜெபிக்கும்போது, எனக்குத் தெரிந்த மொழியில், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை, ஒரு கவனிக்கவேண்டிய காரியம், ஒரு மனிதன் அல்லது சபை அல்லது தேசம் ஆகிய இவைகளைக் குறித்து தேவனோடு பேசுவேன். அதன்பின், நான் தற்போது கூறியவைகளைக் குறித்து பரலோகப்பிதாவிடம், நான் அறிந்த மொழியில் ஆவியில் ஜெபிக்க துவங்குவேன்.

ஈ. வசனம் 18. "எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோ விண்ணப்பத்தோடும்". விசுவாசிகள், வாழ்க்கையில் நடந்த எல்லா நிகழ்ச்சிகளையும் குறித்து ஆவியில் ஜெபிக்க வேண்டும்.

1. நீ எங்கு இருந்தாலும்.

2. அது எந்த நேரமாக இருப்பினும்

3. உன்னைச் சுற்றி எது நடந்து கொண்டிருந்தாலும். ஜெபிப்பதற்கு தடையில்லை. விசுவாசி என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் அதில் மனதைச் செலுத்தி தொடர்ந்து செய்ய முடியும், ஏனெனில் ஜெபம் மனதைக் கடந்து ஆவியுடன் தொடர்புடையது.

உ. வசனம் 18-19. "சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதல் (ஆவியில்).

ஒரு தனி கிறிஸ்தவன் தன் சொந்த ஆவிக்குரிய நன்மைகளை மட்டுமின்றி, போராட்டத்திலிருக்கும் உலக சபைகளையும், கிறிஸ்துவுக்குள் தனக்குள்ள எல்லா சகோதர சகோதரிகளையும் அவ்வாறே நினைவு கூரவேண்டும்.

1. "உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடம் அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறது" என்று பேதுரு நமக்கு ஞாபகப்படுத்துகிறார். (1பேதுரு 5:9).

2. தீமோத்தேயு மூலமாக நாம் இராஜாக்கள் மற்றும் விசுவாசிகள் வாழும் சமுதாயத்திலுள்ள அதிகாரிகள் உட்பட மற்றும் யாவருக்காகவும் மன்றாடி ஜெபிக்க வேண்டும் என்று பவுல் வற்புறுத்திக் கூறுகிறார். (1தீமோத்தேயு 2:1).

முடிவுரை

அ. சாத்தானோடும், அவனுடைய ஏராளமான பிசாசுகளுடனும், ஒவ்வொரு விசுவாசியும், சிலர் அடிக்கடி, மேலும் கடுமையான ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் தான் பரிசுத்த ஆவியானவர், இக்காரியத்தைக்குறித்து அறிவுரை கொடுத்துள்ளார். அவர் நமக்குக் கூறுவதாவது:-

1. சாத்தானோடும், அவனுடைய பிசாசுகளின் கூட்டத்தோடும், மற்றும் இவ்வுலகத்தில் அவனுடைய ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் கீழ் உள்ள மக்களோடும் உங்களுக்குப் போராட்டம் உண்டு.

2. அவர்கள் எதிரியோடு ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும்போது, அவர்கள் விழுந்து போகாமல் நிற்க, விசுவாசிகளுக்கும், சபைகளுக்கும்,

விசுவாசியும் ஆவிக்குரிய போராட்டங்களும் (எபேசியர் 6:10-20)

பக்திமார்க்க சங்கங்களுக்கும்,"இருக்க வேண்டிய" "செய்யவேண்டிய" சில காரியங்கள் உண்டு.

அ. கர்த்தருக்குள் அவர்களுடைய பலன்.

ஆ. தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தில் விவரிக்கப்பட்ட காரியங்களை தொடர்ந்து "உடையவர்களாகவும்" "செய்பவர்களாகவும்" இருக்கவேண்டும்.

இ. எல்லா சமயங்களிலும், சகலவிதமான வேண்டுதலோடு, நமக்காகவும் அவ்வாறே மற்ற விசுவாசிகளுக்காகவும், ஆவியில் ஜெபிக்கவேண்டும்.

ஆ. இக்காரணத்தினால், மூன்று காரியங்களைச் செய்ய நான் உங்களுக்கு தருணம் கொடுக்கிறேன்:

1. உங்களுடைய பலனை சீர்தூக்கிப் பாருங்கள். யாரை நீங்கள் சார்ந்துள்ளீர்கள்? உங்கள் மீதும், உலகத்தின்மீதுமா? அல்லது கிறிஸ்துவின் மேலா?

2. உங்களையே ஆராய்ந்து பாருங்கள். தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளவைகளை பெற்று, அதன்படி செய்கிறீர்களா?

3. தற்போது நீங்கள் அவ்வாறு செய்யாமல் இருப்பீர்களாகில், உங்களுக்காகவும், மற்றும் சபையிலுள்ள விசுவாசிகளுக்காகவும் எல்லாக் காலங்களிலும் ஜெபிக்க துவங்குங்கள்.

ஆவியில் ஜெபிப்பதின் பலன்கள் (எபேசியர் 6:18-20)

முன்னுரை

அ. ஒரு விசுவாசி ஆவியில் ஜெபிக்கும்போது, அவன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறும்போது, பெற்றுக்கொண்ட, அவன் கற்றுக்கொள்ளாத மொழியில் அவ்வாறு ஜெபிக்கிறான். அவன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறும்போது அவனுக்குக் கொடுக்கப்பட்ட மற்றும் கூடுதலான அவன் கற்றுக்கொள்ளாத மொழிகளிலும் அவன் ஜெபிக்கலாம். நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிற காரியம் இதுதான்: ஒரு விசுவாசி ஆவியில் ஜெபிக்க வேண்டுமானால், முதலில் அவன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்று, கற்றுக்கொள்ளாத மொழியில் பேசுவதாகிய வெளிப்படையான அடையாளத்தைப் பெற்றிருக்கவேண்டும்.

ஆ. ஆகவே நீங்கள் பார்க்கப்போகிறதாகிய ஆவியில் ஜெபிப்பது என்பது:-

1. சாத்தானுக்கு எதிரான போராட்டத்தில், இது மிகவும் தேவையான ஆவிக்குரிய போராயுதமாகும்.

2. ஜெபத்திற்கு சரியான பதிலை கொடுக்கும்.

3. சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கு தேவையான தெய்வீக அதிகாரத்தைக் கொடுக்கும்.

4. கிறிஸ்துவுக்குள் உன்னுடைய விசுவாசத்தைக் கட்டும்.

1. ஆவியில் ஜெபிப்பது, ஆவிக்குரிய போராயுதம். (எபேசியர் 6:18).

அ. எபேசியர் 6:13-18 வசனங்களில், நாம் நம் விரோதியோடு (சாத்தானும் அவனுடைய பிசாசுகளின் சேனை). போராடுவதற்கு பயன்படுத்தவேண்டிய ஆவிக்குரிய போராயுதங்களைக் குறித்தபட்டியலை பவுல் அப்போஸ்தலன் தந்துள்ளார். கடைசியானதும், ஒரு சமயம் மிக முக்கியமானது "ஆவியில் ஜெபிப்பது". ஆகவே தேவனுடைய ஆவிக்குரிய வீரர்கள், ஆவியில் ஜெபிக்கும் பலனைப் பெற்றுக்கொள்ள, பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியமாகும்.

ஆ. நீ பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறும்போது, அவர் பேச உதவி செய்கிற நீ கற்றுக்கொள்ளாத அதே மொழியைத்தான், நீ ஆவியில் ஜெபிக்கும்போது பயன்படுத்துகிறாய்.. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றபின், நீ ஜெபிக்கும் போதும், துதிக்கும்போதும் (ஆவியில் பாடுவது) இந்த மொழியை நீ வெளிப்படுத்தலாம்.

இ. "ஆவியில் ஜெபியுங்கள்" பகைஞனோடு உள்ள போராட்டம் ஆவிக்குரியது இந்தப் போராட்டம் ஆவிக்குரிய ஆட்சி எல்லைக்குள் நடைபெறுகிறது. ஆகவே நாம் வெற்றிபெற வேண்டுமாயின் ஆவிக்குரிய போராயுதங்களைப் பயன்படுத்த வேண்டும். ஒரு விசுவாசி, தன் சொந்த பலத்தினாலும், மனிதர்களின் ஞானம் சக்தியினாலும், பொல்லாத வல்லமைகளுக்கெதிராக போராடி வெற்றி பெற முடியாது. அவன் எப்படியாவது தேவன் இந்தப் போராட்டத்தில் பங்குபெற, அவர் உதவியை பெறவேண்டும் ஆவியில் ஜெபிப்பது, இதைப் பெற்றுக் கொள்ள ஒரு முறையாகும்!

ஈ. கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் பவுல், "நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல.

ஆவியில் ஜெபிப்பதின் பலன்கள் (எபேசியர் 6:18-20)

எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்திற் கேற்றவைகளாயிராமல், விரோதியினுடைய அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவை களாயிருக்கிறது" (2கொரிந்தியர் 10:3-4).

உ. நான் ஆவியில் ஜெபிப்பதற்குமுன், ஆவியானவர் என் மீது அசைவாடும் வரை நான் காத்திருக்க வேண்டி உள்ளது என்று என்னிடம் சில மக்கள் கூறுகின்றனர். இது தொழுதுகொள்ளும்போது ஆராதனைகளில், பல மொழி வரம் வெளிப்படுத்தப்பட்டு அதன் மொழிபெயர்ப்பு அவசியமான தருணத்தில் இது நடப்பது சரியானதே. ஒரு உதவி தேவையான சூழ்நிலை, அல்லது ஒரு நபர், என் ஞாபகத்தில் மனதில் வரும்போது நான் ஆவியில் ஜெபிக்கின்றேன். எனக்கு இதற்கு விசேஷித்த அபிஷேகம் அவசியமில்லை.

ஊ. பரிசுத்த ஆவியானவர் இடைவிடாமல் என்னுள் வாசம் பண்ணுகிறார். நான் இயேசுவில் விசுவாசம் வைத்தது முதல் அவர் என்னில் வாசம் பண்ணுவதை தெரிந்து கொண்டார். நான் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற போது, நான் பெற்றுக்கொண்ட அபிஷேகம் எப்பொழுதும் என்னில் இருக்கிறது; நான் பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானம் பெற்றபோது, அவர் நான் பேச உதவிய, கற்றுக் கொள்ளாத மொழியை, எந்த நேரத்திலும் பயன்படுத்த முடியும். நான், அந்த மொழி அல்லது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றதிலிருந்து அவர் மற்றொரு கற்றுக் கொள்ளாத மொழியையும் கொடுத்திருக்கலாம், இம் மொழிகளைப் பேச அவர் எப்பொழுதும் என்னில் வாசம்பண்ணி உதவி செய்கிறார்!.

எ. ஆகவே சாத்தானை எதிர்த்து போராட "ஆவியில் ஜெபிக்கும்" ஆவிக்குரிய போராயுதத்தை நான் பயன் படுத்துகிறேன். சாத்தானோடும் அவனுடைய பிசாசுகளின் சேனையோடும் நெருக்கமாக, கையோடு கை கலந்து, போராடுவதில் நான் பயன்படுத்துகிறேன். அவன் என்னை தாக்கும் ஒவ்வொரு நேரமும், இவற்றின் மூலம் நான் திடமாக நிற்க முடிகிறது.

2. ஆவியில் ஜெபிப்பது சரியான பதிலையும், தெய்வீக தைரியத்தையும் கொடுக்கிறது. (எபேசியர் 6:19-20).

அ. வசனம் 18-20. இந்த வசனங்கள், ஆவியில் ஜெபிப்பதைப்பற்றியதாகும். பவுல் திட்டமாக, "ஆவியில் ஜெபியுங்கள்" என்று கூறுகிறார்.

1. எல்லாக் காலங்களிலும்-இடைவிடாமல்

2. சகலவிதமான வேண்டுதல்களோடும் ஜெபம்பண்ணி ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டவர்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும்.

3. எல்லா பரிசுத்தவான்களுக்காகவும் கிறிஸ்துவுக்குள் நமது சகோதர, சகோதரிகளின் வேண்டுதல்களுடனும்.

4. எனக்காகவும்- சுவிசேஷத்தின் இரகசியத்தை தைரியமாய் அறிவிக்க - அதைப்பற்றிப்பேச வேண்டியபடி தைரியமாய்ப் பேச- இது சுவிசேஷத்தை, உறுதியுடனும், நம்பிக்கையுடனும், யாவரும் அறிய, இருக்கிற வண்ணமாக, எளிதில் விளங்கும்படியாக, அறிவிக்கவேண்டும் என்று பொருள்படும்.

ஆவியில் ஜெபிப்பதின் பலன்கள் (எபேசியர் 6:18-20)

ஆ. கேட்டுக் கொண்டதினிமித்தமாக மட்டுமின்றி, இதைக்குறித்து நாம் ஆவியில் ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம். இந்த வேண்டுகோள்களுக்கு என்ன ஜெபிக்க வேண்டும் அல்லது எப்படி ஜெபிக்கவேண்டும் என்று நமக்கு தெரியாது. நாம் நிழலாட்டமாய், மங்கலாக, காரியங்கள் மறைக்கப்பட்டதாகவே காண்கிறோம். நாம் குறைந்த அறிவுள்ளவர்கள். (1கொரிந்தியர் 13:9,12). ஆகவே நாம் நம் மனதிற்கு அப்பால் கடந்து, இந்த எல்லா வேண்டுதல்களுக்காகவும் பிதாவின் பரிபூரண சித்தப்படி ஜெபிக்கவேண்டும்.

இ. நமக்கு பரிசுத்த ஆவியானவரின் உதவிதேவை. அவருக்கு எல்லா காரியங்களும் தெரியும். அவர் பிதாவின் மனதை உடையவர். நாம் ஆவியில் ஜெபித்துக்கொண்டிருக்கும் போது, அவர்பிதாவின் பரிபூரண சித்தத்திற்கேற்றவாறு, நாம் வேண்டிக்கொள்பவைகளுக்காக பரிந்து மன்றாடுகிறார். "ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார்," (ரோமர் 8:27) என்று வேதம் கூறுகிறது.

ஈ. மற்ற விசுவாசிகள் உறுதியுடனும், சுயாதீனமாகவும், வெளிப்படையாகவும், எளிதில் விளங்கும்படியாகவும் கிறிஸ்துவுக்கு சாட்சிகூற, நீங்கள் ஜெபிக்கவேண்டியதின் அவசியத்தை பார்க்கிறீர்களா? அநேகர் சுவிசேஷத்தை அறிவிக்கப்பயன்படுவதாக என்னிடம் கூறுகின்றனர். அவர்கள் மற்றவர்களுக்கு இயேசுவைப்பற்றிக்கூற மன உறுதி கிடையாது. அவர்கள் உதவிகேட்க முன்வருகின்றனர். இந்த நபர்களுக்கு முன்னால் வருவதற்குத் தருணம் கொடுக்கப்படும்.

இந்த ஆராதனையின் முடிவில் மற்ற பரிசுத்தவான்கள் ஆவியில் உங்களுக்காக ஜெபம் செய்வார்களாக!.

3. ஆவியில் ஜெபிப்பது விசுவாசத்தைக் காட்டும் ஒரு செயல்:-

அ. "உங்களைக் கட்டி எழுப்புங்கள்" "கட்டுவது" என்பது ஒன்றின் மீது கட்டுவது, அதிகம் பலப்படுபவரை ஒரு அடுக்கிற்கு மேல் அடுத்த அடுக்காக சேர்ப்பது என்று பொருள்படும். இது குனிந்து நிற்கும் ஒருவன், நிமிர்ந்து நேராக நிற்பதை பார்ப்பதற்கும் ஒத்ததாகும். ஒரு விசுவாசி இவ்வாறு கிரியை செய்பவராக இருக்க வேண்டும் என்று யூதா நமக்குக் கூறுகிறார்.

ஆ. "உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல்" நாம், நமது விசுவாசத்தில் உயரும்படியாக நம்மைக் கட்டவேண்டும். "விசுவாசம்" என்பது கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கை, அதாவது உலகமுழுவதின் மேலும் வரவிருக்கிற கோபாக்கினையினின்று இரட்சிப்பார் என்று அவர் மீது சார்ந்து இருப்பது என்று பொருள்படும். கிறிஸ்து எப்பொழுதும் நம் கூடவே இருக்கிறார், இக்கட்டான வேளைகளில் நமக்கு உதவிசெய்வார் என்ற திடநம்பிக்கையுடன் இருப்பது என்றும் பொருள்படும்.

இ. "பரிசுத்த ஆவியில் ஜெபியுங்கள்", இது கீழ்கண்ட பலனைத் தரும்:

1. ஆவிக்குரிய வல்லமை
2. ஆவியில் நிமிர்ந்து நிற்க
3. கிறிஸ்து எப்பொழுதும் நம்முடன் இருந்து அவசியம் நேரிடுகிற வேளைகளில் உதவி செய்வார் என்ற விசுவாசம், ஆவியில் ஜெபிப்பதின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்று யூதா கூறுகிறார்.

ஆவியில் ஜெபிப்பதின் பலன்கள் (எபேசியர் 6:18-20)

ஈ. அதிக விசுவாசம் தேவைப்படும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக சென்ற பிரயாணங்களில் பவுல் அநேக சோதனைகளையும் பரீட்சைகளையும் சகித்தார். கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் இவைகளைக் குறித்த நீண்ட பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது (2 கொரிந்தியர் 11:24-29) அவர் இடைவிடாமல் ஆவியில் ஜெபித்துக் கொண்டிருந்ததினால், அவரால் இந்த சோதனைகளையும், பரீட்சைகளையும் சகித்துக்கொள்ளக் கூடியவராயிருந்தார்.

உ. கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில், அவர்களிடம் அவர் இவ்வாறு கூறுகிறார், "நான் அதிகமாய் பாஷைகளைப் பேசுகிறேன்" (1கொரிந்தியர் 14:18). அவர் பெரிய விசுவாசமுள்ள ஒரு மனிதன். ஏனெனில் அவர் எல்லாக் காரியங்களுக்காகவும் இடைவிடாமல் ஆவியில் ஜெபித்துக் கொண்டிருந்தார். அவர் ஆவிக்குரிய அதிக வல்லமையையும், திடநம்பிக்கையும் பெற்றிருந்தார். இக்கட்டான நேரங்களில் அவருக்கு உதவி செய்ய கிறிஸ்து தன்னில் இருக்கிறார் என்று அவர் அறிந்திருந்தார்.

ஊ. நாங்கள் அறிந்த, போதைப்பொருட்களுக்கு அடிமைப்பட்டிருந்தவர்களுக்கான புதுவாழ்வு செயல்திட்ட மையத்தை ஹாங்காங் பட்டணத்தில் நிருவியவர், ஒவ்வொரு மனந்திரும்பிய நபரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றிருக்கவேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தார். புதிதாக மனந்திரும்பியவர்களுக்கு, போதைப் பொருட்களை மறுபடியும் பயன்படுத்த தூண்டும் பெரிய சோதனையும், போதைப்பொருளை நிறுத்தியதினால் அதிக வேதனையில் கஷ்டபடவேண்டிய நிலை ஏற்படும். அவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்றிருப்பதினால், இக்காரியங்களுக்காக அவர்களால் ஆவியில் ஜெபிக்க முடியும். ஆகவே அவர்கள் சோதிக்கப்படும்போதும், நிறுத்தியதால் ஏற்படும் அறிகுறிகள் தோன்றும்போதும், அவர்கள் ஆவியில் ஜெபிக்கின்றனர். அவர்களுடன் ஆவியில் ஜெபிப்பவர்களும் அவர்களுடன் இருக்கின்றனர். இதனால்தான் அவர்களுடைய விசுவாசம் கட்டப்படுகிறது. சோதனைகளும், நிறுத்தியதால் ஏற்படும் அறிகுறிகளும் நீங்கி விடுகிறது.

எ. நாம் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நாம் பெற்று, ஆவியில் ஜெபிக்கக் கூடுமானால், பவுலைப் போலவும், ஹாங்காங் பட்டணத்திலுள்ள புதிதாக மனந்திரும்பியவர்கள் போலவும், நாம் ஆவிக்குரிய வல்லமையுடனும், கிறிஸ்து நமக்குள் எப்பொழுதும் இருக்கிறார் என்று அறிந்தும் வாழுவோம். நீ பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறாமலும், ஆவியில் ஜெபிக்கக்கூடாத வனுமாயிருப்பாயானால் இன்று பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறமுடியும். கிறிஸ்து இங்கு இருக்கிறார். அவர் இக்காரியத்தை உனக்குச் செய்ய விரும்புகிறார். நீ ஆவியில் ஜெபிக்க வேண்டியது அவசியம் என்றும், நீ விசுவாசத்தில் கட்டப்படவேண்டும் என்றும் அவர் அறிவார், ஏனெனில் நீ அநேக பரீட்சைகளையும், சோதனைகளையும், மற்ற யாவரையும் போல எதிர்த்து போராட வேண்டிய அவசியம் நேரிடும்.

முடிவுரை

அ. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் ஆவியில் ஜெபிக்க முடியும். அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறும் போது பேச முடிந்த, கற்றுக்கொள்ளாத மொழியில் அவர்களால் ஜெபிக்கமுடியும். இப்பொழுது,

ஆவியில் ஜெபிப்பதின் பலன்கள் (எபேசியர் 6:18-20)

அவர்களுக்கு அது தெரிந்ததினால், ஆவியில் ஜெபிக்கமுடியும்.

1. இது சாத்தானுக்கு எதிரான போராட்டத்தில் வெற்றிதரக்கூடிய ஆயுதம்.

2. ஜெபத்திற்கு சரியான பதிலைக் கொடுக்கும்.

3. சுவிசேஷத்தை தைரியமாகப் பிரசங்கிக்க உதவிசெய்யும்.

4. மகா பரிசுத்தமான விசுவாசத்தில் அவர்களைக் கட்டும்.

ஆ. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறாதவர்கள், இக்காரியத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு இயேசுவிடம் கேட்பதற்கு ஒரு தருணம் கொடுக்க நான் இப்பொழுது விரும்புகிறேன். நீங்கள் ஆவியில் ஜெபிக்கவேண்டும் என்பது எவ்வளவு அவசியம் என்று எனக்குத் தெரியும். மற்றும் ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றால் மட்டுமே இது நடக்கக் கூடும் என்றும் நான் அறிவேன்.

இ. இயேசுவுக்கு சாட்சி கூறுவதற்கு அதிக தைரியமும், திட நம்பிக்கையும், தனக்கு தேவை என்று அறிந்தவர்களுடன் சேர்ந்து நாம் ஜெபிக்க விரும்புகிறோம். இது அநேக கிறிஸ்தவர் களுக்கு சிக்கலான ஒரு காரியம் என்பதை நாம் அறிவோம்